# Economic Thoughts

**Mrs. M. N. F. Washima Rafiyan**

Published By
Centre for External Degrees and
Professional Learning
South Eastern University of Sri Lanka

# ECM 10032

# Economic Thoughts

# பொருளாதார சிந்தனைகள்

# பொருளடக்கம்


பொருளடக்கம்......................................................................................iii

**அத்தியாயம் 01**........................................................................................1

பொருளாதாரச் சிந்தனை வரலாறு .......................................................1

1.1 பொருளாதாரச் சிந்தனை வரலாறு: அறிமுகம்....................3

1.2 பொருளாதார சிந்தனை வரலாற்றை கற்பதன் முக்கியத்துவம்........................................................................4

1.3 பொருளாதா சிந்தனை வரலாற்றின் ஆய்வு முறைகள்.......5

1.4 பொருளாதார வரலாற்றின் பிரதான காலப்பகுதிகள் ...........5

**அத்தியாயம் 02**........................................................................................8

புராதான பொருளாதார சிந்தனைகள்....................................................8

2.1 புராதன பொருளாதாரச் சிந்தனை வரலாறு......................10

2.2 யூதர்களின் பொருளாதாரச் சிந்தனைகள்..........................10

2.3 கிரேக்க பொருளாதாரச் சிந்தனைகள்...............................11

2.4 உரோமர்களின் பொருளாதாரச் சிந்தனை.........................14

2.5 புராதன இந்தியப் பொருளாதாரச் சிந்தனைகள்................15

2.6 புராதன சீன பொருளாதாரச் சிந்தனை .............................16

**அத்தியாயம் 03**......................................................................................19

இடைக்கால பொருளாதார வரலாறு: இஸ்லாமிய பங்களிப்பு...........19

3.1 அரபு - இஸ்லாமிய சிந்தனை..........................................21

3.2 அபு ஹமித் அல்-கசாலி...................................................22

3.3 இபின் கல்தூன் ................................................................23

**அத்தியாயம் 04**........................................................................27
ஐரோப்பிய பொருளாதார வரலாறு....................................................27
4.1 செண்ட் தாமஸ் அக்வினாஸ் (Saint Thomas Aquinas)......29
4.2 வணிகவாதம்..................................................................34
4.2.1 அறிமுகம் ..................................................................34
4.2.2 வணிகவாத கருத்துக்கள் தோன்றியமைக்கான காரணங்கள்...........................................................................35
4.2.3 வணிகவாதத்தின் பிரதானமான சிந்தனைகள் ................37
4.2.4 வணிகவாதத்தின் மீதான விமர்சனங்கள் .......................40

**அத்தியாயம் 05**........................................................................43
5.1 அடம் ஸ்மித் (1723 – 1790)............................................45
5.1.1 வாழ்க்கை வரலாறு .......................................................45
5.1.2 அடம்ஸ்மித்தின் சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்கள்...........................................................................45
5.1.3 அடம்ஸ்மித்தின் பொருளாதார சிந்தனைகள்....................46
5.1.4 அடம்ஸ்மித் மீதான விமர்சனம் .......................................52
5.2 டேவிட் ரிக்கார்டோ (David Ricardo 1772 -1823) ............53
5.3 ஜெரிமி பென்தம் Jeremy Bentham (1748 - 1832)...........56
5.3.1 பயன்பாட்டுக் கொள்கை ................................................56
5.3.2 விமர்சனம் ...................................................................57

**அத்தியாயம் 06**........................................................................61
எல்லை நிலைப் புரட்சி....................................................................61
6.1 ஆஸ்திரியக் குழு (Austrian School)................................63
6.1.1 பொருளாதார சிந்தனைகள்.............................................63
6.2 வில்லியம் ஸ்டேன்லி ஜேவோன்ஸ் (William Stanley Jevons) (1835-1882)...................................................................64
6.2.1 அறிமுகம்.....................................................................64
6.2.2 பொருளாதார சிந்தனைகள்.............................................65

6.3 லியோன் வால்ராஸ் (Leon Walras) (1834-1910) ............. 67
6.3.1 அறிமுகம் ............................................................ 67
6.3.2 பொருளாதார சிந்தனைகள் ............................................. 67
6.4 கார்ல் மெங்கர் (Carl Menger) (1840-1921) ...................... 69
6.4.1 அறிமுகம் ............................................................ 69
6.4.2 பொருளாதார சிந்தனைகள் ............................................. 70

**அத்தியாயம் 07** ......................................................... 76
நவ பழம் பொருளியல் ........................................................ 76
7.1 நவ பழம் பொருளியல் ................................................... 78
7.2 ஆல்.்.பிரட் மார்ஷல் .................................................... 80
7.3 ஆல்.்.பிரட் மார்ஷல் பொருளாதார பங்களிப்புகள் ............ 81
7.4 விமர்சனங்கள் ........................................................... 83

**அத்தியாயம் 08** ......................................................... 86
8.1 கெய்ன்ஸியக் கோட்பாடு .................................................. 88
8.2 உலகப் பெருமந்தம் ....................................................... 88
8.3 கெய்ன்ஸியப் பொருளியலின் பண்புகள் ............................ 89
8.4 கெயின்ஸின் பேரிணப் பொருளாதார கோட்பாடுகள் ......... 91

**அத்தியாயம் 09** ......................................................... 98
பணவியல் ...................................................................... 98
9.1 பணவியல் ................................................................ 100
9.2 மில்டன் பிரைடுமேன் 1912 (Milton Friedman) ............... 100
9.2.1 மில்டன் ப்ரைட்மேனின் முக்கிய பொருளாதார சிந்தனைகள் ........................................................... 101

**அத்தியாயம் 10**........................................................................105
நிறுவனப் பொருளாதாரம்........................................................................105
10.1 நிறுவனப் பொருளாதாரம்............................................107
10.1.1 நிறுவனப் பொருளாதாரத்தின் கொள்கைகள் ............107
10.2 வெப்லன் (Veblen) ..................................................107
10.3 காமன்ஸ் (Commons) (1895 -1945) ...............................110
10.4 மிட்செல் (Mitchell 1874-1948).......................................111

**அத்தியாயம் 11**........................................................................115
பின்வந்த கெயின்சியப் பொருளாதாரம் ............................................115
11.1 அறிமுகம்.........................................................117
11.2 பின்வந்த கெயின்ஸிய பொருளியலாளர்கள் ...................119
11.3 விமர்சனங்கள் ..................................................119

**அத்தியாயம் 12**........................................................................124
பால் ஏ. சாமுவேல்சன்........................................................................124
12.1 பால் ஏ. சாமுவேல்சன் (Paul A. Samuelson -1915): அறிமுகம் ..................................................................126
12.2 சாமுவேல்சனின் பங்களிப்புக்கள்....................................126

# அத்தியாயம் 01

## பொருளாதாரச் சிந்தனை வரலாறு

**அத்தியாயம் 01**........................................................................................1

பொருளாதாரச் சிந்தனை வரலாறு .......................................................1

1.1 பொருளாதாரச் சிந்தனை வரலாறு: அறிமுகம்....................3

1.2 பொருளாதார சிந்தனை வரலாற்றை கற்பதன் முக்கியத்துவம்..........................................................................4

1.3 பொருளாதா சிந்தனை வரலாற்றின் ஆய்வு முறைகள்.......5

1.4 பொருளாதார வரலாற்றின் பிரதான காலப்பகுதிகள் ...........5

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது பொருளாதாரச் சிந்தனைகள் குறித்து விளக்குகிறது. அதாவது, பொருளாதார சிந்தனையினை வரைவிலக்கணப்படுத்துகின்றது. மேலும், பொருளாதார சிந்தனை வரலாறு மற்றும் பொருளாதார வரலாறு இரண்டையும் வேறுப்படுத்துகிறது. பொருளாதார சிந்தனை வரலாற்றின் முக்கியத்துவத்தினையும் ஆய்வு முறைகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. பொருளாதா சிந்தனை வரலாற்றின் வரைவிலக்கணம் குறித்து விளக்குதல்.
2. பொருளாதார சிந்தனை வரலாற்றின் முக்கியத்துவத்தினை தெளிவுப்படுத்தல்.
3. பொருளாதார சிந்தனை வரலாற்றின் ஆய்வு முறைகளை விளக்குதல்.

## கற்றல் பேறுகள்

1. பொருளாதா சிந்தனை வரலாற்றின் வரைவிலக்கணம் குறித்து கூறுவர்.
2. பொருளாதார சிந்தனை வரலாற்றின் முக்கியத்துவத்தினை தெளிவுப்படுத்துவர்.
3. பொருளாதார சிந்தனை வரலாற்றின் ஆய்வு முறைகளை விளக்குவர்.

## 1.1 பொருளாதாரச் சிந்தனை வரலாறு: அறிமுகம்

15 ஆம் நூற்றாண்டில் வாணிபம் பெருக பொருட்களின் முக்கியத்துவம் அதிகரித்தது. பொருளாதார சிந்தனை முறையானது அறிவியல் அடிப்படையில் அமையவில்லை. ஆனால், 1776 இல் ஆடம்ஸ்மித் (பொருளியலின் தந்தை) எழுதிய 'நாடுகளின் செல்வம்' பொருளியல் சிந்தனைக்கு அறிவியல் அடிப்படையில் விளக்கமளித்தது.

பொருளாதார சிந்தனை வரலாறு (History of Economic Thoughts), பொருளாதார வரலாற்றோடு (Economic History) நெருங்கிய தொடர்புடையதென்றாலும், பொருளாதார வரலாற்றிலிருந்து வேறுபட்டதாகும். பொருளாதார வரலாறு என்பது கடந்த காலத்தில் ஏற்பட்ட தொழில், வாணிப வளர்ச்சி, வளம், பொருளாதார சிக்கல்கள் குறித்த கற்கையாகும். பொருளாதார வரலாறு என்பது பொருளாதாரங்கள், நிறுவனங்கள் மற்றும் பொருளாதார அமைப்புகளின் வரலாற்று வளர்ச்சியைக் குறிக்கிறது. இது தொழில்நுட்ப முன்னேற்றங்கள், வர்த்தக முறைகள், அரசியல் நிகழ்வுகள் மற்றும் வரலாறு முழுவதும் பொருளாதார விளைவுகளை பாதித்த சமூக மாற்றங்கள் போன்ற காரணிகளை ஆராய்கிறது. பொருளாதார வரலாற்றாசிரியர்கள் சமூகங்களில் நீண்டகால பொருளாதார போக்குகள், சுழற்சிகள் மற்றும் மாற்றங்கள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ய அனுபவ தரவு, காப்பக ஆராய்ச்சி மற்றும் அளவு முறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

பொருளாதா சிந்தனை வரலாறு என்பது பொருளாதார கருத்துக்களின் தோற்றம், அவை வளர்ச்சி பெற்ற முறை, காலச் சூழ்நிலை, அக்கருத்துக்களின் தொடர்புகள் குறித்த கற்கையாகும். அதாவது, பொருளாதார சிந்தனையின் வரலாறு என்பது காலப்போக்கில் பொருளாதார சிந்தனைகள், கோட்பாடுகள் மற்றும் கருத்துகளின் பரிணாம வளர்ச்சியைக் குறிக்கிறது. மேலும், பொருளாதாரம் பற்றிய புரிதலை வடிவமைத்த பல்வேறு

சிந்தனையாளர்கள், அறிஞர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்களின் பங்களிப்புகளை உள்ளடக்கியது.

பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பேரினப் பொருளாதார அடிப்படையிலும் சிற்றினப் பொருளாதார அடிப்படையிலும் பல சிந்தனையாளர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவ்வாறாக வெளியிடப்பட்ட கருத்துக்களின் தொகுப்பினை பொருளாதார சிந்தனை வரலாறு என்ற கற்கை நெறி விளக்குகின்றது.

ஹானே (Haney) பொருளாதார சிந்தனை வரலாற்றை ‘‘பொருளியல் கருத்துக்களின் வளர்ச்சி, அவற்றினைப் பற்றிய தேடல், அவற்றின் உள்ளார்ந்த தொடர்புகள், வெளிப்பாடுகள் பற்றிய திறனாய்வுத் தொகுப்பு’’ என்று கூறுகின்றார். J.F. Bell, ‘‘பொருளியல் பற்றி எழுதிய சிந்தனையாளர்கள் விட்டுச்சென்ற மரபுரிமை பற்றிப் படித்தல் பொருளாதார சிந்தனை வரலாறு எனப்படும்’’ என்கிறார்.

## 1.2 பொருளாதார சிந்தனை வரலாற்றினை கற்பதன் முக்கியத்துவம்

- அரசியல் பொருளாதாரத்தின் உருவாக்கம்.
- வேறுப்பட்ட பொருளாதார சிந்தனைப் பள்ளியினரை ஒன்றாக சேர்த்தல்.
- சிந்தனைகளின் விவாதத்துக்கு களமமைத்தல்.
- செல்வத்தை சம்பாதிப்பதற்கான ஒரு கலை.
- பொருளியலை விளங்கிக் கொள்வதற்கான ஒரு கருவி.
- அறிவாற்றலின் பகுதியான வரலாற்றைத் தருகிறது.
- கொள்கைகளை வகுப்பதற்கு உதவுகிறது.
- கோட்பாடுகளை உருவாக்கப் பயன்படுதல்.
- கருத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.

## 1.3 பொருளாதா சிந்தனை வரலாற்றின் ஆய்வு முறைகள்

- கால அடிப்படையிலான ஆய்வுமுறை (Chronological Approach): பெல்பெர் கூசன், டெய்லர், ஹானே
- தத்துவ ஆய்வுமுறை (Philosophical Approach): பிளேட்டோ, அரிஸ்டாட்டில், ஆடம்ஸ்மித், மார்க்ஸ்
- கருத்தியல் ஆய்வுமறை (Conceptual Approach): வட்டி, கூலி
- பழம் பொருளியல் பகுத்தாய்வு முறை (Classical Deduction Approach): ரிக்கார்டோ, மால்தஸ், ஜே. எஸ். மில்
- வரலாற்று ஆய்வுமறை (Historical Approach): ஜேர்மனி
- நவ பழம்பொருளியல் ஆய்வுமறை (Neo – Classical Approach): மார்ஷல்
- நல ஆய்வுமறை (Welfare Approach): பிகு, ஹிக்ஸ், ஹாப்சன்
- சமதர்ம ஆய்வுமறை (Socialistic Approach): இராபட் ஓவன், சைமன், கார்ல்மாக்ஸ்
- நிறுவன அமைப்பு ஆய்வுமறை (Institutional Approach): வெப்லன்
- கெயின்சிய ஆய்வுமறை (Keynesian Approach): ஜே. எம். கெயின்ஸ்

## 1.4 பொருளாதார வரலாற்றின் பிரதான காலப்பகுதிகள்

1. பழம் பொருளியலாளர்களுக்கு முன்னைய காலம் (1776 இற்கு முற்பட்ட காலம்).
    a. புராதான பொருளாதார சிந்தனைகள்.
        **i.** கிரேக்க பொருளாதார சிந்தனைகள்
        **ii.** உரோம பொருளாதார சிந்தனைகள்
        **iii.** இந்தியப் பொருளாதார சிந்தனைகள்
        **iv.** யூதர்களின் பொருளாதார சிந்தனைகள்
        **v.** சீனர்களின் பொருளாதார சிந்தனைகள்

b. மத்திய கால ஐரோப்பிய பொருளாதார சிந்தனைகள்

c. வணிக வாதம்

2. பழம் பொருளியலாளர்கள் கால சிந்தனை (1776 – 1870)
3. எல்லையியல் புரட்சி (1870 – 1890)
4. நவபழம் பொருளியல் (1870)
5. கெயின்சியப் புரட்சி (1936 – 1960)
6. அமைப்புவாத பொருளியல் (1945)

## சுருக்கம்

- ✓ ஆடம்ஸ்மித் எழுதிய ‘நாடுகிளின் செல்வம்’ பொருளியல் சிந்தனைக்கு அறிவியல் அடிப்படையில் விளக்கமளித்தது.
- ✓ பொருளாதார வரலாறு என்பது கடந்த காலத்தில் ஏற்பட்ட தொழில், வாணிப வளர்ச்சி, வளம், பொருளாதார சிக்கல்கள் குறித்த கற்கையாகும்.
- ✓ பொருளாதா சிந்தனை வரலாறு என்பது பொருளாதார கருத்துக்களின் தோற்றம், அவை வளர்ச்சி பெற்ற முறை, காலச் சூழ்நிலை, அக்கருத்துக்களின் தொடர்புகள் குறித்த கற்கையாகும்.
- ✓ பொருளியல் பற்றி எழுதிய சிந்தனையாளர்கள் விட்டுச்சென்ற மரபுரிமை பற்றிப் படித்தல் பொருளாதார சிந்தனை வரலாறு எனப்படும்.

## பயிற்சி வினாக்கள்

1. பொருளாதார சிந்தனை வரலாறு குறித்து விளக்குக.

2. பொருளாதார சிந்தனை வரலாறு மற்றும் பொருளாதார வரலாற்றினை வேறுப்படுத்துக.

3. பொருளாதார சிந்தனை வரலாற்றின் முக்கியத்துவத்தினை விளக்குக.

4. பொருளாதாத சிந்தனை ஆய்வு முறைகளை விளக்குக.

## திறவுச் சொற்கள்

பொருளாதார சிந்தனை, முக்கியத்தவம், ஆய்வு முறைகள், பொருளாதார சிந்தனை வரலாறு

## உசாத்துணைகள்


Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 02

## புராதான பொருளாதார சிந்தனைகள்

**அத்தியாயம் 02**........................................................................8

புராதான பொருளாதார சிந்தனைகள்....................................................8

2.1 புராதன பொருளாதாரச் சிந்தனை வரலாறு......................10

2.2 யூதர்களின் பொருளாதாரச் சிந்தனைகள்..........................10

2.3 கிரேக்க பொருளாதாரச் சிந்தனைகள்...............................11

2.4 உரோமர்களின் பொருளாதாரச் சிந்தனை.........................14

2.5 புராதன இந்தியப் பொருளாதாரச் சிந்தனைகள்................15

2.6 புராதன சீன பொருளாதாரச் சிந்தனை .............................16

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது யூதர்களின் பொருளாதாரச் சிந்தனை குறித்து விளக்குகிறது. மேலும் ஹிப்ருவின் பொருளாதார கருத்துக்களை எடுத்துரைக்கிறது. அதனைத் தொடர்ந்து கிரேக்க பொருளாதாரச் சிந்தனைகளில் ஸினோப்பொன், பிளேற்றோ, அரிஸ்ரோட்டில் போன்றவர்களின் பொருளாதார சிந்தனைகள் விளக்கப்படுகின்றது. மேலும் புராதன இந்தியப் பொருளாதாரச் சிந்தனைகளும் புராதன சீன பொருளாதாரச் சிந்தனைகளும் தெளிவுப்படுத்தப்படுகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. யூதர்களின் பொருளாதா சிந்தனைகள் குறித்தும் ஹிப்ருவின் கோட்பாடுகள் குறித்தும் விளக்குதல்.
2. கிரேக்க பொருளியலாளர்களின் கோட்பாடுகளை தெளிவுப்படுத்தல்.
3. இந்திய மற்றும் சீன பொருளாதா சிந்தனைகள் குறித்து விளக்குதல்.

## கற்றல் பேறுகள்

1. யூதர்களின் பொருளாதா சிந்தனைகள் குறித்தும் ஹிப்ருவின் கோட்பாடுகள் குறித்தும் கூறுவர்.
2. கிரேக்க பொருளியலாளர்களின் கோட்பாடுகளை விளக்குவர்.
3. இந்திய மற்றும் சீன பொருளாதார சிந்தனைகளை வேறுப்படுத்துவர்.

## 2.1 புராதன பொருளாதாரச் சிந்தனை வரலாறு

புராதன பொருளாதாரச் சிந்தனை என்பது கி.மு 2500 - கி.பி 500 ஆண்டு வரையுள்ள காலப்பகுதி. இது பல அறிவியல் சார்ந்த முன்னேற்றங்கள் இடம்பெற்ற காலப்பகுதியாகும். இப்புராதான காலப்பகுதியில் பொருளியல் ஒரு தனி அலகாக காணப்படவில்லை. மாறாக ஏனைய துறைகளின் அறிவியல் முன்னேற்றத்தில் பல பொருளாதாரக் கருத்துக்கள் இணைந்திருந்தன.

## 2.2 யூதர்களின் பொருளாதாரச் சிந்தனைகள்

ஹிப்ருவின் சிந்தனை யூதர்களின் பொருளாதாரச் சிந்தனைகளில் பிரதானமானது. அவரின் பொருளாதார சிந்தனைகள் பின்வருமாறு அமைகின்றது.

- சமய விதிகள் அடிப்படையில் பொருளாதார நடவடிக்கைகளை விளக்குகின்றார்.
- தனியார் சொத்துரிமை மனிதர்களை பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டுகின்றது எனக் கூறுகின்றார்.
- பொருளாதாரத்தில் வேளாண்மைத் தொழில் முதன்மையானது என்பதை வலியுறுத்துகின்றார்.
- வர்த்தகத்தில் பதுக்கல், ஊகவர்த்தகம், நிச்சயமற்ற தன்மையைப் பயன்படுத்தி அதிக இலாபம் சம்பாதித்தல் என்பன கட்டுப்படுத்தப்பட்டு வர்த்தகத்தில் ஒழுக்கத்தினை பின்பற்றினார்.
- வட்டி, மூலதனத்தைவிட அதிகமாக இருக்க முடியாது என்பதனை பல சட்டங்கள் மூலம் கடைப்பிடித்தார்.

- 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை விவசாயிகள் நிலத்துக்கு ஓய்வு கொடுத்து நிலத்தை செழிப்பாக வைத்திருக்க உதவ வேண்டும் என்ற சட்டத்தின் மூலம் யூதர்கள் சூழலியல் பொருளியலின் அடிப்டைக் கருத்துக்களுக்கு வித்திட்டுள்ளனர்.

- வீதி வரி, தனி நபர் வரி, பொருட்கள் சேவைகள் மீதான வரி என வரிகள் அறவிட்டு பெறப்படும் வருமானத்தை அரச கட்டடங்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்தினர்.

- விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் பங்கு பற்றினர்.

## 2.3 கிரேக்க பொருளாதாரச் சிந்தனைகள்

ஸினோப்பொன் (Xenophon), பிளேற்றோ (Plaito), அரிஸ்ரோட்டில் போன்றவர்கள் பிரதானமான கிரேக்க பொருளாதாரச் சிந்தனையாளர்கள் ஆகும்.

### i. செனோபோன் Xenophon (கி.மு 430 – கி.மு 354)

பொருளாதாரத்தில் செனோபோனின் பங்களிப்புகள் முதன்மையாக அவரது ”எகனாமிகஸ் (Oeconomicus)” என்ற புத்தகத்தில் அவரது பங்களிப்புகள் காணப்படுகின்றன. இதில், எஸ்டேட் மேலாண்மை (Estate Management), வீட்டு நிர்வாகம் மற்றும் பொருளாதார பண்புகள் ஆகியவற்றின் கொள்கைகளை செனோபோன் ஆராய்கின்றார். நவீன காலத்தில் அவர் ஒரு முறையான பொருளாதார நிபுணராக கருதப்படவில்லை என்றாலும், அவரது கருத்துக்கள் பண்டைய கிரேக்க பொருளாதார சிந்தனை மற்றும் நடைமுறைகள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகின்றன. இவர் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு காணப்படுகின்றது.

- பொருட்களின் பெறுமதி அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதன் மூலம் தீர்மானிக்கின்றது.
- செல்வத்தை பிரதான வளமாகவும் இலாபம் ஈட்டும் கருவியாகவும் கருதுகின்றனர்.
- கேள்வியும் நிரம்பலும் பொருட்களின் பெறுமதியினை தீர்மானிப்பதுடன் பொருட்களின் நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு விலையில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.
- கேள்வியும் நிரம்பலும் சம நிலைகளை நோக்கி நகர்கின்றது என விளக்கினார்.
- தங்கம் மற்றும் உலோகங்களின் விலையானது பொற்கொல்லர்கள் அளவு வியாபாரத்தில் குறையும் போது குறைவு எனக் குறிப்பிட்டுள்ளார்.

### ii. பிளேட்டோ Plato (கி.மு. 427 – கி.மு. 327 )

பிளேட்டோ ஒரு கிரேக்க தத்துவஞானி. அவர் ஏதென்ஸில் ஒரு பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்தார். அவர் சாக்ரடீஸின் மாணவர். அவரால் நிறுவப்பட்ட அகாடமி - தத்துவவாதிகளின் முதல் பெரிய பள்ளியில் அவர் கணிதம் மற்றும் தத்துவத்தை கற்பித்தார். அவரது புகழ்பெற்ற எழுத்துக்கள், “குடியரசு’’ மற்றும் “சட்டங்கள்’’ அவரது பொருளாதார சிந்தனையின் மிக முக்கியமான ஆதாரங்கள்.

சமூக அமைப்புகளின் பொருளாதார அம்சங்களில் பிளாட்டோ கவனம் செலுத்தினார். எரிக் ரோலின் கூற்றுப்படி, ‘‘சமூகத்தின் கொள்கைகள் மற்றும் நகர அரசின் தோற்றம் மற்றும் சிறந்த சமூக கட்டமைப்பிற்கான ஒரு திட்டத்தை அவர் முறையாக விளக்க முயற்சித்தார்”. அவர் பொருளாதாரத்தை நெறிமுறைகள் மற்றும் அரசியலின் ஒரு பிரிவாகக் கருதினார்.

- பிளேட்டோவின் சிந்தனைகள் அரசியல் பொருளாதாரத்துக்கு வித்திட்டது.
- ஆட்சியாளன் தத்துவவியலாளனாக இருக்க வேண்டும் என்கிறார்.
- ஊழியப்பிரிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியதுடன் நகரமயமாக்கம் கைத்தொழில்மயமாக்கம் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டார்.
- அரச தலையீட்டை மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளார். தலைமைத்துவத்தைவிட அரசு முக்கியமானது எனக் குறிப்பிடுகிறார்.
- வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் போன்றவற்றை வலியுறுத்தி இருக்கிறார்.

### iii. அரிஸ்டாட்டில் Aristotle (கி.மு. 384 – கி.மு. 322 )

பொருளாதார அறிவியலிற்கான அடித்தளத்தை அமைத்த முதல் பகுப்பாய்வு பொருளாதார நிபுணர் அரிஸ்டாட்டில் ஆவார். அவர் பிளாட்டோவின் மாணவர் மற்றும் அலெக்சாண்டருக்கு ஆசிரியராக இருந்தார். அவர் எந்த ஒரு பொருளாதார கட்டுரையையும் எழுதவில்லையாயினும், இடைக்கால எழுத்தாளர்கள் அவரிடமிருந்து முக்கிய யோசனைகளைப் பெற்றனர். அவரது சிதறிய கருத்துக்கள் குறிப்பாக தனியார் சொத்து, வட்டி மற்றும் நியாயமான விலை ஆகியவை அடுத்தடுத்த பொருளாதார சிந்தனையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது.

அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் மாணவராக இருந்தபோதிலும், அரசின் தோற்றம், தனியார் சொத்துரிமை, கம்யூனிசம் போன்ற முக்கியமான விஷயங்களில் அவரிடமிருந்து வேறுபட்டார். பிளேட்டோ ஒரு தர்க்கரீதியான சிந்தனையாளர். அரிஸ்டாட்டில் நடைமுறைசார்ந்த சிந்தனையாளராக காணப்பட்டார்.

அரிஸ்டாட்டிலின் முக்கிய கருத்துக்கள் ‘அரசியல்’ மற்றும் ‘நெறிமுறைகள்’ ஆகியவற்றில் காணப்பட்டன.

- இவர் ஊழியத்தை ஒரு பொருளாக கருதியதுடன் பொருளின் உற்பத்தியிலும் பெறுமதியிலும் ஊழியத்தின் முக்கியத்துவத்தினை நிராகரித்துள்ளார்.
- செல்வத்தை உருவாக்குகின்ற பிரதான காரணி உழைப்பு என்பதை மறுக்கின்றார்.
- ஊழியத்திற்கு பெறுமதி உண்டு. ஆனால், பொருட்களுக்கு பெறுமதியைக் கொடுப்பதில்லை என்ற ஊழியத்தின் பெறுமதி பற்றிய கோட்பாட்டை உருவாக்கினார்.
- அனைத்து வகுப்பு மக்களுக்கும் சொத்துரிமை வழங்கப்படுவதோடு பொருட்கள், சேவைகளின் பங்கீடானது சமூக நீதியினை உருவாக்க அவசியமானதாகக் கருதினார்.
- பணம் பண்டமாற்று ஊடகம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறார்.
- செல்வத்தைச் சேர்த்தல் ஒரு கலையாகும் என்கின்றார்.
- உற்பத்தியானது வாழ்க்கைக்குத் தேவையான அளவுடன் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்கிறார்.

## 2.4 உரோமர்களின் பொருளாதாரச் சிந்தனை

பொருளாதார சிந்தனையின் வளர்ச்சிக்கு உரோமர்களின் பங்களிப்பு மிகக் குறைவு. அவர்களின் முக்கிய ஆர்வம் நீதித்துறை. கிரேக்கர்கள் சிந்தனையாளர்களாகவும், ஆர்வமுள்ளவர்களாகவும், பகுப்பாய்வாளர்களாகவும் இருந்தனர். அதேசமயம் உரோமர்கள் செயல் வீரர்கள், போர்வீரர்கள் மற்றும் அரசியல்வாதிகளாக இருந்தனர். கிரேக்கர்கள் ஒரு தத்துவத்தை விட்டுச் சென்றனர். இது

பிற்கால சிந்தனையாளர்களின் நெறிமுறைகள் மற்றும் பொருளாதாரத்தை ஆழமாக பாதித்தது. ஆனால் உரோமர்கள் சட்டம் மற்றும் அரசியலைப் பாதிக்கும் நிறுவனங்களை உருவாக்கினர்.

உரோம பொருளாதார கருத்துக்கள் மூன்று ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்படலாம். அதாவது, சட்ட வல்லுநர்கள், தத்துவவாதிகள் மற்றும் விவசாய எழுத்தாளர்கள். முக்கிய எழுத்தாளர்கள் சிசரோ, செனெகா மற்றும் பிளினி. இந்த தத்துவவாதிகள் விவசாயத்தைப் போற்றி, வட்டியைக் கண்டித்தனர். விவசாயத்தைப் போற்றும் போது அவர்கள் அதை ரோமின் இரட்சிப்பாகக் கருதினர்.

- உரோமச் சிந்தனையாளர்கள் சமூக முன்னேற்றம் சட்டப்படியான நல்லாட்சியினால் உருவாகின்றது என்கின்றனர்.

- தனியார் சொத்துடமை மற்றும் ஒப்பந்தங்கள் முக்கியமானவையாகக் காணப்பட்டன. தனியார் சொத்துடமையைப் பாதுகாக்க சட்ட அங்கீகாரம் உள்ள நிறுவனங்களின் பங்களிப்புப் பற்றி குறிப்பிட்டனர்.

- பொருளாதாரச் சிந்தனைகளில் கிறிஸ்தவ சமய நம்பிக்கைகளின் செல்வாக்கு காணப்பட்டன.

## 2.5 புராதன இந்தியப் பொருளாதாரச் சிந்தனைகள்

- கி.மு 350 – கி.மு 275 க்கு இடைப்பட்ட காலத்தில் சாணக்கியருடைய அர்த்த சாஸ்திரம் இந்தியப் பொருளாதாரச் சிந்தைனைகள் குறித்து விளக்குகின்றது.

- இவரால் கூறப்பட்ட பொருளியல் கருத்துக்கள் தற்காலத்துக்கும் பொருத்தமுடையனவாக காணப்படுவதுடன் இவர் நலப் பொருளியல் பற்றிய கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

- செல்வத்தினை பகிர்வதன் மூலம் அனைத்து மக்களினதும் நலனையும் உயர்த்த முடியும் என்கின்றார்.

- பொருளாதாரத்தை முகாமை செய்து வினைத்திறனான உறுதியான பொருளாதாரத்தை உருவாக்குவதில் எதேட்சை அதிகாரம் சிறப்பாகப் பங்காற்ற முடியும் என நம்பினார்.

### 2.6 புராதன சீன பொருளாதாரச் சிந்தனை

சீனாவில் தோன்றிய சிந்தனையாளர்களில் Fan Li என்பவர் முதன்மையான சிந்தனையாளனாகக் காணப்படுகின்றார். இவருடைய பொருளாதாரச் சிந்தனைகள் பின்வருமாறு:

- பணமும் செல்வமும் ஒருவருக்கு சுமையாக இருக்கும்போது அவர்கள் அதை கைவிடுவார்கள்.

- சந்தையில் பொருட்களுக்கான கேள்வியில் பருவகாலத்தின் தாக்கம் பற்றி கூறி பருவகாலத்தின் தாக்கம் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதை விபரித்துள்ளார்.

- இவர் பட்டினி மற்றும் உணவுப் பற்றாக்குறையின் சமூகச் செலவைக் குறைப்பதற்கு கருத்துக்களை கூறியுள்ளார்.

## சுருக்கம்

✓ புராதன பொருளாதாரச் சிந்தனை என்பது கி.மு 2500 - கி.பி 500 ஆண்டு வரையுள்ள காலப்பகுதி.

- ✓ ஹிப்ருவின் சிந்தனை யூதர்களின் பொருளாதாரச் சிந்தனைகளில் பிரதானமானது.

- ✓ ஸினோப்பொன் (Xenophon), பிளேட்டோ (Plaito), அரிஸ்டாட்டில் போன்றவர்கள் பிரதானமான கிரேக்க பொருளாதாரச் சிந்தனையாளர்கள் ஆவர்.

- ✓ கி.மு 350 – கி.மு 275 க்கு இடைப்பட்ட காலத்தில் சாணக்கியருடைய அர்த்த சாஸ்திரம் இந்தியப் பொருளாதாரச் சிந்தைனைகள் குறித்து விளக்குகின்றது.

- ✓ உரோமச் சிந்தனையாளர்கள் சமூக முன்னேற்றம் சட்டப்படியான நல்லாட்சியினால் உருவாகின்றது என்கின்றனர்.

- ✓ சீனாவில் தோன்றிய சிந்தனையாளர்களில் Fan Li என்பவர் முதன்மையான சிந்தனையாளனாகக் காணப்படுகின்றார்.

## பயிற்சி வினாக்கள்

1. புராதான பொருளாதார வரலாறு குறித்து விளக்குக.

2. கிரேக்க பொருளாதார சிந்தனைகளில் பங்குகொண்ட முக்கியமான பொருளியலாளர்களின் பொருளாதார சிந்தனைகளை ஆராய்க.

3. இந்திய பொருளாதார சிந்தனைகளில் முக்கியமானவற்றை விபரிக்குக.

4. உரோம மற்றும் சீனப் பொருளாதார சிந்தனைகளை வேறுப்படுத்தி ஆராய்க.

5. சீன பொருளாதாரத்தில் முக்கியமான பொருளியலாளர் யார் எனக் குறிப்பிட்டு அவரின் பொருளாதார சிந்தனைகளை விளக்குக.

## திறவுச் சொற்கள்

பொருளாதார சிந்தனை, கிரோக்கம், சீனா, உரோம, யூதர்கள், இந்தியா, சொத்துடைமை, வரி, நல்லாட்சி, செல்வம், ஊழியப் பிரிப்பு, வினைத்திறன்

## உசாத்துணைகள்

Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ், யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 03

# இடைக்கால பொருளாதார வரலாறு: இஸ்லாமிய பங்களிப்பு

**அத்தியாயம் 03**......19

இடைக்கால பொருளாதார வரலாறு: இஸ்லாமிய பங்களிப்பு......19

3.1 அரபு - இஸ்லாமிய சிந்தனை......21

3.2 அபு ஹமித் அல்-கசாலி......22

3.3 இபின் கல்தூன்......23

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது இடைக்கால பொருளாதார சிந்தனைகளில் அரபு இஸ்லாமிய பொருளாதாரத்தின் பங்களிப்பு குறித்து ஆராய்கின்றது. மேலும், அரபு இஸ்லாமிய பொருளாதாரத்தில் மிகப் பிரதான பங்களிப்பு செய்யும் பொருளியல் சிந்தனையாளர்களாக அபு ஹமீத் அல் கஸ்ஸாலி மற்றும் இப்னு கல்தூன் போன்றவர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் பொருளாதார பங்களிப்புக்களும் முக்கியமான சிந்தனைகளும் இவ்வத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. இடைக்கால பொருளாதார சிந்தனைகளில் அரபு இஸ்லாமியயர்களின் பங்களிப்பு குறித்த ஆரம்ப அறிவினை வழங்குதல்.

2. அபு ஹமீத் அல் கஸ்ஸாலியின் பொருளாதா கோட்பாடுகளை தெளிவுப்படுத்தல்.

3. இப்னு கல்தூன் பொருளாதா சிந்தனைகள் குறித்து விளக்குதல்.

## கற்றல் பேறுகள்

1. இடைக்கால பொருளாதார சிந்தனைகளில் அரபு இஸ்லாமியயர்களின் பங்களிப்பு குறித்து விளங்குவர்.

2. அபு ஹமீத் அல் கஸ்ஸாலியின் பொருளாதா கோட்பாடுகளை தெளிவுப்படுத்துவர்.

3. இப்னு கல்தூன் பொருளாதா சிந்தனைகள் குறித்து விளக்குவர்.

## 3.1 அரபு - இஸ்லாமிய சிந்தனை

பொருளாதார சிந்தனை ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக ஆரம்பகால மரபுக்கு முந்தைய பொருளாதார சிந்தனைகள் குறித்து சிந்திக்கின்றனர். கிரேக்கர்கள், குறிப்பாக அரிஸ்டாட்டில் மற்றும் ஏனைய சிந்தனையாளர்களுக்கு இடையே, பாரம்பரியத்திற்கு முந்தைய சிந்தனைக்கு ஏன் முக்கிய பங்களிப்பு காணப்படவில்லை என்பது முக்கியமானதொரு வினாவாகக் காணப்படுகிறது.

அரபு-இஸ்லாமிய எழுத்தாளர்கள் அவர்களைப் பின்பற்றிய அறிஞர்களைப் போன்று முற்றிலும் மாறுபட்ட ஒரு கட்டமைப்பிற்குள் எழுதினார்கள். எவ்வாறாயினும், அரேபிய-இஸ்லாமிய எழுத்தாளர்கள், மனித நடவடிக்கைகளின் அனைத்து அம்சங்களையும், குறிப்பாக, பொருளாதார நடவடிக்கையின் விளைவுகளையும் கருத்தில் கொண்டனர். இன்று போல் அன்று தனி முறையான பொருளாதார பகுப்பாய்வு காணப்படவில்லை. மாறாக, இடைக்கால இஸ்லாமிய அறிஞர்கள் பொருளாதாரப் பிரச்சினைகளை அவர்களின் மதக் கருத்துக்களின் பரந்த சூழலில் ஆய்வு செய்தனர்.

மனித செயல்பாடுகள் அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவும், தெய்வீக சட்டத்தின் ஆளுகையின் கீழும் காணப்பட்டதால், பொருளாதார கட்டமைப்பு பகுப்பாய்வை வெளிப்படுத்துவது கடினமாக இருந்தது. பொருளாதார நடவடிக்கைகளில் பல கட்டுப்பாடுகள் உள்ள இலட்சிய முஸ்லிம் உலகத்திற்கு மாறாக அவர்களின் காலத்தின் உண்மையான முஸ்லிம் உலகத்தை ஆராய அறிஞர்கள் தீர்மானித்த போதுதான் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்வதில் முன்னேற்றம் ஏற்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்கான இந்த முயற்சிகளின் ஆரம்ப மைய புள்ளிகளில் ஒன்று வரிவிதிப்பு ஆகும்.

சுமார் முப்பது அரேபிய-இஸ்லாமிய எழுத்தாளர்கள் இடைக்காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் பற்றி விரிவாக எழுதியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எழுத்தாளர்களின்

பங்களிப்புகள் பற்றிய ஆராய்ச்சி மேற்கத்திய உலகில் ஒப்பீட்டளவில் புதியதாக இருப்பதால், சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி தற்போது வரை, அவர்களின் பங்களிப்புகளின் தன்மை மற்றும் முக்கியத்துவம் பற்றிய நமது புரிதல் தற்காலிகமானது மற்றும் முழுமையற்றதாகும். எவ்வாறாயினும், பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறிப்பிடும் முக்கியமான அரபு-இஸ்லாமிய எழுத்தாளர்களில் அபு ஹமித் அல்-கசாலி மற்றும் இபின் கல்தூன் ஆகியோர் அடங்குவர் என்பதை நாம் அறிவோம்.

## 3.2 அபு ஹமித் அல்-கசாலி

அல்-கசாலி (1058-1111), மற்ற அரேபிய அறிஞர்களைப் போலவே, சமூகத்தின் தத்துவ நெறிமுறை, சமூகவியல் மற்றும் பொருளாதாரப் பக்கங்களை அவரது நேரம் மற்றும் இடம் ஆகியவற்றின் மேலாதிக்க மத நம்பிக்கைகளுடன் ஒருங்கிணைக்கும் ஒரு கட்டமைப்பிற்குள் எழுதினார். அவர் இடைக்கால இஸ்லாத்தின் மிக முக்கியமான அறிவுஜீவிகளில் ஒருவராக இருந்தார். மேலும், அவரது எழுத்துக்கள் புனித தாமஸ் அக்வினாஸை பாதித்ததாக அறியப்படுகிறது. தன்னார்வ பரிவர்த்தனை மூலம் சந்தைகளின் பரிணாம வளர்ச்சி பற்றிய அவரது விளக்கம் பதினொன்றாம் நூற்றாண்டில் உள்ள ஒருவருக்கு குறிப்பிடத்தக்க வகையில் புரிந்து கொள்ளத்தக்கது. சந்தைகள் எவ்வாறு பொருளாதாரச் செயல்பாடுகளை நிபுணத்துவம் மற்றும் தொழிலாளர் பிரிவின் பரிணாம வளர்ச்சியுடன் இணைக்கின்றன மற்றும் ஒருங்கிணைக்கின்றன என்பது பற்றிய அவரது நுண்ணறிவு பிரதானமாகும்.

அல்-கசாலி தனது காலத்தில், ஒரு ரொட்டி ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களின் விளைபொருளாக இருக்கலாம் என்பதை கவனித்தார். அதிகரித்துவரும் நிபுணத்துவம் மற்றும் உழைப்புப் பிரிவினை பொருளாதாரப் பரிமாற்றத்தில் விளைகிறது என்பதை உணர்ந்த அல்-கஸாலி, பண்டமாற்றுச்

சிரமங்களையும் அதன் விளைவாக இந்தப் பரிமாற்றங்களை எளிதாக்குவதற்கு நாணயத்தின் தேவையையும் சுட்டிக்காட்டினார். மற்றும் அவர் மற்ற பொருளாதார தலைப்புகளையும் ஆய்வு செய்தார். உதாரணமாக: பொது செலவுகள், வரிவிதிப்பு மற்றும் கடன் வாங்குதல், நாணயங்கள் மற்றும் நாணயங்களின் மதிப்பிழப்பு, வட்டி (கந்து வட்டி) மற்றும் சமூகத்தின் மீது வரிச்சுமையை சரியான முறையில் பரப்புவதற்கு எவ்வாறு வரிகளை விதிப்பது என்பனவாகும்.

அவரது சமகாலத்தவர்கள் மற்றும் ஏறக்குறைய ஐநூறு ஆண்டுகள் பின்பற்றியவர்களைப் போலவே, அல்-கசாலி மற்ற நடவடிக்கைகளிலிருந்து பொருளாதாரத்தை சுருக்கவில்லை. அவரது தரிசனங்களும் விளக்கங்களும் எப்பொழுதும் அவரது வலுவான மதக் கண்ணோட்டங்களின் பரந்த சூழலின் அடிப்படையில் செய்யப்பட்டன. இது சில சந்தர்ப்பங்களில் பொருளாதார நடவடிக்கைகளை தடை செய்தது.

### 3.3 இபின் கல்தூன்

இபின் கல்தூன் (1332-1406) முற்றிலும் பொருளாதாரக் கேள்விகளில் ஆர்வம் காட்டவில்லை. பொருளாதார தலைப்புகள் பற்றிய அவரது ஆய்வு எப்போதும் மறைமுகமாகவும் பரந்த கவலைகளின் பின்னணியிலும் இருந்தது. குறைந்த வருமானம், குறைந்த கைவினைத் திறன்கள் மற்றும் சிறிய பொருளாதார மிகையுடன் கிராமப்புற பாலைவன வாழ்க்கைச் சமூகத்திலிருந்து நகர்ந்து. இன்று நாம் வளர்ச்சி சுழற்சி என்று அழைக்கும் அவரது சமூகம் எவ்வாறு தோன்றியது என்பதைப் பற்றிய அவரது பரந்த, விரிவான ஆய்வுகளில் பொருளாதார சிக்கல்கள் பற்றிய அவரது சுவாரஸ்யமான நுண்ணறிவு எழுகிறது. நாடோடி அல்லாத சமூகத்தில் விவசாயம் ஆதிக்கம் செலுத்தியது. இன்றைய நிலையிலிருந்து, இப்னு கல்தூனால் மக்கள் தொகை, இலாபம், நிரம்பல், கேள்வி, விலை, ஆடம்பரம், மொத்த மிகைகள் மற்றும்

மூலதன உருவாக்கம் உள்ளிட்ட பல "பொருளாதார" தலைப்புகள் ஆராயப்படுவதைக் காணலாம்.

இப்னு கல்தூன் இஸ்லாமியப் பொருளாதாரத்தின் தொடக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்று கூறப்பட்டது. இந்த வேறுபாடு அல்-கஸாலிக்கு சொந்தமானது என்று சிலர் வாதிட்டாலும் இது சந்தைப் பொருளாதாரங்களின் குறிப்பிடத்தக்க பகுப்பாய்வின் தொடக்கத்தைக் குறிக்கவில்லை. தங்களின் முன்னோடிகளான அரிஸ்டாட்டில் மற்றும் பிளேட்டோ போன்றவர்களின் சிந்தனை தங்களுக்கு முன் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலவியதைப் போலவே, இந்த அரேபிய தத்துவவாதிகளும் பொருளாதாரத்தை விட அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை ஆராயும் போக்கில் சில சுவாரஸ்யமான ஆரம்ப நுண்ணறிவுகளை அடைந்தனர். அவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் பொருளாதாரப் புரிதலின் தரவரிசையில் படிகளைச் சேர்த்தனர். அதில் பொருளாதார செயல்பாடு மிகவும் முக்கியமான சமூக நடவடிக்கையாக மாறும் போது, வணிகவாத எழுத்தாளர்கள் நிற்க முடியும்.

## சுருக்கம்

- ✓ அரபு-இஸ்லாமிய எழுத்தாளர்கள் அவர்களைப் பின்பற்றிய அறிஞர்களைப் போன்று முற்றிலும் மாறுபட்ட ஒரு கட்டமைப்பிற்குள் எழுதினார்கள்.
- ✓ அரேபிய-இஸ்லாமிய எழுத்தாளர்கள், மனித நடவடிக்கைகளின் அனைத்து அம்சங்களையும், குறிப்பாக, பொருளாதார நடவடிக்கையின் விளைவுகளையும் கருத்தில் கொண்டனர்.
- ✓ சுமார் முப்பது அரேபிய-இஸ்லாமிய எழுத்தாளர்கள் இடைக்காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் பற்றி விரிவாக எழுதியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- ✓ பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறிப்பிடும் முக்கியமான அரபு-இஸ்லாமிய எழுத்தாளர்களில் அபு ஹமித் அல்-கசாலி மற்றும் இபின் கல்தூன் ஆகியோர் அடங்குவர் என்பதை நாம் அறிவோம்.

- ✓ அல்-கசாலி மற்றைய அரேபிய அறிஞர்களைப் போலவே, சமூகத்தின் தத்துவ நெறிமுறை, சமூகவியல் மற்றும் பொருளாதாரப் பக்கங்களை அவரது நேரம் மற்றும் இடம் ஆகியவற்றின் மேலாதிக்க மத நம்பிக்கைகளுடன் ஒருங்கிணைக்கும் ஒரு கட்டமைப்பிற்குள் எழுதினார்.

- ✓ அல்-கசாலி பொது செலவுகள், வரிவிதிப்பு மற்றும் கடன் வாங்குதல் நாணயங்கள் மற்றும் நாணயங்களின் மதிப்பிழப்பு, வட்டி மற்றும் வட்டி (கந்து வட்டி) மற்றும் சமூகத்தின் மீது வரிச்சுமையை சரியான முறையில் பரப்புவதற்கு எவ்வாறு வரிகளை விதிப்பது சிறந்தது போன்ற பொருளாதார தலைப்புக்களை ஆய்வு செய்தார்.

- ✓ இபின் கல்தூன் முற்றிலும் பொருளாதாரக் கேள்விகளில் ஆர்வம் காட்டவில்லை. பொருளாதார தலைப்புக்கள் பற்றிய அவரது ஆய்வு எப்போதும் மறைமுகமாகவும் பரந்த கவலைகளின் பின்னணியிலும் இருந்தது.

- ✓ இப்னு கல்தூனால் மக்கள் தொகை, இலாபம், நிரம்பல், கேள்வி, விலை, ஆடம்பரம், மொத்த மிகைகள் மற்றும் மூலதன உருவாக்கம் போன்ற “பொருளாதார” தலைப்புகள் ஆராயப்படுவதைக் காணலாம்.

## பயிற்சி வினாக்கள்

1. இடைக்கால பொருளாதார வரலாறு குறித்து விளக்குக.

2. அல்-கசாலியின் பொருளாதார கருத்துக்களை விபரிக்குக.

3. இப்னு கல்தூனின் பொருளாதார பங்களிப்புக்களை ஆராய்க.

4. அல்-கசாலி மற்றும் இப்னு கல்தூனின் பொருளாதா சிந்தனைனைகளை வேறுப்படுத்தி ஆராய்க.

## திறவுச் சொற்கள்

அரபு-இஸ்லாமிய, இடைக்காலம், வரிவிதிப்பு, அபு ஹமித் அல்-கசாலி, இபின் கல்தூன், கந்து வட்டி, பொது செலவுகள், இலாபம், விலை, மூலதன உருவாக்கம்

## உசாத்துணைகள்


Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 04

## ஐரோப்பிய பொருளாதார வரலாறு

**அத்தியாயம் 04**......................................................................27

ஐரோப்பிய பொருளாதார வரலாறு....................................................27

4.1 செண்ட் தாமஸ் அக்வினாஸ் (Saint Thomas Aquinas)......29

4.2 வணிகவாதம்......................................................................34

4.2.1 அறிமுகம் ......................................................................34

4.2.2 வணிகவாத கருத்துக்கள் தோன்றியமைக்கான காரணங்கள்..........................................................................35

4.2.3 வணிகவாதத்தின் பிரதானமான சிந்தனைகள் ................37

4.2.4 வணிகவாதத்தின் மீதான விமர்சனங்கள் .......................40

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது ஐரோப்பிய பொருளாதார வரலாற்றினை விளக்குகின்றது. இங்கு ஐரோப்பிய பொருளாதார வரலாற்றில் செண்ட் தோமஸ் அக்வினாஸின் வரலாறு மற்றும் அவரின் வர்த்தகம், வட்டி சொத்து, வெறும் விலை போன்ற சில முக்கியமான சிந்தனைகள் விளக்கப்படுகின்றது. மேலும் ஐரோப்பிய பொருளாதார வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கும் வணிக பொரளாதாரம் குறித்தும் வணிகவாதத்தின் தோற்றத்திற்கான காரணங்கள் குறித்தும் தெளிவுப்படுத்தப்படுகின்றது. வணிகவாதிகளின் கோட்பாடுகள் வர்த்தகம், அரச தலையீடு, வட்டி, வரிவிதிப்பு, சனத்தொகை என பல்வேறு தலைப்புக்களில் விளக்கப்படுகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. செண்ட் தோமஸ் அக்வினாஸின் வரலாறு குறித்தும் அவரின் சில முக்கியமான சிந்தனைகள் குறித்தும் விளக்குதல்.
2. ஐரோப்பிய பொருளாதார வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கும் வணிக பொரளாதாரம் குறித்தும் வணிகவாதத்தின் தோற்றத்திற்கான காரணங்கள் குறித்தும் தெளிவுப்படுத்தல்.
3. வாணிகவாதிகளின் கோட்பாடுகள் குறித்த அறிமுகத்தை வழங்குதல்.

## கற்றல் பேறுகள்

1. செண்ட் தோமஸ் அக்வினாஸின் வரலாறு குறித்தும் அவரின் சில முக்கியமான சிந்தனைகள் குறித்தும் விளக்குவர்.
2. ஐரோப்பிய பொருளாதார வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கும் வணிக பொரளாதாரம் குறித்தும் வணிகவாதத்தின் தோற்றத்திற்கான காரணங்கள் குறித்தும் தெளிவுப்படுத்துவர்.
3. வணிகவாதிகளின் கோட்பாடுகள் குறித்த அறிமுகத்தை வழங்குவர்.

## 4.1 செண்ட் தாமஸ் அக்வினாஸ் (Saint Thomas Aquinas)

அறிஞர்கள் தங்கள் காலத்தில் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியில் சற்றே மாறுபட்ட பொருளாதார சிந்தனைகளை உருவாக்கினர். அவர்கள் தனியார் சொத்து நிறுவனம் மற்றும் வெறும் விலை மற்றும் வட்டி பற்றிய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர். காலத்திற்கேற்ப மெதுவாக அதிகரித்து வரும் பொருளாதார நடவடிக்கைகளுடன் மத போதனைகளை சமரசம் செய்வதற்கான ஒரு போராட்டமாக இது அமைந்தது.

தாமஸ் அக்வினாஸ் (1225 - 1274) ஓர் இத்தாலிய தத்துவஞானி மற்றும் தேவதூதர் ஆவார். இத்தாலியில், நேபிள்ஸுக்கு அருகிலுள்ள ரோக்கா செக்கா என்ற இடத்தில் ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்தவர். 1245 ஆம் ஆண்டில், அவர் பிரான்சின் பாரிஸில் ஆல்பர்டஸ் மேக்னஸிடம் கல்வி கற்க தொடங்கினார், மற்றும் அவருடைய விருப்பமான மாணவரானார்.

தாமஸ் 1252 ஆம் ஆண்டில் பாரிஸுக்குத் திரும்பினார். அங்கு அவர் ஒரு சிறந்த ஆசிரியர் மற்றும் இறையியலாளராக அறியப்பட்டார். அவர் போப்பாண்டவர் ஆலோசகராக ரோமில் சிறிது காலம் செலவிட்டார். சிறிது காலம் கற்பிப்பதற்காக பாரிஸுக்குத் திரும்பினார். பின்னர் நேபிள்ஸுக்குத் திரும்பி 1274 ஆம் ஆண்டில் ஒரு படிப்பகத்தைக் (House of studies) நிறுவினார். 1274 ஆம் ஆண்டில், பிரான்சின் லியோன்ஸில் உள்ள ஒரு தேவாலய சபைக்குச் செல்லும் வழியில், அவர் நோய்வாய்ப்பட்டு தனது 49 வயதில் இறந்தார்.

ஸ்காலஸ்டிக் எழுத்து என்பது பொருளாதாரச் செயல்பாட்டின் சில அம்சங்களை மதக் கோட்பாட்டுடன் படிப்படியாக ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது. பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்றவாறு அந்தக் கோட்பாட்டின் சில மாற்றங்களால்

அடையப்படுகிறது. செயின்ட் தாமஸ் அக்வினாஸின் கருத்துக்களின் முக்கியத்துவம் அரிஸ்டாட்டிலின் எழுத்துக்களுடன் மத போதனையை இணைத்ததில் உள்ளது. இது கல்விசார் பொருளாதாரக் கோட்பாட்டை அதன் உள்ளடக்கத்தின் பெரும்பகுதியுடன் வழங்கியது. அவரது கோட்பாடுகள் பின்வருமாறு அமைந்தது.

### i. தனியார் சொத்து (Private Property)

சென்ட் அக்வினாஸ் தனியார் சொத்து தொடர்பாக அரிஸ்டாட்டிலைப் பின்பற்றினார். இது தொடர்பாக இரண்டு பார்வைகள் உள்ளன. முதலில், பெறுவதற்கான சக்தி. இரண்டாவதாக, அதை செலவழிக்கும் விதம். சொத்துக்களைப் பெறுவதற்கான அதிகாரம் தனிநபரின் உரிமைகளை வழங்குகிறது. தனியார் சொத்து செல்வத்தின் உற்பத்தியை அதிகரிக்க வழிவகுக்கிறது.

தனியார் சொத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுடன் மதக் கோட்பாட்டை இணைப்பதற்கு முயற்சிக்கும் போது, அக்வினாஸ் தனியார் சொத்து, செல்வம் மற்றும் பொருளாதாரத்தில் வருமானத்தினை ஈட்டுவதை கண்டிக்கும் புனித அறிக்கைகளுடன் ஒப்பிட வேண்டியிருந்தது. ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனையானது, இயற்கை சட்டத்தின்படி வகுப்புவாத சொத்துக்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான சொத்துக்கள் இந்த இலட்சியத்திற்கு தடையாக இருப்பதாக கருதியது. எனவே, இயேசு கிறிஸ்து மற்றும் அவரது ஆதரவாளர்களின் வாழ்வில் காட்டப்பட்ட ஆரம்பகால கிறிஸ்தவ சமூகம் வகுப்புவாதமாக இருந்தது. ஆனால் ஆரம்பகால அறிஞர்கள் தனியார் சொத்துக்களை சாதாரண மனிதர்கள் வைத்திருப்பது மத போதனையுடன் பொருந்தாது என்பதை நிறுவ நீண்ட காலமாக போராடி வந்தனர்.

### ii. தனியார் சொத்து இயற்கை சட்டத்துக்கு முரணானது அல்ல (Private Property not Against Natural Law)

பதின்மூன்றாம் நூற்றாண்டில், அரிஸ்டாட்டிலின் எழுத்துக்கள் மேற்கு ஐரோப்பாவில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு தாமஸ் அக்வினாஸ் அரிஸ்டாட்டிலிய சிந்தனையை மாற்றியமைத்து, தனியார் சொத்து என்பது இயற்கை சட்டத்திற்கு முரணானது அல்ல என்று வகையில் வாதிட்டார். இயற்கைச் சட்டத்தின் கீழ் அனைத்து சொத்துக்களும் வகுப்புவாதமே என்று அவர் ஒப்புக்கொண்டாலும், தனியார் சொத்துக்களின் வளர்ச்சி என்பது இயற்கைச் சட்டத்திற்கு முரணானதல்ல மாறாக அதனை மேம்படுத்தக் கூடியது என்றும் அவர் கூறினார். அதாவது, நிர்வாணமாக இருப்பது என்பது இயற்கை விதியின்படி என்றும், ஆடை என்பது இயற்கை விதியினை மேம்படுத்தி மனிதனின் நலனுக்காக வடிவமைக்கப்பட்டது என்றும் அக்வினாஸ் வாதிட்டார். அதே காரணம் தனியார் சொத்துக்களுக்கும் பொருந்தும் என்கின்றார்.

''மனிதன் நிர்வாணமாக இருப்பது இயற்கை விதி என்று நாம் கூறலாம். ஏனென்றால் இயற்கை அவருக்கு ஆடைகளை வழங்கவில்லை. ஆனால் கலை அவற்றைக் கண்டுபிடித்தது. இந்த அர்த்தத்தில், எல்லாவற்றையும் இயற்கை விதி என்று கூறப்படுகிறது. ஏனெனில், உடைமையின் வேறுபாடு இயற்கையால் கொண்டு வரப்படவில்லை. ஆனால், மனித வாழ்வின் நன்மைக்காக மனித பகுத்தறிவால் வடிவமைக்கப்பட்டது''.

### iii. தனியார் சொத்துக்களை ஒழுங்குபடுத்தல் (Regulation of the Property)

மீண்டும் அரிஸ்டாட்டிலைத் தொடர்ந்து, அக்வினாஸ் தனியார் சொத்துக்களை அரசால் ஒழுங்குபடுத்துவதற்கு ஒப்புதல் அளித்தார். மற்றும் தனியார் சொத்துக்களின் சமமற்ற விநியோகத்தை ஏற்றுக்கொண்டார். இருப்பினும், பிளேட்டோவின் உணர்வில், அவர் இன்னும் வறுமை மற்றும் வகுப்புவாத வாழ்க்கையை ஆழ்ந்த மத

ஈடுபாடு கொண்டவர்களது இலட்சியமாக வாதிட்டார். ஏனெனில் வகுப்புவாத வாழ்க்கை அவர்கள் தங்கள் ஆற்றலின் பெரும் பகுதியை மத நடவடிக்கைகளுக்கு அர்ப்பணிக்க உதவியது.

### iv. வெறும் விலை (Just Price)

அக்வினாஸின் மிக முக்கியமான பங்களிப்பு வெறும் விலை. இந்த கோட்பாடு மதிப்பு என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. அவர் நேரம் மற்றும் இடத்தின் பயன்பாட்டை அங்கீகரித்தார். வெறும் விலை என்பது பொருளின் பயன்பாடு அல்லது பயனுடன் தொடர்புடையது. இருப்பினும், விலையை துல்லியமாக நிர்ணயிப்பது சாத்தியமில்லை என்று நம்பப்பட்டது.

இருப்பினும், சந்தையில் ஏற்ற இறக்கங்கள் காரணமாக வெறும் விலை மாறுபாடுகளுக்கு உட்பட்டது. விற்பனையாளர் பொருட்களை ஏதோ ஒரு வகையில் மேம்படுத்தியதாலோ அல்லது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதில் அவர் முன்னோக்கும் ஆபத்து காரணமாகவோ அவர் அதிக விலையை நிர்ணயிக்கலாம். எனவே விற்பனையாளருக்கு நஷ்டம் ஏற்பட வாய்ப்பிருந்தால் அதிக விலையை நிர்ணயிப்பது நியாயமானது.

பெறுமானம் உழைப்புக்கான செலவு உள்ளிட்ட செலவுகளுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்று நம்பியது. குறைபாடுள்ள பொருளை விற்பது மோசடியாக கருதப்பட்டது. சுருக்கமாக, மதிப்பு முழுமையானது மற்றும் செலவை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு சந்தை விலை அல்ல. வாங்குபவர் அல்லது விற்பவரின் மதிப்பீட்டிலிருந்து சுயாதீனமாக இருந்தது. “வெறும் விலை’’ என்பது தற்போதைய “நியாய மதிப்பு’’ போன்றது. இவ்வாறு அக்வினாஸ் “வெறும் விலை’’ மற்றும் “சந்தை விலை’’ ஆகியவற்றுக்கு இடையே வேறுபடுத்திக் காட்டினார். சட்டத்தால் மட்டுமே விலை நிர்ணயிக்கப்பட்டது என்கிறார்.

### v. வட்டி (Usury)

அதிக செல்வத்தை ஈட்டுவதற்காக கடன் கொடுப்பது பணம் சம்பாதிப்பதற்கான மோசமான வடிவமாக கருதப்பட்டது. ஹிப்ரூக்கள் போலவே, இடைக்காலத் தந்தைகளின் தேவாலயமும் வட்டி எடுப்பதைத் தடை செய்தது. மூலதனத்தின் இலாபகரமான முதலீட்டுக்கான வாய்ப்புகள் இல்லாததால், அதிக வட்டி விகிதம் ஏழைகளின் சுரண்டலாகக் கருதப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள் அசல் தொகையை திருப்பித் தரவில்லை என்றால் கடன் கொடுத்தவருக்கு இழப்பீடு கிடைக்கும்.

வட்டிக்கு எதிரான அவர்களின் நம்பிக்கைக்கு பல காரணிகள் காரணமாக இருந்தன. முக்கியமாக அரிஸ்டாட்டிலின் வாதம் வட்டியைக் கண்டிப்பதாக இருந்ததால் அது அக்வினாஸை பாதித்தது. அரிஸ்டாட்டிலால் மிகை கண்டனம் செய்யப்பட்டது. ஏனெனில் அவர் பணத்தை மலடாகக் கருதினார். அக்வினாஸ் ரோமானிய சட்டத்தின் கோட்பாட்டைப் பயன்படுத்தினார்.

இதன்படி, பொருட்கள் இரண்டு வகைகளாக இருந்தன. நுகர்வு மற்றும் நுகர்வு அல்லாத பொருட்கள். அதாவது, பயன்பாட்டில் நுகரப்படாத பொருட்கள். அவர் பணத்தை முதல் பிரிவில் வைத்து, “கடனைத் திரும்பப் பெறுவதற்கு கூடுதலாக வட்டி கோருவது இயற்கைக்கு மாறான மற்றும் நியாயமற்ற ஆதாயத்தைத் தேடுவதாகும்” என்று கூறினார். வட்டிக்கான ஆரம்ப கண்டனம் பைபிள் மற்றும் அரிஸ்டாட்டிலியன் கோட்பாட்டின் அதிகாரத்தின் மீது தங்கியிருந்தது. அக்வினாஸின் கைகளில் வட்டி மீதான ஆட்சேபனை மிகவும் ஆழமானது.

### vi. வர்த்தகம் (Trade)

வர்த்தகம் இயற்கைக்கு மாறானதாகக் கருதப்பட்டது. அவருக்கு அது கருணை நிலையில் இருந்தான வீழ்ச்சியைக் குறிக்கிறது. ஆனாலும் அவர் அதை அவசியமான தீமை என்று அங்கீகரித்தார். மேலும் அதை நியாயமானதாகக் கருதினார். பல்வேறு நாடுகளின்

வளங்களின் விநியோகத்தில் வேறுபாடுகள் காணப்படுவதால், உலகில் வர்த்தகம் இருக்க வேண்டும் என்று கடவுளே ஒப்புக்கொண்டதாக அக்வினாஸ் வாதிட்டார்.

இருப்பினும், பொதுமக்களின் நலனுக்காக மட்டுமே வர்த்தகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் வர்த்தகக் குழுக்கள் மோசடியான வணிக நடைமுறைகளை சரிபார்க்க விதிகளை வகுத்துள்ளன. வியாபாரிகள் தான் வாங்கும் பொருட்களை வழக்கத்திற்கு மாறான லாபத்திற்கு விற்பதன் மூலம் ஒரு வழியை மாற்றக் கூடாது. ஊக வணிகர்கள் மற்றும் இடைத்தரகர்களும் கண்டனம் செய்யப்பட்டனர்.

### vii. தொழிலாளர் பிரிப்பு (Division of Labour)

பொருளாதார நடவடிக்கைகளின் திறமையான செயல்திறனில் தொழிலாளர் பிரிப்பு அவசியமான நிபந்தனையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தப் பள்ளி ஒவ்வொரு தொழிலையும் அவசியமானதாகக் கருதியதுடன் உன்னதமானதாகவும் பொது சேவைக்கு வழிவகுத்ததாகவும் கருதியது.

## 4.2 வணிகவாதம்

### 4.2.1 அறிமுகம்

இங்கிலாந்தில் முதலில் வணிகவாதம் தோற்றம் பெற்றது. வணிகவாதம் என்பது பொருளாதார சிந்தனை வரலாற்றில் கி.பி 1450 – 1750 வரையான காலத்தில் நெதர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் காணப்பட்டது. வணிகவாதத்தில் பொன் மற்றும் வெள்ளியின் இருப்பை செல்வமாக கருதியதினால் வணிகவாதம் "தங்க வெள்ளிக் கோட்பாடு (bullunism)" என்ற பெயரைக் கொண்டிருந்தது.

மேலும், அக்காலத்தில் தங்கம், வெள்ளி போன்றன சில நாடுகளில் பெறப்பட்டதால் இவ்வளத்தை கொண்டிராத நாடுகள் வெளிநாட்டு

வர்த்தகம் மூலம் பிற நாடுகளிலுள்ள தங்கத்தையும் வெள்ளியையும் பெற்றுக் கொண்டன. இதனால் தங்கத்தையும் வெள்ளியையும் ஏற்றுமதி செய்வதற்கு சில நாடுகள் தடைவிதித்ததோடு இறக்குமதிகளுக்காக பெருமளவு தங்கமும் வெள்ளியும் பிற நாடுகளுக்குச் செல்வதனால் இறக்குமதியை குறைக்கின்ற கொள்கையை கடைபிடித்தனர். இதனால், ஏற்றுமதி அதிகரிப்பும் இறக்குமதி குறைப்பும் வணிகவாதத்தின் பிரதான கொள்கைகளாக காணப்பட்டன. சில பொருளாதார, அரசியல், மத மற்றும் கலாச்சார காரணிகள் வணிகவாதத்தின் தோற்றத்திற்கு காரணமாக இருந்தன.

### 4.2.2 வணிகவாத கருத்துக்கள் தோன்றியமைக்கான காரணங்கள்

#### i. பொருளாதார காரணிகள்

15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மக்களின் பொருளாதார வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டன. உள்நாட்டுப் பொருளாதாரம் பண்டமாற்று பொருளாதாரத்திற்கும் விவசாயம் தொழிலுக்கும் வழி வகுத்தது. தங்கம் மற்றும் வெள்ளி வடிவில் கிடைத்த பணத்தை வர்த்தகத்திற்கு பயன்படுத்தினர். வர்த்தக விரிவாக்கத்துடன் போக்குவரத்து, விவசாயம், மக்கள்தொகை போன்றவற்றில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இந்த வளர்ச்சிகளின் விளைவுதான் வணிகவாத சிந்தனையாகும்.

#### ii. அரசியல் காரணிகள்

இடைக்காலத்தின் இறுதியில் தேசியவாதம் வலுவான சக்தியாக மாற மறுமலர்ச்சி காரணமாக ஐரோப்பாவில் ஓர் அடிப்படை அரசியல் மாற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாக இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற பலம் வாய்ந்த நாடுகள் தோன்றின. நிலப்பிரபுத்துவம் முடிவுக்கு வர அரசன் மேலும் பலம் பெற்றான். ஒவ்வொரு தேசமும் தன் சுதந்திரத்தைப் பாதுகாக்க விரும்பி மற்ற நாடுகளை எதிரிகளாகக் கருதின. ஒரு வலுவான மற்றும் சக்திவாய்ந்த அரசை உருவாக்க, வணிகர்கள் மக்களின் அரசியல்

மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த முயன்றனர். மேலும் நாடுகள் தமது பலத்தை அதிகரிப்பதற்கு தங்கத்தையும் வெள்ளியையும் கருவியாகக் கருதினர்.

### iii. மதக் காரணிகள்

சீர்த்திருத்த இயக்கம் ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக கிளர்ச்சி செய்தது. ஆரம்பத்தில் ரோமன் கத்தோலிக்க திருச்சபை நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை கட்டுப்படுத்தியது. அரசியலிலிருந்து கிறிஸ்தவ மதம் வேறாக்கப்பட்டதால் தனியரசுகள் ஒவ்வொன்றும் பாப்பரசரின் கையில் இருந்து விடுப்பட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டதால் வணிகவாத கோட்பாடு எழுச்சியடைந்தது.

### iv. கலாச்சார காரணிகள்

கலாச்சார ரீதியாகவும் ஐரோப்பா ஒரு கூர்மையான மாற்றத்திற்கு உட்பட்டது. மறுமலர்ச்சி மக்களுக்கு ஒரு புதிய கற்றல் ஒளியைக் கொடுத்தது. பரலோக வாழ்க்கையை விட இந்த உலக வாழ்க்கையே முக்கியம் என்பதை மக்கள் உணர்ந்தனர். இதன் விளைவாக, மனித நடவடிக்கைகளில் பணம் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்தது. கலை மற்றும் இலக்கியத் துறைகள் மாற்றமடைந்ததுடன் கலாச்சார, வணிகப் பொருட்களின் நுகர்வு நடவடிக்கைகளும் வணிகவாதத்திற்கு வித்திட்டது.

### v. அறிவியல் காரணிகள்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் பெரும் முன்னேற்றங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டன. குறிப்பாக திசைகாட்டி மற்றும் அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. திசைகாட்டி புதிய நாடுகளின் கண்டுபிடிப்புக்கு வழிவகுத்தது. இவ்வாறு புதிய நாடுகள் பல்வேறு மூலப்பொருட்கள் மற்றும் சந்தைகளுக்கான வாயில்களைத்

திறந்தன. அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு புதிய யோசனைகள் மற்றும் அறிவைப் பரப்ப உதவியது.

### 4.2.3 வணிகவாதத்தின் பிரதானமான சிந்தனைகள்

#### i. வெளிநாட்டு வர்த்தகம்

இந்த கோட்பாட்டின் நோக்கம் அதிக அளவு விலைமதிப்பற்ற உலோகங்களைப் பெறுவதாகும். தங்கம் மற்றும் வெள்ளி பெறுவதற்கான ஒரே ஆதாரமாக வெளிநாட்டு வர்த்தகம் கருதப்பட்டது. தங்கம் மற்றும் வெள்ளி சுரங்கங்கள் இல்லாத அனைத்து நாடுகளும் வர்த்தகம் மூலம் வெளிநாடுகளில் இருந்து தங்கம் மற்றும் வெள்ளியைப் பெற்ற பிறகு செல்வந்த நாடுகளாக மாறலாம் என நம்பினர்.

ஏற்றுமதியின் மதிப்பு எப்போதும் இறக்குமதியை விட அதிகமாக இருக்க வேண்டும் என்று வணிகர்கள் வலியுறுத்தினர். அதன்படி ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் அரசின் நெருங்கிய நண்பராகவும், ஒவ்வொரு இறக்குமதியாளரும் எதிரியாகவும் கருதப்பட்டனர். பொதுவான வர்த்தக சமநிலை என்பது மற்ற நாடுகளுடனும் குறிப்பிட்ட நாட்டுடனும் நாட்டின் வர்த்தகத்தின் சமநிலையைக் குறிக்கிறது.

#### ii. வர்த்தகம் மற்றும் தொழில்

வணிகர்கள் வர்த்தகம் மற்றும் தொழில்துறையை தேசிய பொருளாதாரத்தின் மிக முக்கியமான கிளைகளாக கருதினர். தொழில் மற்றும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் தேசிய உற்பத்தித் திறனை அதிகரிக்க அவர்கள் விரும்பினர். நாட்டின் வலிமைக்கு விவசாயம் நேரடியாக பங்களிக்கவில்லை என்று அவர்கள் நினைத்தார்கள்.

### iii. மக்கள் தொகை

தேசத்தை இராணுவ ரீதியாக வலிமையாக்குவதற்கும் அதன் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் வணிகவாதிகள் அதிக மக்கள் தொகையை ஊக்குவித்தனர். மலிவு மற்றும் ஏராளமான தொழிலாளர் நிரம்பல் உற்பத்திச் செலவைக் குறைக்கும் என்று அவர்கள் நம்பினர்.

இது ஒரு நாடு தனது பொருட்களை குறைந்த விலையில் சர்வதேச சந்தையில் விற்க உதவும். டேவனன்ட்டின் கருத்துப்படி, ”மக்கள் ஒரு நாட்டின் உண்மையான பலம்” என்கிறார். வணிகர்கள் குடியேற்றத்தை ஊக்குவித்தனர், ஏனெனில் அவர்கள் செல்வத்தை கொண்டு வந்து நாட்டை வளப்படுத்துவார்கள் எனக் கருதப்பட்டது.

### iv. இயற்கை வளங்கள்

வணிகர்கள் அனைத்து இயற்கை வளங்கள் மூலம் உச்ச பயனடையவும், அதிக உற்பத்தி செய்யவும், அதிகமாக ஏற்றுமதி செய்யவும், குறைவாக இறக்குமதி செய்யவும் விரும்பினர். உணவுப் பிரச்சினையைத் தீர்க்க விவசாயத்திற்கும் முக்கியத்துவம் அளித்தனர். தேவையான மூலப்பொருட்களை வழங்குவதற்காக காலனித்துவ ஆட்சிகள் உருவாக்கப்பட்டன.

### v. ஊதியம் மற்றும் வாடகை

வணிகர்கள் உற்பத்தி பிரச்சனைகளை மட்டுமே விவாதித்தனர். எனவே அவர்கள் விநியோகம், குறிப்பாக ஊதியம் மற்றும் வாடகை பிரச்சினைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

### vi. வட்டி

பிரபல வணிகர் எழுத்தாளர் சர் தாமஸ் முன், ஏழைகள் மற்றும் இளம் வணிகர்களுக்கு கடன் கொடுப்பது உதவும் என்ற அடிப்படையில் கடன்களுக்கு வட்டி எடுப்பதை விரும்பினார். இது விதவைகளின் சேமிப்புக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியது.

நாட்டின் தொழில்துறை நிலைமைகளைப் பொறுத்து வட்டி விகிதம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும் என்று தாமஸ் முன் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்கள் தெரிவித்தனர்.

### vii. செல்வம்

வணிகர்களின் அடிப்படை நோக்கம் நாட்டை வலிமையாக்குவதுதான். நாட்டின் பலம் நாட்டின் செல்வத்தில் காணப்படுகிறது என்கின்றனர். குறிப்பாக தங்கம் மற்றும் வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்களை செல்வத்தின் பகுதி என்கின்றனர். நாட்டின் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் செல்வத்தை மையமாகக் கொண்டிருந்தன.

பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமானியம் மற்றும் இடைக்காலம் முழுவதும் அதிகாரம் புதையல் அல்லது விலைமதிப்பற்ற உலோகங்களின் குவிப்புக்கு ஒத்ததாகக் கருதப்பட்டது.

### viii. பொருளாதாரத்தில் அரசின் பங்கு

வணிகவாதிகள், மக்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் உச்ச சக்தியாக அரசை கருதினர். அரசு எஜமானராகவும் அதன் குடிமக்கள், ஊழியர்களாகவும் இருந்தனர். சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசின் தலையீடு அவசியம் என்று வணிகர்கள் நம்பினர். போர்களில் வெற்றி பெறுவதற்கு வலுவான தேசம் தேவை என்று அவர்கள் நம்பினர்.

ஏற்றுமதி மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க சிறப்பு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தொழில்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஏனெனில் அவற்றின் முக்கிய நோக்கம் சாதகமான வர்த்தக சமநிலையை பராமரிப்பதாகும். அரசு இறக்குமதி வரிகளுடாக வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். இவ் வருவாயானது ஏற்றுமதி மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டும் என்கிறார்கள்.

### 4.2.4 வணிகவாதத்தின் மீதான விமர்சனங்கள்

i. தங்கமும் வெள்ளியும் செல்வத்தின் ஒரு பகுதி மட்டுமே. இவற்றை விட ஏனைய உலோகங்கள், விவசாய மற்றும் கைத்தொழில் இருப்புக்கள் ஆகியன அதிக செல்வம் ஈட்டுவதற்கு வழிவகுக்கின்றன.

ii. எவ்வித கோட்பாட்டு விளக்கங்களும் இன்றி மிகை வர்த்தக நிலுவையைப் பேண வேண்டும் என வலியுறுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

iii. எல்லா நாடுகளும் மிகை வர்த்தக நிலுவை கொள்கையை கடைபிடித்தால் வர்த்தகம் நடைபெறாததுடன் பொருளாதாரம் ஸ்தம்பிதம் அடையும். இது ஒரு பக்கச்சார்பான கருத்தாக கொள்ளப்படுகிறது.

iv. வணிகத்தினூடாக கிடைக்கப்பெறும் வருமானம் விவசாயம் மற்றும் கைத்தொழில் உற்பத்திகளில் கிடைக்கும் வருமானத்தை விட அதிகம் என்பதால் உற்பத்திக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் குறைவாக காணப்படுகின்றது.

v. சனத்தொகை பெருக்கமானது அதிக ஊழியத்தை உருவாக்குவதன் மூலம் பொருட்கள் சேவைகளின் உற்பத்திச் செலவினை குறைக்கும் என்பது ஏற்க முடியாததாகும். ஊழியர்களின் உற்பத்தி திறன் ஊடாக உற்பத்தியைப் பெருக்குவதை தவிர்த்து சந்தைவிலை ஊடாக உற்பத்தியை பெருக்குவது தவறான கருத்தாகும்.

vi. வணிகம் சார்ந்த கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஏனைய துறைகள் சார்ந்த கருத்துக்கள் தெளிவற்றதாக காணப்படுகிறது. வணிகம் மட்டும் பொருளியல் அல்ல.

vii. ஒரு தேசத்தின் ஆதாயம் இன்னொரு தேசத்தின் இழப்பு என்ற அவர்களின் நம்பிக்கை தவறானது.

viii. “பயன்பாடு“ மற்றும் “மதிப்பு“ பற்றிய அவர்களின் கருத்துக்கள் தெளிவற்றவை மற்றும் சுருக்கமானவை.

ix. மூலதனம் மற்றும் வட்டி பற்றிய அவர்களின் கருத்துக்கள் பூரணமற்றதாக இருந்தன.

## சுருக்கம்

- ✓ அறிஞர்கள் தங்கள் காலத்தில் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியில் சற்றே மாறுபட்ட பொருளாதார சிந்தனைகளை உருவாக்கினர்.
- ✓ தாமஸ் அக்வினாஸ் (1225 - 1274) ஓர் இத்தாலிய தத்துவஞானி மற்றும் தேவதூதர் ஆவார்.
- ✓ ஸ்காலஸ்டிக் எழுத்து என்பது பொருளாதாரச் செயல்பாட்டின் சில அம்சங்களை மதக் கோட்பாட்டுடன் படிப்படியாக ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது.
- ✓ இது கல்விசார் பொருளாதாரக் கோட்பாட்டை அதன் உள்ளடக்கத்தின் பெரும்பகுதியுடன் வழங்குகின்றது.
- ✓ இங்கிலாந்தில் வணிகவாதம் தோற்றம் பெற்றது. வணிகவாதம் என்பது பொருளாதார சிந்தனை வரலாற்றில் கி.பி 1450 – 1750 வரையான காலத்தில் நெதர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் காணப்பட்டது.
- ✓ ஏற்றுமதி அதிகரிப்பும் இறக்குமதி குறைப்பும் வணிகவாதத்தின் பிரதான கொள்கைகளாக காணப்பட்டன.

## பயிற்சி வினாக்கள்

1. அக்வினாசின் வரலாற்றினை சுருக்கமாக விளக்கி அவறின் கொள்கைகளை ஆராய்க.

2. வணிகவாதிகள் குறித்து சுருக்கமாக விபரிக்குக.

3. வணிகவாதிகளின் தோற்றத்திற்கான காரணங்களை விளக்குக.

4. வணிகவாதிகளின் பொருளாதார கருத்துக்களினை விளக்குக.

5. வாணிகவாதிகள் குறித்த விமர்சனங்களை ஆராய்க.

## திறவுச் சொற்கள்

தனியார் சொத்து, இயற்கை சட்டம், வெறும் விலை, வட்டி, வர்த்தகம், தொழிலாளர் பிரிப்பு, மக்கள் தொகை, இயற்கை வளங்கள், ஊதியம், செல்வம், அரசின் பங்கு

## உசாத்துணைகள்

Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 05

## பழம் பொருளியல் பொருளாதாரக் கொள்கைகள்

**அத்தியாயம் 05**.........................................................................43

5.1 அடம் ஸ்மித் (1723 – 1790).............................................45

5.1.1 வாழ்க்கை வரலாறு ........................................................45

5.1.2 அடம்ஸ்மித்தின் சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்கள்...........................................................................45

5.1.3 அடம்ஸ்மித்தின் பொருளாதார சிந்தனைகள்.....................46

5.1.4 அடம்ஸ்மித் மீதான விமர்சனம் .........................................52

5.2 டேவிட் ரிக்கார்டோ (David Ricardo 1772 -1823) .............53

5.3 ஜெரிமி பென்தம் Jeremy Bentham (1748 - 1832)...........56

5.3.1 பயன்பாட்டுக் கொள்கை ..................................................56

5.3.2 விமர்சனம் ......................................................................57

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது பழம் பொருளியல் பொருளாதாரக் கருத்துக்களை விளக்குகின்றது. அடம்ஸ்மித்தின் வரலாறு மற்றும் அவரது முக்கியமான பொருளாதாரக் கோட்பாடுகளுடன் அவர் தொடர்பாக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களையும் விளக்குகின்றது. அத்தோடு டேவிட் ரிகார்டோ குறித்த அறிமுகத்தையும் அவரால் முன்வைக்கப்பட்ட முக்கியமான கோட்பாடுகளையும் எடுத்துக் கூறுகின்றது. ஜெரமி பென்தம் குறித்தும் அவரது பயன்பாட்டுக்கோட்பாட்டுன் அவருக்கு முன்வைக்கப்பட்ட விமர்சனங்களையும் தெளிவுப்படுத்துகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. அடம்ஸ்மித்தின் வரலாறு மற்றும் அவரது முக்கியமான பொருளாதாரக் கோட்பாடுகளை விளக்குதல்.
2. டேவிட் ரிகார்டோ குறித்த அறிமுகத்தையும் அவரால் முன்வைக்கப்பட்ட முக்கியமான கோட்பாடுகளையும் தெளிவுப்படுத்தல்.
3. ஜெரமி பென்தம் குறித்தும் அவரது பயன்பாட்டுக்கோட்பாடுகள் குறித்த அறிவினை வழங்குதல்.

## கற்றல் பேறுகள்

1. அடம்ஸ்மித்தின் வரலாறு மற்றும் அவரது முக்கியமான பொருளாதாரக் கோட்பாடுகளை விளக்கி அவரது கோட்பாடுகளை விமர்சிப்பர்.
2. டேவிட் ரிகார்டோ குறித்த அறிமுகத்தையும் அவரால் முன்வைக்கப்பட்ட முக்கியமான கோட்பாடுகளையும் தெளிவுப்படுத்துவர்.
3. ஜெரமி பென்தம் குறித்தும் அவரது பயன்பாட்டுக்கோட்பாடுகள் குறித்து விளக்கமளிப்பர்.

## 5.1 அடம் ஸ்மித் (1723 – 1790)

### 5.1.1 வாழ்க்கை வரலாறு

அடம்ஸ்மித் 1723 ஜூன் மாதம் 5ஆம் திகதி பிரித்தானியாவில் உள்ள ஸ்கொட்லாந்து என்ற இடத்தில் பிறந்தார். 1776 இல் இவர் எழுதிய "நாடுகளின் செல்வதத்தின் பண்பையும் அதன் உருவாக்கத்தையும் பற்றிய ஒரு விசாரணை" (An Enquiry in to The Nature and Causes of The Wealth of Nation) என்ற நூல் முக்கியமானதாகும். பொருளியலின் தந்தை என்ற பட்டத்தையும் பொருளியலின் மூலநூல் என்ற அந்தஸ்த்தினையும் இந்நூல் பெற்றுக் கொடுத்துள்ளது.

### 5.1.2 அடம்ஸ்மித்தின் சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்கள்

#### i. அரசியல் சூழல்

அடம்ஸ்மித்தின் பொருளாதார சுதந்திரம் பற்றிய கருத்துக்களுக்கு மூல காரணமாக இருந்தது அவர் வாழ்ந்த காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் சுதந்திர முன்னேற்றம் ஆகும். மேலும் அக்காலத்தில் பிரான்சில் வாழ்ந்த தலைசிறந்த சமூக, அரசியல் சிந்தனையாளர்களான ரூஸோ, வோல்டர் போன்றவர்களின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இவர், அரசியல் விடுதலையை பொருளாதார விடுதலைக்கு கொண்டுவர எண்ணினார். மேலும், குடியேற்றவாதம் இவருடைய சிந்தனையில் குறிப்பிடக் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

#### ii. பொருளாதாரக் காரணிகள்

வணிகவாதச் சிந்தனையானது கட்டுப்பாடுகளை பொருளாதாரத்தில் ஏற்படுத்தி பொருளாதார முறைபற்றியும் அரசின் தலையிடாக் கொள்கைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டியுள்ளது. அரசியல், சமூக விடுதலை இன்றி பொருளாதர வளர்ச்சி ஏற்பட முடியாது என்ற

சிந்தனை வலுவடைந்ததுடன் கைத்தொழில் புரட்சியால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திர கண்டுபிடிப்புக்கள் தொழிலில் ஊழியத்தின் பங்களிப்பையும் குறைத்தது. விவசாயப் புரட்சி விவசாய முதலாளித்துவத்திற்கும் கைத்தொழில் புரட்சி வணிக மற்றும் கைத்தொழில் முதலாளித்துவத்திற்கும் வித்திட்டது.

### iii. அறிஞர்களின் தொடர்பு

ஐரோப்பாவில் வாழ்ந்த பல துறைசார்ந்த அறிஞர்களுடன் இறுக்கமான தொடர்பினால் அடம்ஸ்மித்தின் பொருளாதாரச் சிந்தனையானது ஏற்பட்டது. கட்சிஸன், குஸ்னேயுடன், டேவிட் கியூம் போன்றவர்களுடனும் மேலும் பல பேராசிரியர்கள், வணிகத்தலைவர்கள், தொழிலதிபர்கள், உயர் பிரபுக்கள் போன்றவர்களின் தொடர்புகள் இருந்துள்ளன. இவர்களுடனான தொடர்புகள் மூலம் அனுபவ ரீதியாக தொழிலிலுள்ள நன்மை, தீமைகள், தடைகள், ஏனைய சவால்களைப் பற்றி அறிந்து கொண்டமையும் இவருடைய சிந்தனைகளின் உருவாக்கத்துக்கு காரணமாகும்.

## 5.1.3 அடம்ஸ்மித்தின் பொருளாதார சிந்தனைகள்

### i. ஊழியப் பிரிப்பு

நாடுகளின் செல்வம் என்ற புத்தகம் ‘‘ஊழிய பிரிப்பின்’’ முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. உழைப்பு செல்வத்தின் ஆதாரமாக இருந்தாலும், உழைப்பைப் பிரிப்பது உழைப்பின் உற்பத்தித்திறனையும் அதன் மூலம் ஒரு தேசத்தின் செல்வத்தையும் அதிகரிக்கும் என்கின்றார்.

ஆடம் ஸ்மித்தின் கூற்றுப்படி, ஊழிய பிரிப்பு என்பது ‘‘சமூக ஒத்துழைப்பின் ஓர் அமைப்பாகும்’’. ஒரு தனிப்பட்ட நபரால் மேற்கொள்ள முடியாத உற்பதிகளை ஊழியப் பிரிப்பின் மூலம் இலகுவாக மேற்கொள்ளலாம் என்பதை வலியுறித்தினார். ஊழிய பிரிப்பு என்பது தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக

பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு குறிப்பிட்ட வகை உழைப்பு, அனைவருக்கும் பொருட்களை உற்பத்தி செய்யும் சமூக உழைப்பாக மாற்றப்படுவதனை குறிக்கின்றது.

### ii. மூலதனம்

ஆடம் ஸ்மித் மூலதனத்தை தேசிய செல்வத்தின் ஊற்றாகக் கருதினார். அது உற்பத்தியில் அதிக பங்கு வகிக்கிறது. ஒரு தேசத்தின் செல்வம் உழைப்பைப் பிரிப்பதைப் பொறுத்தது. உழைப்பைப் பிரிப்பது மூலதனத்தால் நிர்வகிக்கப்படுகிறது என கூறுகின்றார். ஸ்மித்துக்கு மூலதன உருவாக்கம் என்பது தனிநபர்களின் சுயநலத்தின் தொடர்புகளின் விளைவாகும். உற்பத்தியின் விரிவாக்கம் ஒரு நாட்டில் முதலீட்டு விகிதத்தைப் பொறுத்தது. முதலீட்டின் விகிதம், சேமிப்பைப் பொறுத்தது. சேமிக்கும் திறன் வருமானத்தால் வரையறுக்கப்பட்டதுடன் சேமிப்பு மற்றும் முதலீட்டின் நோக்கம் இலாபம் ஆகும். இலாபமானது நிறுவன சூழலைப் பொறுத்தது என விளக்குகின்றார்.

வட்டி விகிதத்தில் சரிவு மூலதனத்தின் விநியோகத்தை அதிகரிக்கும் என்று அவர் நம்பினார். ஏனெனில், தொழில்முனைவோர் வட்டி விகிதத்தில் சரிவுடன் கடன் நிதி சந்தையில் நுழைவார்கள். ஆனால் ஸ்மித்தின் மூலதனம் பற்றிய கருத்துக்கள் பொருளாதார வல்லுனர்களிடையே சர்ச்சைகளை ஏற்படுத்தியது. ஓர் இடத்தில் உழைப்பை செல்வத்தின் ஆதாரமாகக் கருதினார். மற்றொரு இடத்தில் மூலதனத்தை செல்வத்தின் ஆதாரமாகக் கருதினார்.

### iii. விவசாயம்

ஆடம் ஸ்மித் இயற்பியல் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு விவசாயத்திற்கு உயர்ந்த இடத்தைக் கொடுத்தார்.

### iv. பணம்

வணிகத்தின் உலகளாவிய கருவியாகச் செயல்பட நாணயம் தேவைப்படுகிறது. எனவே பணம் என்பது பரிமாற்றத்தை எளிதாக்கும் ஒரு கருவியாகும். அது இல்லாமல் பெரிய அளவிலான உற்பத்தி மற்றும் வர்த்தகம் சாத்தியமில்லை. எனவே, இது தொழிலாளர் பிரிவினை நீடிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஸ்மித்தின் கூற்றுப்படி, பண்டமாற்று முறையில் உள்ள சிரமங்களை நீக்க பணம் தன்னிச்சையாக வளர்ந்தது. பணத்தின் இரண்டு முக்கிய செயல்பாடுகளான பரிமாற்ற ஊடகம் மற்றும் மதிப்பின் அளவு ஆகியவற்றை அவர் வலியுறுத்தினார். அவர் பணத்தைப் பொருட்களின் பெயரளவு விலையாகக் கருதினார்.

### v. மதிப்பு கோட்பாடு

ஆடம் ஸ்மித் மதிப்பைப் பற்றிய விவாதத்தைத் தொடங்கினார். பயன்பாட்டில் உள்ள மதிப்பு மற்றும் பரிமாற்றத்தின் மதிப்பு ஆகியவற்றை வேறுபடுத்தினார். முதலாவது பண்டத்தின் பயன்பாட்டையும், இரண்டாவது ஏனைய பொருட்களை கொள்வனவு சக்தியையும் குறிக்கிறது. ஸ்மித் பயன்பாட்டில் உள்ள மதிப்பு மற்றும் பரிமாற்றத்தின் மதிப்பு ஆகியவற்றுக்கு இடையே ஒரு வேறுபாட்டைக் காட்டினாலும், அவர் மாற்றத்தக்க மதிப்பின் உண்மையான அளவீட்டில் மட்டுமே அக்கறை கொண்டிருந்தார்.

மதிப்பின் நிர்ணயம் குறித்து, ஸ்மித் இரண்டு மதிப்பு கோட்பாடுகள் மூலம் விளக்கினார். அதாவது, உழைப்பு மதிப்பு மற்றும் உற்பத்தி செலவு மதிப்பு. உழைப்புதான் மதிப்பின் உண்மையான ஆதாரம் என்று ஸ்மித் நம்பினார். ஒரு பொருளின் மதிப்பு அதன் உற்பத்திக்காக செலவிடப்படும் உழைப்பின் அளவைப் பொறுத்தது.

எனவே, உழைப்பே மதிப்புக்குக் காரணம் என்ற கோட்பாடு முதன்முதலில் அரசியல் பொருளாதாரத்தின் தந்தையால்

உருவாக்கப்பட்டது. இதே கோட்பாடுதான் பிற்காலத்தில் முதலாளித்துவத்தை தாக்க கார்ல் மார்க்ஸால் பயன்படுத்தப்பட்டது.

ஆனால், ஸ்மித் தனது உற்பத்திச் செலவுக் கோட்பாட்டின் மதிப்பில் ஒரு முரண்பாடான பார்வையைக் கொடுத்தார். ஒரு பண்டத்தின் மதிப்பு அதன் உற்பத்திச் செலவை வைத்து நிர்வகிக்கப்படுகிறது என்றார். இது நிலம், உழைப்பு மற்றும் மூலதனத்திற்கான கொடுப்பனவுகளைக் கொண்டிருந்தது. இந்த இரண்டு கோட்பாடுகளுக்கு இடையே ஸ்மித்தால் தெளிவான தேர்வு செய்ய முடியவில்லை.

ஸ்மித் ஒரு பொருளின் விலையின் வெவ்வேறு கூறுகளுடன் இயற்கை விலை மற்றும் சந்தை விலை குறித்தும் விவாதித்தார். மேலும் ஒரு பண்டத்தின் உற்பத்தி என்பது உழைப்பு, நிலம் மற்றும் மூலதனத்தின் கூட்டு முயற்சியின் விளைவாகும். அத்தகைய சூழ்நிலையில், ஒரு பொருளின் விலை என்பது உழைப்பு, நிலம் மற்றும் மூலதனத்திற்கு வழங்கப்படும் வெகுமதிகளின் கூட்டுத்தொகையாகும் என்கின்றார்.

ஒவ்வொரு சமூகத்திலும் வட்டி, ஊதியம், இலாபம் மற்றும் வாடகை விகிதம் உள்ளது. இதை ஆடம் ஸ்மித் இயற்கையான விலை என்கின்றார். இது இலாபங்கள், ஊதியங்கள் மற்றும் வாடகை ஆகியவற்றின் இயற்கையான விகிதங்களை உள்ளடக்கிய விலையாகும்.

இதற்கு மாறாக சந்தை விலை உள்ளது. சந்தை விலை என்பது சந்தையில் நிலவும் மெய் விலை மற்றும் கேள்வி மற்றும் நிரம்பல் சக்திகளால் தீர்மானிக்கப்படுகிறது. சந்தையின் போட்டி பொறிமுறையானது நீண்ட காலத்திற்கு சமநிலை அல்லது இயற்கை விலையை நோக்கிய போக்கை உறுதி செய்கிறது.

சந்தை விலை இயற்கை விலையை விட அதிகமாக இருந்தால், நிரம்பல் அதிகரித்து சந்தை விலையை அதன் இயற்கை விலைக்குக் கொண்டு வரும். அதேபோல், சந்தை விலை இயற்கை

விலையை விட குறைவாக இருந்ததால், நிரம்பல் அதிகரித்து சந்தை விலையை இயற்கை விலைக்கு தள்ளும்.

## vi. விநியோகம் பற்றிய ஸ்மித்தின் சிந்தனைகள்

### a. வாடகை

வாடகை பற்றிய ஸ்மித்தின் சிந்தனைகள் சரியாக உருவாக்கப்படவில்லை. நிலத்தின் பயன்பாட்டிற்காக நில உரிமையாளருக்கு வழங்கப்படும் ஏகபோக விலையாக வாடகை கருதப்படுகிறது. ஆடம் ஸ்மித் மண்ணின் சிறப்பு மற்றும் இயற்கை சக்திகளின் காரணமாக வாடகையை பரிசாகக் கருதினார். விவசாயத்தில், அவர் இயற்கையுடன் ஒத்துழைத்து பணிபுரிந்தார். எனவே, நிலத்தை வாடகைக்கு எடுப்பது, நிலத்தின் உரிமையாளருக்கு உற்பத்திச் செலவுக்கு மேல் கிடைக்கும் ஒரு சிறப்பு மிகையாகும் என்கிறார்.

வாடகைக்கும் விலைக்கும் உள்ள தொடர்பு ஸ்மித்துக்கு தெளிவாக தெரியவில்லை. வாதத்தின் வசதிக்கேற்ப அவருடைய பார்வை மாறுகிறது. ஒரு இடத்தில், பொருட்களின் விலையை நிர்ணயிக்கும் வாடகையை அவர் கருதுகிறார். மற்றொரு இடத்தில், அதற்கு நேர்மாறான கருத்தை கொண்டுள்ளார்.

### b. ஊதியம்

அவர் கூலியை நிர்ணயிக்கும் காரணிகளாக ஊழிய கேள்வி மற்றும் நிரம்பலினைக் குறிப்பிடுகின்றார். தற்போதைய பொருட்களின் விலையைப் பொறுத்து, தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவில் தொழிலாளர் நிரம்பல் வரையறுக்கப்பட்டுள்ளது. ஊழிய கேள்வி, கிடைக்கும் இருப்பு அளவு, தேசிய மூலதனத்தின் அளவு ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகிறது.

விரிவடைந்து வரும் பொருளாதாரத்தில், உழைப்புக்கான அதிக கேள்வி காரணமாக அதிக ஊதியம் மேலோங்கும். ஒரு நிலையான

பொருளாதாரத்தில், ஊதியங்கள் வாழ்வாதார நிலைக்கு கீழே மூழ்கிவிடும்.

### c. இலாபம் மற்றும் வட்டி

அடம் ஸ்மித் இலாபத்தையும் வட்டியையும் தெளிவாக வேறுபடுத்தவில்லை. இலாபம் என்பது மூலதனத்தின் மீதான வருமானம். வட்டி என்பது இலாபத்தின் ஒரு பகுதியாகும். இது கடன் வாங்கிய மூலதனத்தின் பயன்பாட்டிற்காக உரிமையாளருக்கு செலுத்தப்பட வேண்டும். விறுவிறுப்பான வணிக நிலைமைகளில், ஊதியங்கள் அதிகரிப்பது, வட்டி மற்றும் இலாப விகிதத்தை குறைவாக வைத்திருக்கும் மேலும் மந்தமான சூழ்நிலையில், கூலி குறைந்து இலாபம் உயரும் என்கிறார்.

### vii. அரசின் தலையிடாக் கொள்கை

பிரன்ச் மொழியில் உள்ள Laissez Faire என்ற பதமானது ஆங்கிலத்தில் “Let People Do as They Please” எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. இவர் அரசாங்கம் உற்பத்தி முயற்சிகளில் தலையிடுவதை எதிர்க்கின்றார். அரசாங்கமானது சுதந்திர வர்த்தகத்தை அனுமதித்தால், அது பொருளாதார விரிவாக்கத்துக்கு இட்டுச் செல்லும் என வாதிட்டார். இதனால் இவர் இயற்கையான தாராண்மையை (Natural Liberty) வலியுறுத்தினார்.

அரசாங்கமானது ஏற்றுமதித் துறை, விவசாயத் துறை, ஒரு தொழிலை வழிப்படுத்தவோ, தொழில் முயற்சி மற்றும் வர்த்தகம் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதிலோ அரசாங்கம் தலையிடக் கூடாது என்கிறார். இக்கருத்து சுதந்திரமான சந்தைக்கு சார்பானதாகக் காணப்படுகின்றது. பொருளாதாரத்தில் அரசின் தலையிடாக் கொள்கையை சுயவிருப்பு விதி, போட்டி விதி, கேள்வி மற்றும் நிரம்பல் விதி மூன்று இயற்கைவிதிகளின் அடிப்படையில் விளக்குகிறார்.

அடம்ஸ்மித் அரச தலையீடு தேவையற்றது என்பதன் மூலம் அரசு தேவையில்லை என்பதனை கருதவில்லை. மாறாக உற்பத்தியில் அரசு தலையீடு செய்யக் கூடாது என்பதாகும். சட்டத்தையும் நீதியையும் உருவாக்கவும் அமுல்படுத்துவதற்கும் ஒரு பலமான அரசு அவசியமானது என்பதையும் அரசு தொழில் முயற்சிகளுக்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றார்.

### viii. சர்வதேச வர்த்தகம்

சர்வதேச வர்த்தகத்தில் உள்ள கோட்பாடுகளில் முக்கியமான இடத்தை வகிக்கும் முழு நன்மைக் கோட்பாடு அடம்ஸ்மித்தினால் விளக்கப்பட்டது. சுதந்திரமான அரச தலையீடுகள் அற்ற சர்வதேச வர்த்தகத்தை இவர் வலியுறுத்தியுள்ளார். இவர் கூறிய கருத்துக்கள் வர்த்தக முதலாளித்துவத்தின் எழுச்சிக்கு காரணமாக இருந்தாலும் வர்த்தகம் தொடர்பான கருத்துக்கள் வணிகவாதிகளின் கருத்துக்களில் இருந்து வேறுபடுகின்றது.

### 5.1.4 அடம்ஸ்மித் மீதான விமர்சனம்

i. இவருடைய ஒழுக்கம் பற்றிய கோட்பாடுகளுக்கும் நாடுகளின் செல்வம் பற்றிய கோட்பாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளன. ஒழுக்கக் கோட்பாடானது இரக்கம் பற்றியது. ஆனால் பொருளாதாரக் கோட்பாடு சுயநலம் சார்பானது. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரணானது.

ii. அடம்ஸ்மித் எழுதிய நாடுகளின் செல்வம் என்ற நூல் அது அமைக்கப்பட்ட ஒழுங்கில் முரண்பாடுகள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

iii. தனி மனித சுதந்திரம்.

iv. பணக்காரர்களை செல்வந்தர் ஆக்குவதற்கான பொருளாதாரப் பொறிமுறையையே வலியுறுத்தி இருக்கிறார்.

v. தன்னிச்சையாக இயங்கும் மறைகரம் விலைப் பொறிமுறை தொழிற்படுவதற்கு சந்தையில் பல நிறுவன ரீதியான மற்றும் நிறுவன ரீதியற்ற தடைகள் காணப்படுகின்றன. இதன்

விளைவாக சந்தைகள் தோல்வியடைகின்றன. எனவே அரசின் தலையீடு அவசியமானது என்கின்றனர்.

## 5.2 டேவிட் ரிக்கார்டோ (David Ricardo 1772 -1823)

பழம் பொருளியலாளர்களின் வரிசையில் அடம்ஸ்மித்துக்கு அடுத்து பொருளாதார சிந்தனையில் முக்கியத்தவம் பெறுபவர் டேவிட் ரிக்கார்டோ. ரிக்கார்டோவின் சிந்தனையில் உறுதியும் கருத்தில் தெளிவும் காணப்பட்டன. இதன் காரணமாக பொருளியலின் தந்தையாக அடம்ஸ்மித் இருந்தாலும் பழம்பொருளியலாளர்களின் தலைவராக ரிக்கார்டோ காணப்படுகின்றார்.

ரிக்கார்டோ 1772 ஆம் ஆண்டு லண்டனில் பிறந்தார். 1817 ஆம் ஆண்டு இவருடைய பிரபலமான நூலான ‘‘அரசியல் பொருளாதாரத்தின் தத்தவங்கள் மற்றும் வரி’’ (Principles of Political Economy and Taxation) என்ற நூல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1810 இல் ‘‘தங்கத்தின் உயர்வான விலை பணத்தின் பெறுமதி வீழ்ச்சிக்கான சான்று’’ என்ற கையேட்டு நூலையும் மற்றும், 1822 இல் ‘‘விவசாயத்துக்கான பாதுகாப்பு’’ என்ற நூலையும் வெளியிட்டார்.

### i. குறைந்து செல்லும் விளைவு விதி மற்றும் செலவுக் கோட்பாடு

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளீடுகளை நிலையாகக் கொண்டு ஓர் உள்ளீட்டினை மாற்றுகின்ற போது மொத்த உற்பத்தி அதிகரிக்க எல்லை உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்வதனை குறைந்து செல்லும் விளைவு விதி விளக்குகின்றது. விவசாயத்தறையில் குறிப்பிட்ட அளவு விவசாய நிலத்தையும் அதற்குப் பொருத்தமான மூலதனத்தையும் நிலையாகக் கொண்டு ஊழியத்தின் அளவை அதிகரிக்கின்ற போது நிலத்தில் இருந்து கிடைக்கின்ற மொத்த விளைச்சல் அதிகரித்துச் சென்று பின்னர் குறைவடைகின்றது. மேலும் மேலதிகமாக ஒவ்வொரு

ஊழியத்தையும் அதிகரிக்கின்ற போது பெறப்படுகின்ற மேலதிக உற்பத்தி (எல்லை உற்பத்தி) குறைவடைந்து செல்கின்றது. நிலத்துக்கு இருக்கின்ற இந்த பிரதான பண்பை முதன் முதல் வெளிப்படுத்தியவர் டேவிட் ரிக்கார்டோ ஆவார்.

எல்லை உற்பத்திக்கு சமமாகவே ஊழியத்துக்கான கூலி வழங்கப்படுகின்றது. எனவே, நாட்டின் சனத்தொகை அதிகரிக்கின்ற போது மொத்த ஊழிய நிரம்பல் அதிகரிக்கின்றது. இதனால் ஊழியத்துக்கான எல்லை உற்பத்தி வீழ்ச்சியடைகின்றது. இவ்வீழ்ச்சி கூலியின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது என்கிறார்.

### ii. பெறுமதிக் கொட்பாடு (Theory of Value)

ஒரு பொருளுக்கு இயற்கைப் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி என இரண்டு வகையான பெறுமதிகளை ரிக்கார்டோ குறிப்பிடுகின்றார். இயற்கைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு சந்தைப் பெறுமதி இருக்கும் என்கிறார். இயற்கை பெறுமதியானது பயன்பாட்டுப் பெறுமதி மற்றும் பரிமாற்றுப் பெறுமதி என இரண்டு வகையாக நோக்கப்படுகின்றது. நிரம்பல், அருமைத்தன்மை, பொருளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் ஊழியம் ஆகிய காரணிகளால் பயன்பாட்டுப் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது.

பொருட்களின் பெறுமதியானது மீள் உற்பத்தி செய்யக் கூடிய பொருட்கள் மற்றும் மீள் உற்பத்தி செய்ய முடியாத பொருட்களைப் பொறுத்து வேறுபடுகின்றது. மீள உற்பத்தி செய்யக் கூடிய இயற்கை வளங்களைச் சார்ந்த பொருட்கள் ஒப்பீட்டு ரீதியில் பெறுமதி குறைந்தனவாகும். மீள் உற்பத்தி செய்ய முடியாத அரியவகை ஓவியங்கள், சிலைகள், சிற்பங்கள் என்பன பெறுமதியில் உயர்ந்தவை என்கின்றார். ரிக்கார்டோ பொருட்களின் கேள்வியைப் பற்றி பெறுமதிக் கணிப்பில் கவனம் செலுத்தாமல் நிரம்பல் தான் பெறுமதியைத் தீர்மானிப்பதாக கூறுகின்றார்.

### iii. வாடகைக் கோட்பாடு (Theory of Rent)

பொருளியலில் வாடகைக் கோட்பாட்டில் அடிப்படையானவர் ரிக்கார்டோ ஆவார். உற்பத்திக் காரணியான நிலம் எவ்வாறு வாடகையை உழைக்கின்றது என்பதை விளக்குகின்றார். ரிக்கார்டோவின் கருத்தப்படி நிலப்பிரபுக்கள் அதிகளவான வருமானத்தை வாடகை மூலம் பெறுகின்றார்கள். இவ்வருமானப் பகிர்வு மூலம் அவர்கள் ஏனைய சமூக பிரிவினர்களை விட அதிகளவான வருமானத்தை உடையவர்களாக காணப்படுகின்றனர்.

இவருடைய வாடகைக் கோட்பாடானது நிலத்தின் தரத்தில் மற்றும் தன்மையிலிருந்து தோற்றம் பெறுகின்றது. அதிகமான செழிப்புத் தன்மையைக் கொண்ட நிலமானது அதிக வாடகையையும் குறைந்த செழிப்பத் தன்மையைக் கொண்ட நிலம் குறைந்த வாடகையையும் பெற முடியும் என விளக்குகின்றார். நிலத்தின் செழிப்புத் தன்மை குறைந்து செல்லும் விளைவு விதியுடன் தொடர்புடையது. ஒரு நிலத்தில் தொழிநுட்பத்தில் மாற்றமின்றி ஏனைய ஒரு உற்பத்திக் காரணியின் அளவை அதிகரிக்கும் போது எல்லை உற்பத்தி, நிலத்தின் செழிப்புத் தன்மை குறைவடைவதனால் குறைந்து செல்கின்றது. இவ்விதியினால் விளைச்சல் குறைவடைகின்றது. இது அந்த நிலத்தின் வாடகை வீழ்ச்சியடைந்து செல்லக் காரணமாக அமைகின்றது. ரிக்கார்டோ வாடகையை நில உரிமையாளர்களுக்கு கிடைக்கும் மீதியாக (Residual) கருதினார்.

### iv. சர்வதேச வர்த்தகம்

ரிக்கார்டோ அறிமுகப்படுத்திய குறிப்பிடத்தக்க கருத்துக்களில் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடும் ஒன்றாகும். இது ஒரு முழுமையான நன்மையாக இல்லாவிட்டாலும் எந்தவொரு குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியிலும், ஒப்பீட்டளவில் குறைந்த சந்தர்ப்ப செலவைக் கொண்ட பொருட்களின் உற்பத்தியில் நிபுணத்துவம் பெறுவதன் மூலம் ஒரு நாடு சர்வதேச வர்த்தகத்தில் இருந்து பயனடையலாம்

என்று கூறுகிறது. ரிக்கார்டோ சுதந்திர வர்த்தகத்தின் நிகர நன்மைகள் மற்றும் பாதுகாப்புவாத கொள்கைகளின் தீங்கு ஆகியவற்றுடன் முக்கியமாக தொடர்புடையவர். ரிக்கார்டோவின் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு இன்றுவரை விவாதிக்கப்படும் கிளைகளையும் விமர்சனங்களையும் உருவாக்கியது.

## 5.3 ஜெரிமி பென்தம் Jeremy Bentham (1748 - 1832)

தத்துவஞானியும், சட்டவியலாளருமான ஜெர்மி பெந்தம் (1748–1832) லண்டனில் உள்ள ஸ்பிடல்∴பீல்ட்ஸில் பிப்ரவரி 15, 1748 இல் பிறந்தார். இவர் முற்போக்கு வாதக் குழுவின் (Philosophical Radicals) தலைவர் எனவும் அழைக்கப்படுகிறார். தொன்மைக்கால நூல்கள் பென்தமின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டது. இவர் 1748 லண்டனில் பிறந்து பல அரிய நூல்களை எழுதினார். 1776ல் ‘அரசாங்கம் பற்றிய சிந்தனைகள்’ எனும் நூலையும் 1789ல் ‘ஒழுக்க நெறிகளும் சட்டமுறைகளும் பற்றிய அறிமுகம்’ என்ற நூலையும் வெளியிட்டார்.

### 5.3.1 பயன்பாட்டுக் கொள்கை

பயன்பாட்டுக் கொள்கையின் தத்துவம் “வாழ்க்கையின் குறிக்கோள் மனிதனின் இன்பமே” என்பதாகும். எந்த செயலில் ஈடுபடும் போதும் இன்பத்தைப் பெருக்கவும் துன்பத்தை குறைக்கவும் மனிதன் முயல்கிறான். அவை சுவை, சொத்து, நட்பு, நற்பண்பு, ஞாபகசக்தி, அதிகாரம், உயர்ந்தோர் உறவு போன்றனவாகும். இன்பத்தையும் துன்பத்தையும் உணர்வதில் பல சந்தர்ப்பங்களை கூறியுள்ளார். உதாரணமாக உடல்நலம், வயது, செல்வநிலை, கல்வி முதலியனவாகும்.

இவர் அன்பையும் துன்பத்தையும் அளந்து ஒப்பிட முடியும் என கூறுகிறார். இதனை அளப்பதற்குறிய கருவி பணம் என்கிறார். மனிதன் அடையும் ஒவ்வொரு வகையான செல்வமும் அவனுக்கு வெவ்வேறு வகையில் இன்பத்தை அளிக்கும். மிகுந்த செல்வமும்

மிதமான செல்வமும் உடைய இருவரை எடுத்தால் மிகுந்த செல்வம் உடையவரே அதிக இன்பத்தை பெறுவார் என்கின்றார்.

குறைந்து செல்லும் பயன்பாட்டு விதிக்கு ஏற்ப இவரது கருத்து விளக்கப்படுகிறது. பணமும் குறைந்து செல்லும் விதிக்கு கட்டுப்படுகிறது என்கிறார். தனது தத்துவத்தின் வாயிலாக அரசாங்க சட்டங்களையும் அமைப்புக்களையும் திருத்தியமைக்க முயன்றதுடன் அரசின் கடமை தனிமனிதனின் இன்பம் தேடும் முயற்சிக்கு பங்கம் வராமல் பாதுகாப்பதாகும் என்கிறார். எனவே அரசானது மக்களுக்கு அதிகமான நலன் கிடைக்க உதவிபுரிய வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார். இதனை அரசின் தலையிடாக் கொள்கையினாலேயே சிறப்பாக செயல்படுத்த முடியும் என்கிறார்.

இக்கொள்கை மூலம் அடம்ஸ்மித்தின் இயற்கை தத்துவம் தவறானது என்றும் இயற்கையினூடாக மனிதன் உரிமைகளைப் பெறுவது மூடத்தனம் என்றும் குறிப்பிடுகிறார். தனிமனிதனுக்கு எது நல்லது எது கெட்டது என தெரியும். எனவே, இவர் அரசின் தலையிடாக் கொள்கையை வலியுறுத்துகிறார். இவரது கருத்துக்கள் பொருளாதார அறிஞர்களுக்கு சிந்தனைகளை தூண்டுவதாக காணப்பட்டது.

### 5.3.2 விமர்சனம்

i. மிகப்பெரிய எண்களில் மிகப்பெரிய மகிழ்ச்சியைக் கணக்கிடுவதில் சிரமம் உள்ளது. வெற்றியின் எந்தவொரு உறுதிப்பாட்டுடனும் மிகப்பெரிய எண்ணிக்கையின் மிகப்பெரிய மகிழ்ச்சியைக் கணக்கிடுவது கடினம்.

ii. பெந்தம் மகிழ்ச்சியை மகிழ்ச்சியுடன் சமப்படுத்தினார் மற்றும் மகிழ்ச்சியை பெருமளவு இன்பத்தின் அளவுகளுக்குக் குறைத்தார். ‘இன்பங்களின் தொகை’ என்பது ஒரு கவர்ச்சியான வாக்கியமாக இருக்கலாம். ஆனால் மனித மகிழ்ச்சி அல்லது துன்பம் பற்றிய மதிப்பீடுகள் வரும்போது, பொருளாதாரத்தில் உள்ள எண்கணிதம், எண்கணிதத்தில் உள்ள பொருளாதாரத்தை விட அதிக உதவியாக

இருக்காது. அதிக எண்ணிக்கையிலான மகிழ்ச்சியைப் பின்தொடர்வதன் மூலம், நாம் மிகப்பெரிய மகிழ்ச்சியை உருவாக்குவோம் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

iii. தனிநபர்கள் வைத்திருக்கும் செல்வத்தின் சமத்துவம் அதிகமாக இருந்தால், மகிழ்ச்சியில் சமத்துவத்திற்கான வாய்ப்புகள் அதிகம் என்று பெந்தம் கருதினார். இந்த எண்ணம் தீவிரமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. இது சமூக பிரச்சனைகளுக்கு இயன்ற அளவு சிகிச்சைக்கான வழியை தயார் செய்கிறது.

iv. நான்காவதாக, ‘பயன்பாட்டின் கொள்கை’ என்பது ஒரு அகநிலைக் கருத்து. இது பொருளாதாரத்தை துல்லியமற்ற அறிவியலாக மாற்றும். அது ஒரு நெறிமுறைக் கருத்து என்பதால், பொருளாதாரம் நெறிமுறை அறிவியலாக மாறும். ஆனால் பொருளாதாரத்தை நேர்மறை அறிவியலாக மாற்றுவது நவீன போக்கு.

## சுருக்கம்

- ✓ பொருளியலின் தந்தை என்ற பட்டத்தையும் பொருளியலின் மூலநூல் என்ற அந்தஸ்த்தினையும் ‘‘தேசங்களின் செல்வம்’’ நூல் பெற்றுக் கொடுத்துள்ளது.

- ✓ அடம்ஸ்மித்தின் சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்களாக அரசியல் சூழல், பொருளாதாரம், அறிஞர்களின் தொடர்பு போன்றன காணப்படுகின்றன.

- ✓ ஊழியப் பிரிப்பு, மூலதனம், விவசாயம், பணம், மதிப்பு கோட்பாடு, விநியோகம், அரசின் தலையிடாக் கொள்கை, சர்வதேச வர்த்தகம் போன்றன அடம்ஸ்மித்தின் பொருளாதார சிந்தனைகளாகும்.

- ✓ பழம் பொருளியலாளர்களின் வரிசையில் அடம்ஸ்மித்துக்கு அடுத்து பொருளாதார சிந்தனையில் முக்கியத்தவம் பெறுபவர் டேவிட் ரிக்கார்டோ.

- ✓ ரிக்கார்டோவின் சிந்தனையில் விவசாயத்தில் குறைந்து செல்லும் விளைவுகள், பெறுமதிக் கோட்பாடுகள், வாடகைக் கோட்பாடு, கூலிக்கோட்பாடு என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

- ✓ தொன்மைக்கால நூல்கள் பென்தமின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டன.

- ✓ குறைந்து செல்லும் பயன்பாட்டு விதிக்கு ஏற்ப பென்தமினுடைய கருத்து விளக்கப்படுகிறது.

## பயிற்சி வினாக்கள்

1. அடம்ஸ்மித்தின் பொருளாதா சிந்தனைக்கு வழிவகுத்த காரணிகளை விளக்குக.
2. அடம்ஸ்மித்தின் பொருளாதா சிந்தனைகளை ஆராய்க.
3. அடம்ஸ்மித்தின் பொருளாதார கருத்துக்களை விமர்சன ரீதியாக ஆராய்க.
4. டேவிட் ரிகார்டோவின் பொருளாதார பங்களிப்புக்களை விளக்குக.
5. ஜெரமி பென்தமின் கருத்துக்களை விளக்கி அவர் தொடர்பாக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை பரீட்சிக்குக.

## திறவுச் சொற்கள்

அரசியல் சூழல், பொருளாதாரம், அறிஞர்களின் தொடர்பு, ஊழியப் பிரிப்பு, மூலதனம், விவசாயம், பணம், மதிப்பு, விநியோகம், அரசின் தலையிடாக் கொள்கை, சர்வதேச வர்த்தகம், பெறுமதி, வாடகை

## உசாத்துணைகள்


Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 06

## எல்லை நிலைப் புரட்சி

**அத்தியாயம் 06**..........................................................................61

எல்லை நிலைப் புரட்சி..........................................................................61

6.1 ஆஸ்திரியக் குழு (Austrian School)................................63

6.1.1 பொருளாதார சிந்தனைகள்..............................................63

6.2 வில்லியம் ஸ்டேன்லி ஜேவோன்ஸ் (William Stanley Jevons) (1835-1882)......................................................64

6.2.1 அறிமுகம்.........................................................................64

6.2.2 பொருளாதார சிந்தனைகள்..............................................65

6.3 லியோன் வால்ராஸ் (Leon Walras) (1834-1910)..............67

6.3.1 அறிமுகம்.........................................................................67

6.3.2 பொருளாதார சிந்தனைகள்..............................................67

6.4 கார்ல் மெங்கர் (Carl Menger) (1840-1921)......................69

6.4.1 அறிமுகம்.........................................................................69

6.4.2 பொருளாதார சிந்தனைகள்..............................................70

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது எல்லை நிலைப் புரட்சியில் பங்கு கொண்ட பொருளியல் அறிஞர்களின் பொருளாதார கோட்பாடுகளை தெளிவுப் படுத்துகின்றது. வில்லியம் ஸ்டேன்லி ஜேவோன்ஸ், லியோன் வால்ராஸ், கார்ல் மெங்கர் போன்றவர்களின் பொருளாதாரக் கருத்துக்கள் விளக்கப்படுகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. வில்லியம் ஸ்டேன்லி ஜேவோன்ஸ் இன் முக்கியமான பொருளாதாரக் கோட்பாடுகளை விளக்குதல்.
2. லியோன் வால்ராஸ் குறித்த அறிமுகத்தையும் அவரால் முன்வைக்கப்பட்ட முக்கியமான கோட்பாடுகளையும் தெளிவுப்படுத்தல்.
3. கார்ல் மெங்கர் குறித்தும் அவரது பயன்பாட்டுக் கோட்பாடுகள் குறித்த அறிவினையும் வழங்குதல்.

## கற்றல் பேறுகள்

1. வில்லியம் ஸ்டேன்லி ஜேவோன்ஸ் இன் முக்கியமான பொருளாதாரக் கோட்பாடுகளை விளக்குவர்.
2. லியோன் வால்ராஸ் குறித்த அறிமுகத்தையும் அவரால் முன்வைக்கப்பட்ட முக்கியமான கோட்பாடுகளையும் தெளிவுப்படுத்துவர்.
3. கார்ல் மெங்கர் குறித்தும் அவரது பயன்பாட்டுக் கோட்பாடுகள் குறித்த அறிவினையும் வழங்குவர்.

## 6.1 ஆஸ்திரியக் குழு (Austrian School)

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த பொருளாதார அறிஞர்கள் கார்ல் மெங்கர், வான்வீசர், பாம்பவர்க் போன்றவர்களால் தோன்றியது எல்லைநிலைவாதமாகும். இது பழம்பொருளியல் பொருளாதாரத்திற்கு எதிரானதாகும். பொருட்களின் மதிப்பு உழைப்பால் நிர்ணயிக்கப்படுகின்றது என்பது பழம்பொருளியல் கொள்கையாக இருக்க எல்லைநிலைவாதம் பொருட்களின் பெறுமதி அதன் எல்லைப் பயன்பாட்டைப் பொறுத்து (மனித விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு) தீர்மானிக்கப்படுவதாக கூறுகின்றது. எல்லைநிலை வாதிகள் பெறுமதி என்பது மனிதனின் உள்ளத்திலிருந்து உதயமாவதாகும். ஆதலால், ஒவ்வொருவருக்கும் அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு பயன்வேறுபடும் என்கின்றனர்.

### 6.1.1 பொருளாதார சிந்தனைகள்

#### i. குறைந்து செல்லும் எல்லை விதி (Law of Diminishing Marginal Utility)

ஒரு பொருளை ஆரம்பத்தில் நுகரும் போது அதன் பயன் அதிகமாயிருக்கும். ஆனால் தொடர்ந்தேச்சயாக நுகரும் போது அதன் பயன் குறைவடைந்து செல்லும். அதாவது ஓரளவுக்கு மேல் நுகரும்போது பயன்பாடு எதிர்மறையாகும். இதுவே குறைந்து செல்லும் எல்லைப் பயன்பாட்டு விதி ஆகும். ஏனெனில் பயன்பாட்டை இன்ப, துன்ப அளவுகோல்களால் அளக்கலாம் என்று 19 ஆம் நூற்றாண்டு பொருளாதார அறிஞர்கள் சிலர் கருதினர்.

#### ii. சம எல்லைநிலைப் பயன்பாட்டு விதி (Law of Equi-Marginal Utility)

மனிதன் குறைந்த செலவில் அதிக பயனை பெறவே விரும்புகின்றான். ஒவ்வொவ்வொரு மனிதனும் அவன்

கொள்வனவு செய்ய விரும்பும் அனைத்துப் பொருட்களின் எல்லைநிலைப் பயன்பாடும் சமமாகும் வரை தனது வருமானத்தை செலவிடுவான். இதுவே சமஎல்லை நிலைப் பயன்பாட்டு விதி எனப்படும்.

### iii. மதிப்பு முரண்பாடு (Paradox of Value)

பொருள் மதிப்பு முரண்பாட்டை விளக்கியவர்கள் எல்லைநிலை வாதிகள் ஆகும். உதாரணமாக நீரின் பயன்பாடு வைரத்தின் பயன்பாட்டினை விட அதிகமாக காணப்பட்ட போதிலும் வைரத்தின் பெறுமதி நீரின் பெறுமதியிலும் பல மடங்களாகும். இங்கு நீரின் பெறுமதி பயன் பெறுமதியாகவும் வைரத்தின் பெறுமதி பரிமாற்ற பெறுமதியாகவும் இருக்கும்.

### iv. பொருட்களின் பாகுபாடு (Order of Goods)

ஆஸ்திரியப் பொருளியலாளர் மெங்கர் பொருட்களை முதலாம், இரண்டாம், மூன்றாம் வரிசைப் பொருட்கள் என நுகர்வோரின் விருப்பத்தை நிறைவேற்றும் தன்மையில் பொருட்களை வகைப்படுத்துகின்றார். நுகர்வோர் உடனடியாக நுகரக்கூடிய பொருள் முதல்வரிசைப் பொருள்.

## 6.2 வில்லியம் ஸ்டேன்லி ஜேவோன்ஸ் (William Stanley Jevons) (1835-1882)

### 6.2.1 அறிமுகம்

இங்கிலாந்தின் லிவர்பூலில் பிறந்த ஜெவோன்ஸ் லண்டனில் உள்ள பல்கலைக்கழக கல்லூரியில் வேதியியல் மற்றும் தாவரவியல் பயின்றார். 1847 இல் அவரது தந்தையின் வணிகத்தின் திவால்நிலை காரணமாக, ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள மின்ட் நிறுவனத்தில் மதிப்பீட்டாளர் பதவியைப் பெறுவதற்காக ஜீவன்ஸ் பள்ளியை விட்டு வெளியேறினார். அவர் ஐந்து

ஆண்டுகள் அங்கேயே இருந்தார். இங்கிலாந்து திரும்பியவுடன் பல்கலைக்கழக கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்தார். பின்னர் அவர் தனது அல்மா மேட்டரில் அரசியல் பொருளாதாரத்தில் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டார் மற்றும் 1880 இல் அங்கிருந்து ஓய்வு பெற்றார்.

### 6.2.2 பொருளாதார சிந்தனைகள்

#### i. எல்லைநிலைப் புரட்சி

எல்லை நிலைப் புரட்சியினை ஒரே நேரத்தில் முன்னெடுத்துச் சென்ற மூன்று பேரில் வில்லியம் ஜெவோன்ஸ் ஒருவர். லியோன் வால்ராஸ் மற்றும் கார்ல் மெங்கர் உட்பட வில்லியம் ஜெவோன்சும் நுகர்வோர் நடத்தையைப் புரிந்து கொள்ளவும் விளக்கவும் எல்லை நிலை பயன்பாட்டுக் கோட்பாட்டை உருவாக்கினர். ஒரு பண்டத்தின் ஒவ்வொரு மேலதிக அலகின் உபயோகம் (மதிப்பு) அதிகரிக்க நுகர்வோருக்கு பயன் குறைவாக இருக்கும் என்று எல்லை நிலை பயன்பாடு கோட்பாடு கூறுகிறது.

இந்த கோட்பாடானது பழம் பொருளியல் மதிப்புக் கோட்பாட்டிலிருந்து விரிவுப்படுத்தப்பட்டதாகும். இவ்வாறே இன்றும் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் புதிய பழம்பொருளியல் பள்ளி தொடங்கியது. ஜீவன்ஸ் ‘‘பரிமாற்றத்தின் சமன்பாட்டை’’ வரையறுத்தார். இது ஒரு நுகர்வோன் தனது பயன்பாட்டை அதிகரிக்க, ஒவ்வொரு பொருளின் எல்லை பயன்பாட்டின் விகிதம் அதன் விலைக்கு சமமாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அவ்வாறு இல்லையெனில், நுகர்வோர் கொடுக்கப்பட்ட வருமானத்துடன், நுகர்வை மீழ் ஒதுக்கீடு செய்து அதிக பயன்பாட்டைப் பெறலாம்.

#### ii. நிலக்கரி கேள்வி (The Coal Question)

ஜீவன்ஸ் பொருளாதாரத்தின் உற்பத்திப் பக்கத்தில் மிகக் குறைவான சிந்தனையை வெளிப்படுத்தினார். அதனால்தான், அவர் தனது The Coal Question என்ற புத்தகத்திற்காக பிரிட்டனில்

பிரபலமானார். அதில் பிரிட்டனின் தொழில்துறை உயிர்ச்சக்தி நிலக்கரியைச் சார்ந்தது என்றும், அதனால், அந்த வளம் தீர்ந்துவிடும் என்றும் அவர் எழுதினார். நிலக்கரி இருப்பு தீர்ந்ததால், நிலக்கரியின் விலை உயரும் என்று எழுதினார். ஆழமான சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைப் பிரித்தெடுப்பது உற்பத்தியாளர்களுக்கு சாத்தியமாகும். தொழில்துறை வல்லரசாக அமெரிக்கா உயரும் என்றும் அவர் வாதிட்டார். பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் அவரது கணிப்பு சரியானது என்றாலும், அதிக விலையுயர்ந்த சுரங்கப்படுத்துவதற்கான ஊக்குவிப்பு குறித்து அவர் சரியாக இருந்தபோதிலும், நிலக்கரியின் விலைதான் முக்கிய காரணி என்பதில் அவரது கருத்து தவறாக இருந்தது. ஒரு வலு மூலத்தின் விலை உயரும் போது, தொழில்முனைவோருக்கு மாற்று மூலங்களைக் கண்டுபிடிப்பதற்கும், உருவாக்குவதற்கும் மற்றும் உற்பத்தி செய்வதற்கும் வலுவான ஊக்கம் உள்ளது என்ற உண்மையைப் பாராட்ட ஜேவோன்ஸ் தவறினார். குறிப்பாக, அவர் எண்ணெய் அல்லது இயற்கை எரிவாயுவை எதிர்பார்க்கவில்லை. மேலும், நிலக்கரியின் விலை உயர்ந்ததால், அதை மிகவும் திறமையாகப் பயன்படுத்துவதற்கும் அல்லது கண்டுபிடிப்பதற்கும் சுரங்கம் எடுப்பதற்கும் ஏற்படும் செலவைக் குறைக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்கான ஊக்கத்தை அவர் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

### iii. சூரியப்புள்ளிக் கோட்பாடு (Sun Spot Theory)

பொருளாதார மந்தமும் செழிப்பும் மாறிமாறி வருவதற்கு காரணம் சூரியனில் காணும் கரும்புள்ளிகளாகும். கரும்புள்ளிகள் அதிகமாகத் தோன்றும் போது உலகத்தின் வெப்பநிலை அதிகமாகவும் அவை குறைவாக தோன்றும் போது உலகத்தின் வெப்பநிலை குறைவாகவும் இருக்கும். தட்ப வெப்பநிலை மாற்றங்களினால் விவசாய உற்பத்தி மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தியும் மாறுகின்றது. இதுவே வர்த்தக சகடவேட்டத்துக்கு காரணமாகும்.

## 6.3 லியோன் வால்ராஸ் (Leon Walras) (1834-1910)

### 6.3.1 அறிமுகம்

வால்ராஸின் தந்தை, பிரெஞ்சு பொருளாதார நிபுணர் அகஸ்டே வால்ராஸ், தனது மகனை கணிதத்தில் குறிப்பிட்ட முக்கியத்துவத்துடன் பொருளாதாரத்தைத் தொடர ஊக்குவித்தார். பல தொழில்களுக்குப் பிறகு - அவர் சிறிது காலம் சுரங்கப் பள்ளியில் மாணவராக இருந்தார். ஒரு பத்திரிகையாளராக, ஒரு விரிவுரையாளராக, ஒரு ரயில்வே எழுத்தாளராக, ஒரு வங்கி இயக்குனராக, மற்றும் வெளியிடப்பட்ட காதல் நாவலாசிரியராக இருந்தார். வால்ராஸ் 1902 இல் ஐம்பத்தெட்டு வயதில் ஓய்வு பெற்றார்.

வால்ராஸ் சுவிட்சர்லாந்தில் உள்ள லொசேன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராக இருந்தார். மேலும், அவரது மாணவர்கள் பொருளாதார வல்லுனர்களாக மாறுவதை விட வழக்கறிஞர்களாக மாறுவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்ததால் வால்ராஸுக்கு சீடர்கள் இல்லை.

### 6.3.2 பொருளாதார சிந்தனைகள்

### i. எல்லைப் பயன் (Marginal Utility)

தனித்தனியாக ஆனால் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் வில்லியம் ஸ்டான்லி ஜெவோன்ஸ் மற்றும் கார்ல் மெங்கர் ஆகியோருடன், பிரெஞ்சு பொருளாதார வல்லுனர் லியோன் வால்ராஸ் எல்லை நிலை பயன்பாட்டு சிந்தனையை உருவாக்கினார். இதனால் இவர் ‘‘எல்லை புரட்சியின்’’ நிறுவனர்களில் ஒருவராக கருதப்படுகிறார். இவர் நுகர்வோரின் நடத்தையை விளக்குவதற்கு எல்லைப் பயனைப் பயன்படுத்தினார். அதாவது தனிநபர்கள் திருப்தியினை உச்சப்படுத்தும் வகையில் வளங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதாகும்.

### ii. பொதுச்சமநிலை (The General Equilibrium)

வால்ராஸின் மிகப்பெரிய பங்களிப்பு ‘‘பொது சமநிலைக் கோட்பாடு’’ என்று அழைக்கப்படுகிறது. வால்ராஸுக்கு முன், பொருளாதார வல்லுநர்கள் பல பொருட்களைக் கொண்ட ஒரு முழுப் பொருளாதாரமும் எவ்வாறு ஒன்றாகப் பொருந்துகிறது மற்றும் ஒரு சமநிலையை அடைகிறது என்பதைக் காட்ட சிறிய முயற்சியை மேற்கொண்டனர். இதைச் செய்வதே வால்ராஸின் நோக்கமாக இருந்தது. முதலில், அவர் தனது கற்பனையான பொருளாதாரத்தை விவரிக்க ஒரே நேரத்தில் சமன்பாடுகளின் அமைப்பை உருவாக்கினார். இது ஒரு மிகப்பெரிய பணியாகும். பின்னர் சமன்பாடுகளின் எண்ணிக்கை தெரியாதவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், சமநிலை விலைகள் மற்றும் பொருட்களின் அளவுகளை வழங்கி இந்த அமைப்பைத் தீர்க்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டினார். ஒவ்வொரு பொருளுக்கும் விலையும் அளவும் தனித்தனியாக நிர்ணயிக்கப்பட்டது என்பதை நிரூபித்தார். பொருளாதார அறிவியலில் வால்ராஸின் மிகப்பெரிய பங்களிப்புகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

ஆனால் வால்ராஸ், அத்தகைய சமன்பாடுகளின் அமைப்பை ஒரு சமநிலைக்கு கணித ரீதியாக தீர்க்க முடியும் என்பது, நிஜ உலகில் எப்போதும் அந்த சமநிலையை அடையும் என்று அர்த்தமல்ல என்பதை அறிந்திருந்தார். எனவே, வால்ராஸின் இரண்டாவது முக்கிய பணி செயற்கையான சந்தை செயல்முறையை உருவகப் படுத்துவதாகும். இது அமைப்பை சமநிலைக்கு கொண்டு வரும். இந்த செயல்முறையை அவர் ‘‘டடோன்மென்ட் *-tatonnement’’* (French for “groping”)’’ என்று அழைத்தார். டடோன்மென்ட் என்பது சோதனை மற்றும் பிழை செயல்முறையாகும். அதாவது ஒரு விலை நிர்ணயிக்கப்பட்டு அழைக்கப்பட சந்தையில் உள்ளவர்கள் அந்த விலையில் எவ்வளவு கேள்வி அல்லது நிரம்பல் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கேள்வியை விட நிரம்பல் அதிகமாக இருந்தால், விலை குறைக்கப்படும். இதனால் நிரம்பல் குறைவடைந்து மற்றும் கேள்வி அதிகரிக்கும். இதனால் விலைகள்

சமநிலையை நோக்கி நகரும். விலைகள் ஏறிக்கொண்டிருக்க சமநிலையை நிலையானதாக வைத்திருக்கும் நிலையில் சமநிலையை அடையும் வரை உண்மையான பரிமாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்று வால்ராஸ் கருதினார். உண்மையான சந்தைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கான உதவியாக வால்ராஸின் உருவகப்படுத்தப்பட்ட செயல்முறையின் பயனை இந்த அனுமானம் கட்டுப்படுத்துகிறது.

## 6.4 கார்ல் மெங்கர் (Carl Menger) (1840-1921)

### 6.4.1 அறிமுகம்

கார்ல் மெங்கர் ஆஸ்ட்ரோ-ஹங்கேரியின் (தற்போது தெற்கு போலந்து) பகுதியான கலீசியாவில் ஒரு வளமான குடும்பத்தில் பிறந்தார். அவருக்கு அன்டன் மற்றும் மேக்ஸ் என்ற இரண்டு சகோதரர்கள் இருந்தனர். சகோதரர்கள் இருவரும் வழக்கறிஞர்கள், மற்றும் அன்டன் ஒரு சட்ட தத்துவவாதி மற்றும் சோசலிச வரலாற்றாசிரியர். மெங்கரின் மகன், கார்ல் மெங்கர், ஒரு முக்கிய கணிதவியலாளர் ஆவார். அவர் தனது தொழில் வாழ்க்கையின் பெரும்பகுதியை அமெரிக்காவில் கழித்தார். 1985 இல் இறந்தார். கார்ல் 1867 இல் கிராகோவ் பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்றார். பொருளாதாரத்தின் கொள்கைகளை வெளியிட்டதன் விளைவாக 1871, அவருக்கு விரிவுரையாளர் பதவியும் பின்னர் வியன்னா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவியும் வழங்கப்பட்டது. அதை அவர் 1903 வரை வகித்தார். 1876 இல் அவர் ஆஸ்திரியாவின் இளவரசர் ருடால்ஃப் என்பவருக்கு ஆசிரியராகப் பணி செய்தார். அந்தத் திறனில் அவர் ஜெர்மனி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து மற்றும் இங்கிலாந்து முழுவதும் பயணம் செய்தார்.

### 6.4.2 பொருளாதார சிந்தனைகள்

i. கார்ல் மெங்கர் ஆஸ்திரிய பொருளாதாரத்தின் நிறுவனர் மற்றும் எல்லை நிலை பயன்பாட்டு புரட்சியின் இணை நிறுவனர் என்ற இரட்டை வேறுபாடுகளைக் கொண்டுள்ளார். மெங்கர் வில்லியம் ஜெவோன்ஸ் மற்றும் லியோன் வால்ராஸ் ஆகியோரிடம் தனித்தனியாக பணியாற்றினார் மற்றும் வேறுபட்ட முறையில் இதே போன்ற முடிவுகளை எடுத்தார். ஜெவோன்ஸைப் போலல்லாமல், பொருட்கள் “உபயோகங்கள்” அல்லது பயன்பாட்டு அலகுகளை வழங்குகின்றன என்று மெங்கர் நம்பவில்லை. மாறாக, அவர் பொருட்கள் மதிப்புமிக்கவை என்கிறார். ஏனெனில், பொருற்களின் முக்கியத்துவம் பல்வேறு பயன்பாடுகளுக்கு ஏற்ப வேறுபடும் என்கிறார்.

ii. மதிப்பின் உழைப்பு கோட்பாட்டை மறுக்கவும் அவர் அதைப் பயன்படுத்தினார். பொருட்கள் அவற்றின் மதிப்பைப் பெறுகின்றன ஆனால் அவற்றை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படும் உழைப்பின் அளவு காரணமாக அல்ல. மாறாக, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனின் காரணமாக என சுட்டிக் காட்டினார். பொருட்களின் மதிப்பு அவர்கள் திருப்திப்படுத்தும் தேவைகளின் முக்கியத்துவத்தால் தீர்மானிக்கப்பட்டால், உழைப்பின் மதிப்பு மற்றும் பிற உற்பத்தி உள்ளீடுகள் இந்த பொருட்களை உற்பத்தி செய்யும் திறனில் இருந்து பெறப்படுகிறது என்ற கருத்தை வெளிப்படுத்தினார். பிரதான பொருளாதார வல்லுநர்கள் இந்த கோட்பாட்டை இன்னும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதை அவர்கள் “பெறப்பட்ட கேள்வி” என்று அழைக்கிறார்கள்.

iii. பொருளாதாரத்தில் மிகவும் சக்திவாய்ந்த நுண்ணறிவுகளில் ஒன்றை அடைய மெங்கர் தனது “மதிப்பு பற்றிய அகநிலைக் கோட்பாட்டை” பயன்படுத்தினார். மக்கள்

தாங்கள் அதிகமாக மதிக்கும் ஒன்றிற்காக குறைவாக மதிக்கும் ஒன்றை மாற்றிக் கொள்வார்கள். இரு வர்த்தகர்களும் இதைச் செய்வதால், இருவரும் இலாபம் அடைகின்றனர். இடைத்தரகர்கள் இல்லாமல், இந்த பரிவர்த்தனைகள் நடந்திருக்காது அல்லது அதிக விலை கொண்டதாக இருந்திருக்கும். இதனால் இடைத்தரகர்கள் அதிக உற்பத்தித் திறன் கொண்டவர்கள் என்கின்றார்.

iv. நாடுகளின் செல்வம் என்ற புத்தகத்தில் அடம் ஸ்மித் அவரைத் தோற்கடித்தாலும், பணம் எவ்வாறு உருவாகிறது என்பதற்கான விளக்கத்தை மெங்கர் விளக்கினார். மக்கள் பண்டமாற்று செய்தால், ஓரிரு பரிவர்த்தனைகளில் அவர்கள் விரும்புவதை அரிதாகவே பெற முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார். உண்மையில், “பணம்” என்ற வார்த்தை லத்தீன் மொழியிலிருந்து வந்தது. இது சில சமூகங்களில் பணமாக செயல்படுகிறது. மற்ற சமூகங்கள் சிகரெட், காக்னாக், உப்பு, உரோமம் அல்லது கற்களை பணமாகப் பயன்படுத்துகின்றன. பொருளாதாரங்கள் மிகவும் சிக்கலானதாகவும் செல்வமிக்கதாகவும் மாறியதால், அவர்கள் விலைமதிப்பற்ற உலோகங்களை (தங்கம், வெள்ளி மற்றும் பல) பணமாகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

v. மனிதன் விருப்பத்தை நிறைவு செய்யும் அனைத்தையும் பொருளாகவே கருதினர். மெங்கர் பொருள் எது என்று அழைக்கப்படுகின்றதோ அதற்கு நான்கு பண்புகள் இருக்க வேண்டும் என்கிறார். அ) அதனை மனிதன் விரும்பவேண்டும். ஆ) விருப்பத்தை நிறைவு செய்யக் கூடிய பண்புகள் அதனிடம் இருக்க வேண்டும் இ) விருப்பத்தை பூர்த்தி செய்யக்கூடிய பண்பை மனிதன் உணர்ந்து இருக்க வேண்டும். ஈ) விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் அது விற்பனை செய்யப்படவும் வேண்டும். இந்த நான்கு இயல்புகளில் ஒன்று இல்லாவிட்டாலும் அதனை பண்டம்

அல்லது பொருள் என்று அழைக்கமுடியாது என்கிறார் மெங்கர்.

vi. மெங்கர் பொருட்களை முதல் இரண்டாம். மூன்றாம் வரிசைப் பொருட்கள் என வகைப்படுத்துகிறார் உதாரணமாக இவரது பிரிவின்படி பால் முதல் வரிசைப்பொருள் பசு இரண்டாம் வரிசைப் பொருள், புல், வைக்கோல் மூன்றாம் வரிசைப் பொருள் நிலம் நான்காம் வரிசைப் பொருட்காளாகும்.

vii. பயன்பாடே பரிவர்த்தனை மதிப்பின் உயிர்நாடி என்பது இவரது கொள்கை எந்தப் பொருளின் பயனும் அப்பொருளை அதிகரிக்க அதிகரிக்க குறைந்து கொண்டே செல்லும் இயல்புடையது பண்டத்தின் மதிப்பு அதன்மீது மனிதன் சொண்டுள்ள விருப்பத்தின் தீவிரத்தை பொறுத்தது என்பது மெங்கரின் முடிவு மெங்கர் “இறுதிநிளை“ என்ற சொல்லை பயன்படுத்தவில்லை எனினும் அதன் பொருளை உணர்ந்திருந்தார்.

viii. மெங்கர் தனது பகுப்பாய்வை மற்ற நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தினார். எடுத்துக்காட்டாக, பணம் வளர்ந்த அதே காரணத்திற்காக - மக்களிடையே தொடர்புகளை எளிதாக்குவதற்கு மொழி வளர்ந்தது என்று அவர் வாதிட்டார்.

ஆஸ்திரிய பொருளாதார சிந்தனைப் பள்ளி முதலில் மெங்கரின் எழுத்துக்களிலிருந்தும், யூஜென் வான் போம்-பாவர்க் (Friedrich von Wieser) மற்றும் ∴பிரெட்ரிக் வான் வீசர் (Friedrich von Wieser) ஆகிய இரு இளம் சீடர்களின் எழுத்துக்களிலிருந்தும் ஒன்றிணைந்தது. பின்னர் ஆஸ்திரிய பொருளாதார வல்லுனர்களான லுட்விக் வான் மிசஸ் (Ludwig von Mises) மற்றும் ∴பிரெட்ரிக் ஹாயெக் (Friedrich Hayek) ஆகியோர் மெங்கரின் நுண்ணறிவுகளை ஒரு தொடக்க புள்ளியாகப் பயன்படுத்தினர்.

## சுருக்கம்

- ✓ இங்கிலாந்தின் லிவர்பூலில் பிறந்த ஜெவோன்ஸ் லண்டனில் உள்ள பல்கலைக்கழக கல்லூரியில் வேதியியல் மற்றும் தாவரவியல் பயின்றார்.
- ✓ எல்லை நிலைப் புரட்சியினை ஒரே நேரத்தில் முன்னெடுத்துச் சென்ற மூன்று பேரில் வில்லியம் ஜெவோன்ஸ் ஒருவர்.
- ✓ ஒரு பண்டத்தின் ஒவ்வொரு மேலதிக அலகின் உபயோகம் (மதிப்பு) அதிகரிக்க நுகர்வோருக்கு பயன் குறைவாக இருக்கும் என்று எல்லை நிலை பயன்பாடு கோட்பாடு கூறுகிறது.
- ✓ ஜீவன்ஸ் பொருளாதாரத்தின் உற்பத்திப் பக்கத்தில் மிகக் குறைவான சிந்தனையை வெளிப்படுத்தினார்.
- ✓ தனித்தனியாக ஆனால் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் வில்லியம் ஸ்டான்லி ஜெவோன்ஸ் மற்றும் கார்ல் மெங்கர் ஆகியோருடன், பிரெஞ்சு பொருளாதார வல்லுனர் லியோன் வால்ராஸ் எல்லை நிலை பயன்பாட்டு யோசனையை உருவாக்கினார்.
- ✓ வால்ராஸின் மிகப்பெரிய பங்களிப்பு ‘‘பொது சமநிலைக் கோட்பாடு’’ என்று அழைக்கப்படுகிறது.
- ✓ வால்ராஸின் ஒரே கல்விப் பணி சுவிட்சர்லாந்தில் உள்ள லொசேன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராக இருந்தது. மேலும், அவரது மாணவர்கள் பொருளாதார வல்லுனர்களாக மாறுவதை விட வழக்கறிஞர்களாக மாறுவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்ததால், வால்ராஸுக்கு சீடர்கள் இல்லை.

- ✓ சந்தைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கான உதவியாக வால்ராஸின் உருவகப்படுத்தப்பட்ட செயல்முறையின் பயனை இந்த அனுமானம் கட்டுப்படுத்துகிறது.
- ✓ கார்ல் மெங்கர் ஆஸ்திரிய பொருளாதாரத்தின் நிறுவனர் மற்றும் எல்லை நிலை பயன்பாட்டு புரட்சியின் இணை நிறுவனர் என்ற இரட்டை வேறுபாடுகளைக் கொண்டுள்ளார்.
- ✓ பொருட்கள் அவற்றின் மதிப்பைப் பெறுகின்றன ஆனால் அவற்றை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படும் உழைப்பின் அளவு காரணமாக அல்ல, மாறாக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனின் காரணமாக என சுட்டிக் காட்டினார்.

## பயிற்சி வினாக்கள்

1. வில்லியம் ஸ்டேன்லி ஜேவோன்ஸ் இன் முக்கியமான பொருளாதாரக் கோட்பாடுகளை விளக்குக.
2. லியோன் வால்ராஸ் பொருளாதார பங்களிப்புக்களை தெளிவுப்படுத்துக.
3. கார்ல் மெங்கரின் பொருளாதார கருத்துக்களை விளக்குக.

## திறவுச் சொற்கள்

தாவரவியல், எல்லை நிலைப் புரட்சி, பயன், பழம்பொருளியல் பள்ளி, பரிமாற்றம், சமநிலை, சமன்பாடு, விலை, அளவு, கேள்வி, நிரம்பல், உற்பத்தி

## உசாத்துணைகள்

Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 07

## நவ பழம் பொருளியல்

**அத்தியாயம் 07**..........................................................................76

நவ பழம் பொருளியல் ........................................................................76

7.1 நவ பழம் பொருளியல் ....................................................78

7.2 ஆல்∴பிரட் மார்ஷல் ........................................................80

7.3 ஆல்∴பிரட் மார்ஷல் பொருளாதார பங்களிப்புகள்............81

7.4 விமர்சனங்கள் ...................................................................83

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது நவ பழம் பொருளியலில் ஆல்ஃபிரட் மார்ஷல் மிக முக்கியமானவர். அவரே நவ பழம் பொருளியலின் தோற்றத்திற்கு காரணம். பொருளாதாரக் கோட்பாடுகளில், அவர் தனது சுருக்கக் கோட்பாடுகளை நிலைநிறுத்தினார்.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. நவ பழம் பொருளியல் குறித்து விளக்குதல்.
2. அல்பரட் மார்ஷலின் பொருளாதார கருத்துக்களை தெளிவுப்படுத்தல்.

## கற்றல் பேறுகள்

1. நவ பழம் பொருளியல் குறித்து விளக்குவர்.
2. அல்பரட் மார்ஷலின் பொருளாதார கருத்துக்களை தெளிவுப்படுத்துவர்.

### 7.1 நவ பழம் பொருளியல்

நவ பழம் பொருளியல் பொருளாதாரம் என்பது 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி 20 ஆம் நூற்றாண்டில் மேலாதிக்கம் பெற்ற பொருளாதார சிந்தனைப் பள்ளியாகும். இது பல முக்கிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

i. **பகுத்தறிவு:** நவ பழம் பொருளியல் பொருளாதார வல்லுநர்கள் தனிநபர்கள் பகுத்தறிவாளர்கள் என்று கருதுகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த பயன்பாடு அல்லது திருப்தியை அதிகரிக்க முடிவு செய்கிறார்கள். இந்த பகுத்தறிவு நிறுவனங்களின் இலாபத்தை அதிகரிக்க வழிவகுக்கின்றது.

ii. **எல்லை நிலை:** நவ பழம் பொருளியல் பொருளாதாரம் எல்லை நிலை பகுப்பாய்வை வலியுறுத்துகிறது. அங்கு ஒரு செயலின் எல்லை (மேலதிக) பயன்கள் மற்றும் செலவுகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பகுத்தறிவுள்ள நுகர்வோர் எல்லைப் பயன்கள் எல்லை செலவிற்குச் சமமாகும் வரை ஒரு பொருளை அல்லது சேவையை கொள்வனவு செய்வதைத் தொடர்கின்றனர்.

iii. **கேள்வி மற்றும் நிரம்பல்:** நவ பழம் பொருளியல் பொருளாதாரம் சந்தைகளை பகுப்பாய்வு செய்ய கேள்வி மற்றும் நிரம்பல் கட்டமைப்பைப் பயன்படுத்துகிறது. நிரம்பலின் தொடர்பு மூலம் விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன. நிரம்பல் உற்பத்தியாளர்கள் விற்பனை விருப்பத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், கேள்வி நுகர்வோர் வாங்குவதற்கான விருப்பத்தைக் குறிக்கிறது.

iv. **சந்தை செயல்திறன்:** நவ பழம் பொருளியல் பொருளாதார வல்லுநர்கள் பொதுவாக சந்தைகளின் செயல்திறன் என்பது விலைகள் அனைத்து கிடைக்கக்கூடிய தகவல்களையும்

பிரதிநிதித்துவப் படுத்தவதும் வளங்கள் வினைத்திறனான முறையில் ஒதுக்கப்படும் போதும் தீர்மானிக்கப்படுகின்றது. சந்தைகளில் அரசாங்கத்தின் தலையீடு பெரும்பாலும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என்று இந்தக் கருத்து தெரிவிக்கிறது.

v. **பயன்பாட்டை உச்சப்படுத்தல்**: நுகர்வோர் கோட்பாட்டில், வரவுசெலவுத்திட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, தனிநபர்கள் தங்கள் பயன்பாட்டை அதிகப்படுத்தும் தேர்வுகளை மேற்கொள்வார்கள் என்று கருதப்படுகிறது. இது சமபயன் வளைவுகள் மற்றும் வரவுசெலவுத்திட்ட கோடுகளின் கருத்துக்கு வழிவகுக்கிறது. இது நுகர்வோர் தங்கள் வருமானங்களை எவ்வாறு ஒதுக்குவது என்பதை விளக்குகிறது.

vi. **உற்பத்தி மற்றும் செலவுகள்:** நவ பழம் பொருளியல் பொருளாதாரம் உற்பத்தி மற்றும் செலவுகளின் அடிப்படையில் நிறுவனங்களின் நடத்தையிலும் கவனம் செலுத்துகிறது. எல்லை வருமானம் எல்லை செலவுக்கு சமமாக இருக்கும் இடத்தில் உற்பத்தி செய்வதன் மூலம் நிறுவனங்கள் இலாபத்தை அதிகரிக்க முயல்கின்றன.

vii. **போட்டி:** நவ பழம் பொருளியல் மாதிரி பெரும்பாலும் சரியான போட்டியை எடுத்துக்கொள்கிறது. பூரண போட்டிச் சந்தையில் பல வாங்குபவர்களும் விற்பவர்களும் காணப்படுவதுடன் ஒரே மாதிரியான பொருட்கள் சந்தையில் காணப்படும். சந்தையில் உள் நுழைவு மற்றும் வெளியேறுவதிலும் சுதந்திரமாக செயல்படுகிறார்கள். இந்த அனுமானம் சந்தை சமநிலை மற்றும் செயல்திறனை பகுப்பாய்வு செய்ய அனுமதிக்கிறது.

## 7.2 ஆல்∴பிரட் மார்ஷல்

ஆல்∴பிரட் மார்ஷல் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மிகவும் செல்வாக்கு மிக்க பொருளாதார நிபுணர்களில் ஒருவர். மார்ஷல் பொருளாதாரத்தில் நவ பழம் பொருளியல் சிந்தனைப் பள்ளியின் நிறுவனராகக் கருதப்படுகிறார். நவ பழம் பொருளியல் பொருளாதார வல்லுநர்கள், நுகர்வோர் மற்றும் தயாரிப்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட சந்தையில் பற்றாக்குறை வளங்களின் செயல்பாட்டை எவ்வாறு அதிகப்படுத்துகிறார்கள் என்பதில் ஆர்வமாக இருந்தனர். நிரம்பல் மற்றும் கேள்விக்கு இடையிலான உறவை மார்ஷல் வெளிப்படுத்துவது நவ பழம் பொருளியல் பொருளாதார அடித்தளங்களுக்கு மையமாக இருந்தது. அவரது கருத்துக்கள் பல பொருளாதார மாதிரிகள் மற்றும் கோட்பாடுகளில் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

ஆல்∴பிரட் மார்ஷல் முதலில் ஒரு கணிதவியலாளராகப் படித்தார். ஆனால் பொருளாதாரக் கோட்பாடுகள் அனைவரின் வாழ்வாதாரத்திற்கும் இன்றியமையாதவை என்பதையும், பொது மக்களால் அதைப் புரிந்துகொள்வது முக்கியம் என்பதையும் புரிந்துகொண்டார்.

பொருளாதாரக் கோட்பாடுகளில், அவர் தனது சுருக்கக் கோட்பாடுகளை நிலைநிறுத்துவதற்கு நிஜ வாழ்க்கை எடுத்துக்காட்டுகள் மூலம் பொருளாதாரக் கொள்கைகளை எப்போதும் முயற்சித்து, சூழ்நிலைப்படுத்துவதில் கவனமாக இருந்தார். பொருளாதாரம் அவர்களின் அன்றாட பழக்கவழக்கங்களுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அவர் குறிப்பாக சிற்றின பொருளாதாரத்தில் ஆர்வமாக இருந்தார். தனிப்பட்ட அறிவியலுக்கு முக்கியமான முடிவுகளை எடுக்கும் விதத்தை அவர் ஆய்வு செய்தார். அவர் ஒரு புத்திசாலித்தனமானவர் மட்டுமல்ல, ஒரு சிறந்த ஆசிரியராகவும்

இருந்தார். மேலும் பொது மக்களை ஈர்க்கும் வகையில் பொருளாதாரம் கற்பிக்கப்படும் முறையை மாற்றினார். மார்ஷல் பொருளாதாரத்தை மனிதமயமாக்க விரும்பினார். ஏனென்றால் ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த நலனையோ அல்லது குறைந்த பட்சம் தனது குழந்தைகளின் நலனையோ விரும்புவதாக அவர் நம்பினார்.

## 7.3 ஆல்ஃபிரட் மார்ஷல் பொருளாதார பங்களிப்புகள்

**i. எல்லை பயன்பாட்டுக் கோட்பாடு (Marginal Utility Theory):** கேள்வி மற்றும் நிரம்பல் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு மார்ஷல் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தார். அவர் எல்லைநிலை பயன்பாடு என்ற கருத்தை அறிமுகப்படுத்தினார். இது ஒரு பொருளின் மேலதிக அலகை கொள்வனவு செய்வதன் மூலம் ஒரு நுகர்வோர் பெறும் மதிப்பு அல்லது பயன்பாடாகும். அவர்கள் அந்த பொருளை தொடர்ந்தும் அதிகமாக கொள்வனவு செய்யும் போது எல்லைப் பயன் குறைவடைகிறது. இச்சிந்தனை நுகர்வோர் நடத்தை பற்றிய புரிதலில் புரட்சியை ஏற்படுத்தியதுடன் நவீன நுண்ணிய பொருளாதாரத்தின் மூலக்கல்லாகவும் காணப்படுகின்றது.

**ii. பொருளாதார கோட்பாடுகள் (Principals of Economics):** மார்ஷலின் மிகவும் பிரபலமான படைப்பு ”பொருளாதாரத்தின் கோட்பாடுகள்”, முதலில் 1890 இல் வெளியிடப்பட்டது. இந்த புத்தகத்தில், அவர் கேள்வி மற்றும் நிரம்பல் பகுப்பாய்வு, உற்பத்தி செலவு மற்றும் எல்லை பகுப்பாய்வு உட்பட தனது பொருளாதார கோட்பாடுகளை வகுத்தார். இது பரவலாகப் பயன்படுத்தப்படும் பாடப்புத்தகமாக மாறியது மற்றும் பொருளாதார வல்லுனர்களின் தலைமுறைகளை பாதித்தது.

**iii. பகுதி சமநிலை பகுப்பாய்வு (Partial Equilibrium Analysis):** மார்ஷல் பகுதி சமநிலை பகுப்பாய்வு என்ற

கருத்தை உருவாக்கினார். இது மற்ற சந்தைகள் நிலையானதாக இருக்கும் என்று கருதி தனித்தனியாக தனித்தனி சந்தைகளை பகுப்பாய்வு செய்வதில் கவனம் செலுத்துகிறது. இந்த அணுகுமுறை, கேள்வி மற்றும் நிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பிட்ட சந்தைகளில் விலைகள் மற்றும் அளவுகளை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றிய விரிவான புரிதலை அனுமதிக்கிறது.

iv. **நிறுவனக் கோட்பாடு (Theory of Firm):** நிறுவனக் கோட்பாட்டிற்கு மார்ஷலும் பங்களித்தார். உற்பத்தி பகுப்பாய்வில் "குறுகிய காலம்" மற்றும் "நீண்ட காலம்" என்ற சிந்தனையை அவர் அறிமுகப்படுத்தினார். நிறுவனங்கள் தங்கள் உள்ளீடுகளையும் தொழில்நுட்பத்தையும் வெவ்வேறு காலகட்டங்களில் சரிப்படுத்துவதன் மூலம் இலாபத்தை அதிகரிக்கச் செய்யலாம் என்பதையையே இது குறிக்கின்றது.

v. **நலன்சார் பொருளாதாரம் (Welfare Economics):** மார்ஷலின் பணி நலன்புரி பொருளாதாரத்திற்கான அடித்தளத்தை அமைத்தது. இது பொருளாதார நடவடிக்கைகள் சமூக நலன் மற்றும் நல்வாழ்வை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆய்வு செய்கிறது. நுகர்வோர் மிகை என்ற கருத்தை அவர் அறிமுகப்படுத்தினார். இது நுகர்வோர் ஒரு பொருளுக்கு என்ன செலுத்தத் தயாராக இருக்கிறார்கள் என்பதற்கும் அவர்கள் உண்மையில் செலுத்துவதற்கும் உள்ள வித்தியாசத்தை அளவிடுகிறது. இது கொடுக்கல் வாங்களிலிருந்து நுகர்வோர் பெறும் நன்மைகளை எடுத்துக்காட்டுகிறது.

vi. **மார்ஷலியன் கிராஸ் (Marshallian Cross):** வரைபுகளை பிரதிநிதித்துவத்தி கோட்பாடுகளை விளக்குவதை மார்ஷல் உருவாக்கினார். மார்ஷல் கிராஸ் கேள்வி மற்றும் நிரம்பலுக்கு இடையிலான தொடர்பானது சந்தை சமநிலை

விலைகள் மற்றும் அளவுகளை தீர்மானிக்கிறது என்பதை விளக்குகிறது.

## 7.4 விமர்சனங்கள்

i. **பகுதி சமநிலை பகுப்பாய்வு:** மார்ஷலின் பகுதி சமநிலை பகுப்பாய்வில் கவனம் செலுத்துகிறது. இது ஒரு சந்தையின் சமநிலையை மற்ற சந்தைகளை நிலையானதாக வைத்திருத்தல் எனும் வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக விமர்சிக்கப்பட்டது. இந்த அணுகுமுறை, பொருளாதாரத்தில் உள்ள ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கலாம் மற்றும் முறையான விளைவுகளை கவனிக்காமல் இருக்கலாம் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

ii. **பயன்பாட்டுக் கோட்பாடு:** மார்ஷலின் பயன்பாட்டுக் கோட்பாடு, அடித்தளமாக இருந்தாலும், நுகர்வோர் நடத்தை பற்றிய அதன் அனுமானங்களுக்காக விமர்சனங்களை எதிர்கொண்டது. பகுத்தறிவு மற்றும் காலப்போக்கில் நிலையான விருப்பத்தேர்வுகள் போன்றவை, நிஜ-உலக சூழ்நிலைகளில் எப்போதும் உண்மையாக இருக்காது என்று சிலர் வாதிடுகின்றனர்.

iii. **நிறைவற்ற போட்டி:** சில பொருளாதார வல்லுநர்கள் மார்ஷலின் நிறைவற்ற போட்டிக்கான கருத்தை, குறிப்பாக நிறைவற்ற போட்டி சந்தைகளில் “பிரதிநிதித்துவ நிறுவனம்” என்ற அவரது கருத்து, மிக எளிமைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் நவீன சந்தை கட்டமைப்புகளின் சிக்கல்களை போதுமான அளவு கைப்பற்ற முடியாது என்று வாதிடுகின்றனர்.

iv. **கணித கடினம்:** பிற்காலப் பொருளாதாரக் கோட்பாடுகளில் அதிகமாகக் காணப்பட்ட கணிதம் கடினம் இல்லாததால் மார்ஷலின் படைப்புகள் விமர்சிக்கப்பட்டன. பொருளாதார

பகுப்பாய்வின் பிற்கால வளர்ச்சிகளுடன் ஒப்பிடும்போது இது அவரது மாதிரிகளின் துல்லியம் மற்றும் பொருந்தக்கூடிய தன்மையை மட்டுப்படுத்தியது என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

v. **நிலையான பகுப்பாய்வு:** மார்ஷலின் பகுப்பாய்வு பெரும்பாலும் நிலையானதாகக் காணப்படுகிறது மற்றும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சமநிலை நிலைமைகளில் கவனம் செலுத்துகிறது. இது புதுமை, தொழில்நுட்ப மாற்றம் மற்றும் நீண்ட கால வளர்ச்சி போன்ற பொருளாதார அமைப்புகளின் மாறும் அம்சங்களை முழுமையாகப் கடைப்பிடிக்காது.

## சுருக்கம்

- ✓ நவ பழம் பொருளியல் பொருளாதாரம் என்பது 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி 20 ஆம் நூற்றாண்டில் மேலாதிக்கம் பெற்ற பொருளாதார சிந்தனைப் பள்ளியாகும்.
- ✓ ஆல்.்.பிரட் மார்ஷல் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மிகவும் செல்வாக்கு மிக்க பொருளாதார நிபுணர்களில் ஒருவர் ஆவார்.
- ✓ மார்ஷல் பொருளாதாரத்தில் நவ பழம் பொருளியல் சிந்தனைப் பள்ளியின் நிறுவனராகக் கருதப்படுகிறார்.
- ✓ பொருளாதாரக் கோட்பாடுகளில், அவர் தனது சுருக்கக் கோட்பாடுகளை நிலைநிறுத்துவதற்கு நிஜ வாழ்க்கை எடுத்துக்காட்டுகள் மூலம் பொருளாதாரக் கொள்கைகளை எப்போதும் முயற்சித்து, சூழ்நிலைப்படுத்துவதில் கவனமாக இருந்தார்.
- ✓ அவர் குறிப்பாக சிற்றினப் பொருளாதாரத்தில் ஆர்வம் காட்டினார்.

## பயிற்சி வினாக்கள்

1. நவ பழம் பொருளியல் பொருளாதார கொள்கைகள் குறித்து விளக்குக.
2. ஆல்ஃபிராட் மார்ஷலின் பொரளாதார கோட்பாடுகளை விளக்குக.
3. ஆல்ஃபிராட் மார்ஷலின் பொரளாதார கோட்பாடுகளுக்கான விமர்சனங்களை ஆராய்க.

## திறவுச் சொற்கள்

நவ பழம் பொருளியல், பகுத்தறிவு, எல்லை நிலை, கேள்வி மற்றும் நிரம்பல், சந்தைகளின் செயல்திறன், பயன்பாடு, உற்பத்தி மற்றும் செலவு, பூரண போட்டி, நிறுவனங்கள்

## உசாத்துணைகள்


Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 08

## கெயின்சியப் பொருளாதாரம்

**அத்தியாயம் 08**..........................................................................86

8.1 கெய்ன்ஸியக் கோட்பாடு..........................................88

8.2 உலகப் பெருமந்தம்..............................................88

8.3 கெய்ன்ஸியப் பொருளியலின் பண்புகள்............................89

8.4 கெயின்ஸின் பேரிணப் பொருளாதார கோட்பாடுகள் ............91

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது கெயின்சிய பொருளாதாரக் கருத்துக்கள் குறித்து விளக்குகின்றது. கெயின்சிய புரட்சியே கெயின்சின் தோற்றத்திற்கு காரணம். மேலும் கெய்ன்ஸியப் பொருளியலின் பண்புகள் மற்றும் பொருளாதாரக் கோட்பாடுகள் குறித்து விளக்குகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. கெயிசின் தோற்றத்திற்கான காரணங்களை முன்வைத்தல்.
2. கெய்ன்ஸியப் பொருளியலின் பண்புகளை விளக்குதல்.
3. கெய்ன்ஸியப் பொருளாதாரக் கோட்பாடுகள் குறித்து தெளிவுப்படுத்தல்.

## கற்றல் பேறுகள்

1. கெயின்சின் தோற்றத்திற்கான காரணங்களை முன்வைப்பர்.
2. கெய்ன்ஸியப் பொருளியலின் பண்புகளை விளக்குவர்.
3. கெய்ன்ஸியப் பொருளாதாரக் கோட்பாடுகள் குறித்து தெளிவுப்படுத்துவர்.

## 8.1 கெய்ன்ஸியக் கோட்பாடு

பொருளாதார மந்த காலப்பகுதியில் நவீன பொருளியலின் தந்தை என அழைக்கப்படுகின்ற கெய்ன்ஸ் 1936ல் ‘‘வேலைவாய்ப்பு, வட்டி, பணம், பற்றிய பொதுக்கோட்பாடு’’ என்ற ஒரு புரட்சிகரமான நூலை வெளியீடு செய்தார். கெய்ன்ஸ் மற்றும் கெய்ன்ஸியப் பொருளாதார சிந்தனைகளை பின்பற்றிய எல்லோரையும் இணைத்து கெய்ன்ஸியப் பொருளாதாரம் என அழைக்கப்படுகிறது.

## 8.2 உலகப் பெருமந்தம்

1930 இல் ஏற்பட்ட பொருளாதார பெருமந்தம் உலகப்பெருமந்தமாக உருவெடுத்தது. இதிலிருந்து மீட்டெடுத்தவர் கெயின்ஸ் ஆவார். இரண்டாம் உலக மகா யுத்தம் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாகவே இது காணப்படுகின்றது. உலக அளவில் நாடுகள் ரீதியயாக இவ் பெருமந்தக் காலம் பல்வேறு காலப்பகுதிகளை குறித்து நின்றாலும் அநேகமாக பல்வேறு நாடுகளில் 1930 இல் ஏற்பட்ட பெருமந்தம் செல்வாக்கு செலுத்தி நின்றது.

பெருமந்தம் 1930 இன் பிற்பகுதியில் அல்லது 1940 இன் நடுப்பகுதியில் உணரப்பட்டதாக கூறப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் வேலையின்மை 25% வீதத்திற்கும் அதிகமாகக் காணப்பட்டது. மக்களுக்கு வேலை செய்ய விருப்பம் இருந்தும் வேலை கிடைக்கவில்லை. இன்னும் சில நாடுகளில் வேலையின்மை 33% அதிகமாக காணப்பட்டது. 1929இல் ஏற்பட்ட மந்தமட்டத்திலும் பார்க்க ஐக்கிய அமெரிக்காவில் உள்நாட்டு உற்பத்தி அளவிலும் பார்க்க 31% குறைவாக காணப்பட்டது. தனியார் வருமானம், அரசின் வருமானம், நிறுவனங்களின் இலாப அளவு, பொருட்கள் சேவைகளின் விலை என்பன வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. சர்வதேச வர்த்தகம் 50% காணப்பட்டன. இருந்தாலும் சில நாடுகளில் 1930 நடுப்பகுதியில் மாற்றமடைய ஆரம்பித்தன.

சில நாடுகளில் இரண்டாம் உலகப் போர் முடிவடையும் வரைக்கும் அநேகமான நாடுகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியது. யுத்தத்திற்கு முன்னர் பெருமளவு உலகத்தை ஆட்டிக்கொண்டிருந்த கொள்கை அரசு தலையிடாக் கொள்கையாகும். அரசு தலையிடாக் கொள்கையை (laissez – faire) பழம் பொருளியலாளர்கள் ஆதரித்தமைால் பெருமந்தத்திற்கான தீர்வை பெற முடியாமல் போனது.

நீண்ட காலமாக நடைமுறை ரீதியில் தீர்வை பெறமுடியாமல் போனது. விவசாய அறுவடை நடவடிக்கைகள் சந்தை விலையில் தங்கியிருந்தமையால் சார்பு நிலை சமநிலையை பேணமுடியாமல் போனது. இதற்கு காரணம் அரசின் தலையிடாக் கொள்கையாகும்.

## 8.3 கெய்ன்ஸியப் பொருளியலின் பண்புகள்

### i. கேள்விப்பக்க பொருளியல்

சமநிலையில் மொத்த நிரம்பலும் கேள்வியும் சமனாக இருக்கும். எனவே நிரம்பலைத் தூண்டுவதன் ஊடாக நாட்டின் உற்பத்தி பெருகும். மறுபுறம் கேள்வியைத் தூண்டுவதன் ஊடாக உற்பத்தியைப் பெருக்கலாம். கெய்ன்ஸ் கேள்விப்பக்க அணுகுமுறை மூலம் மொத்த கேள்வியை அதிகரிப்பதன் மூலம் வெளியீடு, வேலைவாய்ப்பை அதிகரிக்கலாம் என வலியுறுத்துகிறார்.

### ii. குறுங்கால பொருளாதாரம்

குறுங்காலத்தில் வெளியீட்டை அதிகரிப்பதை கெய்ன்ஸியக் கோட்பாடு விபரிக்கிறது. குறுங்காலத்தில் வெளியீட்டில் ஏற்படும் தளம்பல் இறை மற்றும் நாணயக் கொள்கை மூலம் ஏற்படும் தவறுகளால் ஏற்படுகிறது. ஏனெனில் இவர் ‘‘நீண்ட காலத்தில் நாமெல்லாம் இறந்து விடுவோம்’’ எனக் குறிப்பிடுகிறார்.

### iii. பணம் தொடர்பான கண்டுபிடிப்பு

குறுங்காலத்தில் வெளியீடு, வேலையளவில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு பிரதான காரணி பணம் எனக் குறிப்பிடுகின்றார்.

### iv. பருநிலைப் பொருளியல்

கெய்ன்ஸ் பொருளியளை மொத்தமாக அணுகினார். இவரது கருத்துக்கள் பொருளியலில் பருநிலைப் பொருளியல் என்ற ஒரு பிரிவு தோற்றம் பெற காரணமாகியது.

### v. அரச தலையீடு

கெய்ன்ஸிய பொருளாதாரத்தில் சட்டம், ஒழுங்குகளை பராமரிப்பதற்கு மேலாக உற்பத்தி முயற்சிகளால் மொத்த கேள்வியை அதிகரிப்பதில் அரசின் தலையீடு அவசியம் என வலியுறுத்துகிறார். உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள், மந்தங்களுக்கு கெய்ன்ஸின் கோட்பாடு மிகவும் பயனுடையதாக காணப்படுகிறது.

### vi. முகாமை செய்யப்பட்ட முதலாளித்துவம்

அரசின் தலையீட்டை ஆதரித்த போதிலும் இவர் தூய முதலாளித்துவவாதியாகவே இருக்கிறார். விலைப் பொறிமுறை தன்னகத்தே கொண்டிருந்த தவறுகளை அரச தலையீடு ஊடாக களைய முற்படுகிறார். அதாவது பொருளாதாரத்தில் அரச தலையீடு அவசியம் எனடகிறார்.

### vii. எதிர்பார்க்கைகள்

எதிர்பார்க்கைகள் பொருளாதாரத்தில் மொத்த வெளியீடு, வேலையளவு மற்றும் பணவீக்கம் போன்றவற்றில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது தொடர்பாக முதலில் முன்வைத்தவர் ஆவார்.

## 8.4 கெயின்ஸின் பேரிணப் பொருளாதார கோட்பாடுகள்

### i. வேலைவாய்ப்புக் கோட்பாடு

கெயின்ஸின் வேலைவாய்ப்புக் கோட்பாடானது பயன்படு கேள்வியினை அடிப்படையாகக் கொண்டதாகும். பயன்படு கேள்வியானது உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் வருமானத்தினை அதிகரிக்கும். இது வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் பங்களிப்பு செய்யும் என்கிறார்.

### ii. நுகர்வு

கெயின்ஸ் நுகர்வினை பயன்படு கேள்வியினை அடிப்படையாகக் கொண்டு விளக்குகின்றார். இவர் ஒரு தனிநபரின் வருமனம் அதிகரிக்கும் போது அவரது நுகர்வும் அதிகரிக்கும். ஆனால் வருமானம் அதிகரிக்கும் அதே விகிதத்தில் நுகர்வு அதிகரிக்காது எனக் கூறுகின்றார். மேலும் கெயின்ஸின் நுகர்வு சார்பில் ($C = a + bY$) நுகர்வின் அளவானது தன்னிச்சையான நுகர்வு (a) மற்றும் எல்லை நுகர்வு நாட்டம் (b or MPC) யினால் தீர்மானிக்கப்படும்.

### iii. முதலீடு

கெயின்ஸின் கருத்துக்கு ஏற்ப முதலீடானது வட்டி வீதத்தினால் மாத்திரம் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக மூலதனத்தின் எல்லை வினைத்திறனாலும் தீர்மானிக்கப்படும் என்கின்றார். இங்கு சேமிப்பானது வட்டி வீதத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

### iv. வட்டி வீதம்

கெயின்ஸின் கருத்திற்கு ஏற்ப வட்டி வீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையில் எதிர்க்கணிய தொடர்பு காணப்படுகின்றது. இங்கு முதலீட்டினை தீர்மானிக்கும் வட்டி வீதமானது பணக் கேள்வி மற்றும் பண நிரம்பலினால் தீர்மானிக்கப் படுகின்றது. மேலும்,

சேமிப்பு மற்றும் முதலீடு வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

### v. பணம்

பணம் என்பது பரிமாற்று ஊடகம் மட்டுமல்ல. பணத்தினை பெறுமானத்திரட்டாகவும் பயன்படுத்தலாம். மேலும், பணத்தினை பணமாக வைத்திருப்பதே பணக் கேள்வி ஆகும். பணமானது கொடுக்கல் வாங்கல் நோக்க பணக் கேள்வி, ஆபத்து நோக்க பணக் கேள்வி, உத்தேச நோக்க பணக் கேள்வி என மூன்று நோக்கங்களுக்காக பிரித்து நோக்கப்படுகின்றது.

## 8.5 விமர்சனங்கள்

பெரும் மந்தநிலையின் போது ஜான் மேனார்ட் கெய்ன்ஸ் உருவாக்கிய கெயின்சியன் பொருளாதாரம் செல்வாக்கு மிக்கதாகவும் சர்ச்சைக்குரியதாகவும் இருந்தது. பொருளாதார சுழற்சிகளை நிர்வகிப்பதற்கும் முழு வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கும் அரசாங்கத்தின் தலையீட்டில் அதன் கவனம் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டது. குறிப்பாக பழம்பொருளியல் மற்றும் நவ பழம்பொருளியல் பொருளாதார நிபுணர்களிடமிருந்து கெயின்சியன் பொருளாதாரத்திற்கு எதிரான முக்கிய விமர்சனங்கள் பின்வருமாறு:

i. கெயின்சியன் பொருளாதாரம் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீட்டின் பங்கை மிகைப்படுத்துகிறது என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். அரசாங்கத்தின் விரிவான ஈடுபாடு திறமையின்மை, சந்தை வழிமுறைகளில் சிதைவுகள் மற்றும் தனியார் முதலீட்டில் இருந்து வெளியேறும் கூட்டத்திற்கு வழிவகுக்கும் என்று அவர்கள் வாதிடுகின்றனர். அரசாங்கங்கள் பெரும்பாலும் வள ஒதுக்கீட்டில் திறமையற்றவை என்றும் அரசியல் பரிசீலனைகள் துணை பொருளாதாரக் கொள்கைகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

ii. பொருளாதார வீழ்ச்சியின் போது கேள்வியைத் தூண்டுவதற்காக பற்றாக்குறை செலவினங்களுக்காக கெயின்சியர்கள் வாதிடுகின்றனர். எவ்வாறாயினும், தொடர்ச்சியான பற்றாக்குறை செலவினம், பொதுக் கடன், அதிக வட்டி விகிதங்கள் மற்றும் பணவீக்க அழுத்தங்களின் நிலையான நிலைகளுக்கு வழிவகுக்கும் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். நிதிக் கொள்கையை நம்பியிருப்பது நீண்ட கால பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிதி ஒழுக்கத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

iii. கெயின்சியன் கொள்கைகள் அதிக பணவீக்கத்திற்கு வழிவகுக்கும் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். கேள்வியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட விரிவாக்க நிதி மற்றும் பணவியல் கொள்கைகள், கவனமாக நிர்வகிக்கப்படாவிட்டால், கேள்வித் தூண்டல் பணவீக்கத்தை விளைவிக்கும்.

iv. கெயின்சியன் பொருளாதாரம் நீண்ட கால வளர்ச்சி மற்றும் கட்டமைப்பு சிக்கல்களைக் காட்டிலும் குறுகிய கால பொருளாதார நிலைப்படுத்தலில் அதிக கவனம் செலுத்துவதாக அடிக்கடி விமர்சிக்கப்படுகிறது. மொத்த கேள்வியை நிர்வகிப்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகள் உற்பத்தித்திறன், புதுமை மற்றும் முதலீட்டிற்கான ஊக்குவிப்பு போன்ற முக்கியமான நிரம்பல் காரணிகளை புறக்கணிக்கக்கூடும் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

v. கெயின்சியன் கொள்கைகள் அங்கீகாரம், முடிவெடுத்தல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க கால தாமதங்களுக்கு உட்பட்டது. ஒரு கொள்கை இயற்றப்படும் நேரத்தில், பொருளாதார நிலை மாறி, தலையீட்டின் செயல்திறனைக் குறைக்கலாம். மேலும், அரசியல்

செயல்முறைகள் கெயின்சியன் நடவடிக்கைகளை சரியான நேரத்தில் செயல்படுத்துவதை தாமதப்படுத்தலாம் அல்லது சிதைக்கலாம்.

vi. ராபர்ட் லூகாஸ் போன்ற பொருளாதார வல்லுநர்களால் முன்மொழியப்பட்ட பகுத்தறிவு எதிர்பார்ப்புகள் கருதுகோள், பொருளாதார முகவர்கள் எதிர்பார்ப்புகளை எவ்வாறு உருவாக்குகிறார்கள் என்பது பற்றிய கெயின்சியன் அனுமானங்களை சவால் செய்கிறது. இந்தக் கண்ணோட்டத்தின்படி, தனிநபர்களும் நிறுவனங்களும் அரசாங்கக் கொள்கைகளின் விளைவுகளை எதிர்பார்க்கிறார்கள் மற்றும் அதற்கேற்ப தங்கள் நடத்தையை சரிசெய்து, கெயின்சியன் தலையீடுகளின் நோக்கம் கொண்ட தாக்கத்தை நடுநிலையாக்குகிறது.

vii. பொருளாதார வல்லுனர் டேவிட் ரிக்கார்டோவுடன் தொடர்புடைய இந்த கோட்பாடு, அரசாங்கம் பற்றாக்குறை செலவினங்களை அதிகரிக்கும் போது, பகுத்தறிவு நுகர்வோர் கடனை அடைக்க எதிர்கால வரி அதிகரிப்பை எதிர்பார்க்கிறார்கள். எனவே தங்கள் சேமிப்பை அதிகரிக்கிறார்கள். அரசாங்க செலவினங்களின் தூண்டுதல் விளைவை ஈடுகட்டுகிறார்கள். இது கெயின்சியன் நிதிக் கொள்கையின் செயல்திறனைக் குறைக்கிறது என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

viii. கெய்னீசியன் பொருளாதாரம் பொருளாதார வளர்ச்சியை உந்துவதில் நிரம்பல் பக்க காரணிகளின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடுகிறது என்று நிரம்பல் பக்க பொருளாதார வல்லுநர்கள் வாதிடுகின்றனர். அவர்கள் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் கொள்கைகள், கட்டுப்பாடுகளை குறைத்தல் மற்றும் முதலீடு மற்றும் பொருளாதார விரிவாக்கத்தை தூண்டுவதற்கு குறைந்த வரிகள், கெயின்சியன் கேள்வி-பக்க நிர்வாகத்துடன் முரண்பட வேண்டும்.

ix. சில விமர்சகர்கள், கெயின்சியன் கொள்கைகள் எப்போதுமே அவற்றின் நோக்கம் கொண்ட விளைவுகளை அடைவதில் பயனுள்ளதாக இல்லை என்று அனுபவ ஆதாரங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர். நிதித் தூண்டுதல்கள் பொருளாதார நடவடிக்கைகளை கணிசமாக அதிகரிக்கத் தவறிய நிகழ்வுகளை அல்லது கெயின்சியன் கொள்கைகள் நீண்ட பணவீக்கம் மற்றும் தேக்கநிலைக்கு வழிவகுத்த நிகழ்வுகளை மேற்கோள் காட்டுகின்றன.

**சுருக்கம்**

- ✓ பொருளாதார மந்த காலப்பகுதியில் நவீன பொருளியலின் தந்தை என அழைக்கப்படுகின்ற கெய்ன்ஸ் 1936ல் ‘‘வேலைவாய்ப்பு, வட்டி, பணம், பற்றிய பொதுக்கோட்பாடு’’ என்ற ஒரு புரட்சிகரமான நூலை வெளியீடு செய்தார்.

- ✓ 1930 இல் ஏற்பட்ட உலகப்பெருமந்தமாக பிரபல்யப்படுத்தப்படுகிறது.

- ✓ அரசு தலையிடாக் கொள்கையை பழம் பொருளியலாளர்கள் ஆதரித்தமைால் பெருமந்தத்திற்கான தீர்வை பெற முடியாமல் போனது.

- ✓ நீண்ட காலமாக நடைமுறை ரீதியில் தீர்வை பெறமுடியாமல் போனது. விவசாய அறுவடை நடவடிக்கைகள் சந்தை விலையில் தங்கியிருந்தமையால் சார்பு நிலை சமநிலையை பேணமுடியாமல் போனது. இதற்கு காரணம் அரசின் தலையிடாக் கொள்கையாகும்.

- ✓ கெய்ன்ஸியப் பொருளியலின் பண்புகளாக கேள்விப்பக்க பொருளியல், குறுங்கால பொருளாதாரம், பணம் தொடர்பான கண்டுபிடிப்பு, பருநிலைப் பொருளியல், அரச தலையீடு, முகாமை செய்யப்பட்ட முதலாளித்துவம், எதிர்பார்க்கைகள் போன்றவற்றை கூறலாம்.
- ✓ கெயின்ஸின் பேரிணப் பொருளாதார கோட்பாடுகளுல் வேலைவாய்ப்புக் கோட்பாடு, நுகர்வு, முதலீடு, வட்டி வீதம், பணம் போன்றவைகள் முக்கியமானவையாகும்.

## பயிற்சி வினாக்கள்

1. கெயின்சிய சிந்தனையின் தோற்றத்திற்கான காரணிகளை விளக்குக.
2. கெயின்சிய புரட்சி என்பதன் மூலம் நீர் நாடுவது யாது?
3. கெயின்சிய பொரளாதாரத்தின் பண்புகளை விளக்குக.
4. கெயின்சிய பொருளாதாரக் கோட்பாடுகளை ஆராய்க.

## திறவுச் சொற்கள்

கேள்விப்பக்க பொருளியல், குறுங்கால பொருளாதாரம், பணம், பருநிலைப் பொருளியல், அரச தலையீடு, முதலாளித்துவம், எதிர்பார்க்கைகள், வேலைவாய்ப்புக் கோட்பாடு, நுகர்வு, முதலீடு, வட்டி வீதம்.

## உசாத்துணைகள்

Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 09

## பணவியல்

**அத்தியாயம் 09**........................................................................98

பணவியல் ..........................................................................................98

9.1 பணவியல் ........................................................................100

9.2 மில்டன் பிரைடுமேன் 1912 (Milton Friedman)...............100

9.2.1 மில்டன் ப்ரைட்மேனின் முக்கிய பொருளாதார சிந்தனைகள்.........................................................................10

1

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது பணவியல் பொருளாதார சிந்தனைக் குறித்து விளக்குகின்றது. பணவியலில் மிக முக்கியமானவர் மில்டன் ப்ரைட்மேன் குறித்தும் அவரது பொருளாதார கருத்துக்களையும் கூறுகின்றது. மில்டன் ப்ரைட்மேன் பண நிரம்பலினை அடிப்படையாகக் கொண்டு பணக்கொள்கையினை விளக்குகிறார்.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. பணவியல் குறித்த அறிமுகத்தையும் பொருளாதார பங்களிப்பினையும் விளக்குதல்.
2. பணவியலில் முக்கியமான பொருளியல் அறிஞர் மில்டன் ப்ரைட்மேன் குறித்த அறிமுகத்தினை வழங்குதல்.
3. மில்டன் ப்ரைட்மேனின் பொருளாதார கோட்பாடுகள் குறித்தும் பங்களிப்புக்கள் குறித்தும் தெளிவுப்படுத்தல்.

## கற்றல் பேறுகள்

1. பணவியல் குறித்த அறிமுகத்தையும் பொருளாதார பங்களிப்பினையும் விளக்குவர்.
2. பணவியலில் முக்கியமான பொருளியல் அறிஞர் மில்டன் ப்ரைட்மேன் குறித்த அறிமுகத்தினை வழங்குவர்.
3. மில்டன் ப்ரைட்மேனின் பொருளாதார கோட்பாடுகள் குறித்தும் பங்களிப்புக்கள் குறித்தும் தெளிவுப்படுத்துவர்.

## 9.1 பணவியல்

பணவியல் என்பது 1970 களில் செல்வாக்கு பெற்ற பொருளாதார சிந்தனையின் ஒரு பள்ளியாகும். நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணரான மில்டன் ப்ரைட்மேன், அந்தக் காலகட்டத்தில் பணமதிப்புக் கொள்கைகளின் மிகப் பெரிய ஆதரவாளராக இருந்தார்.

ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைக்கு பண நிரம்பல் முக்கிய கருவியாகும். எனவே, அரசாங்கங்களும் மத்திய வங்கிகளும் இறைக் கொள்கையை விட பணவியல் கொள்கைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் பொருளாதாரத்தை உறுதிப்படுத்த முடியும்.

கெயின்சியன் மாதிரியானது வேலையின்மை மற்றும் பணவீக்கத்திற்கு இடையே ஒரு பரிமாற்றத்தை வாதிட்டாலும், நாணயவாதிகள் இந்த கருத்தை எளிதில் புறக்கணிக்கிறார்கள். அவர்களின் தர்க்கத்தின்படி, ஒரு பணவியல் கொள்கை மந்தநிலையின் போது வேலையின்மையை விட பணவீக்கத்தை நிர்வகிப்பதில் அதிகமாக கவனம் செலுத்துகிறது. நாணயவாதிகள் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீட்டைக் கட்டுப்படுத்துவதற்கு சார்பாக வாதிட்டனர். பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான முயற்சிகளை மத்திய வங்கிகளை அனுமதிக்கும் அதே வேளையில் அரசாங்கங்களின் பின் இருக்கை செயற்பாட்டை தீவிரமாக ஆதரித்தார்கள். இதன் விளைவாக, பணவியல் கொள்கை இன்று உலகில் உள்ள பல பொருளாதாரங்களுக்கு முதன்மையான பெரிய பொருளாதார கருவியாக பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## 9.2 மில்டன் பிரைடுமேன் 1912 (Milton Friedman)

அமெரிக்காவைச் சேர்ந்த மில்டன் பிரைட்மேன் பணக் கோட்பாடு மற்றும் நுகர்வு ஆய்விற்காக பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை 1976ம் ஆண்டு பெற்றார். மில்டன் பிரைட்மேன் 1912-ல் நியூயார்க் நகரில் பிறந்தார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில்

பட்டத்தை பெற்றார். இவர் பல அமெரிக்க பல்கலைக்கழகங்களில் பணியாற்றினார். இருந்த போதிலும் சிக்காக்கோ பல்கலைக்கழகப் பேராசிரியராகவே மில்டன் பிரைட்மென் கருதப்படுகின்றார். இவர் எழுதிய முக்கிய நூல்களாக இயல்புரை பொருளாதாரக் கட்டுரை (Essays in Positive Economics), பண அளவுக் கோட்பாடு ஆய்வு, நுகர்வுச் சார்புக் கோட்பாடு, முதலாளித்துவமும், சுதந்திரமும், விலை கோட்பாடு ஆகியன முக்கியமானவையாகும்.

### 9.2.1 மில்டன் ப்ரைட்மேனின் முக்கிய பொருளாதார சிந்தனைகள்

#### i. நுகர்வுச்சார்பு (Consumption function)

நடப்பு வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நுகர்வுச் சார்பை முதலில் விளக்கியவர் கெயின்ஸ் ஆவார். மில்டன் பிரைட்மேனின் நுகர்வுச் சார்பு கோட்பாடு நிரந்தர வருமான கோட்பாடு என அழைக்கப்படுகின்றது.

#### ii. நிரந்தர வருமான கருதுகோள் (Permanent income hypothesis)

இவர் தன்னுடைய ‘‘நுகர்வுச்சார்பு கோட்பாடு’’ என்னும் நூலில் இக்கோட்பாட்டை விளக்கியுள்ளார். இவரது கூற்றுப்படி வீட்டுத் துறையினர் அவர்களுடைய நுகர்வினை நடப்பு வருமானத்தின் அடிப்படையில் மட்டும் அமைத்துக் கொள்வதில்லை. மாறாக கடந்த காலத்தில் கிடைத்த வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைத்துக் கொள்கின்றனர் என்கிறார்.

#### iii. நவீன பணக் கணியக் கோட்பாடு (Modern quantity theory of Money)

பிரைட்மேன் பணவியல் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பினை வழங்கியுள்ளார். இவற்றில் இவரது பணக் கணியக் கோட்பாடு குறிப்பிடத்தக்கது. பணக் கணியக் கோட்பாடு பணத்திற்கான கேள்விப்பற்றிய கோட்பாடாகும். பணத்திற்கான கேள்வியை

தீர்மானிக்கின்ற காரணிகளாக பொதுநிலை அளவு, பொருட்கள் சேவைகளின் மொத்த உற்பத்தி அல்லது மெய் வருமானம், நடப்பு வட்டிவிகிதம், பொதுவிலைமட்டம் போன்றவற்றை பிரைட்மேன் கூறுகின்றார்.

### iv. முதலாளித்துவமும், சுதந்திரமும் (Capitalism and Freedom)

மில்டன் ப்ரைட்மேன் முதலாளித்துவத்தையும், சுதந்திரத்தையும் ஆதரிக்கின்றார். முதலாளித்துவ கருவியான சந்தை முறையைப் பற்றிய (Market System) இவரது கருத்துக்களுக்காகவே இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

### v. மூலதனக் கோட்பாடு (Capital Theory)

இவர் தனது விலை கோட்பாடு என்னும் நூலில் மூலதனக் கோட்பாட்டை விளக்குகின்றார். இவரது கருத்துக்கள் முக்கியமானவையாகவும் நினைவில் கொள்ள வேண்டியதாகவும் உள்ளது.

### சுருக்கம்

- ✓ பணவியல் என்பது 1970 களில் செல்வாக்கு பெற்ற பொருளாதார சிந்தனையின் ஒரு பள்ளியாகும்.
- ✓ பணவியல் ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைக்கு பண நிரம்பல் முக்கிய கருவியாகும்.
- ✓ அமெரிக்காவைச் சேர்ந்த மில்டன் பிரைட்மேன் பணக் கோட்பாடு மற்றும் நுகர்வு ஆய்விற்காக பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை 1976ம் ஆண்டு பெற்றார்.

- ✓ எழுதிய முக்கிய நூல்களாக இயல்புரை பொருளாதாரக் கட்டுரை (Essays in Positive Economics), பண அளவுக் கோட்பாடு ஆய்வு, நுகர்வுச் சார்புக் கோட்பாடு, முதலாளித்துவமும், சுதந்திரமும், விலை கோட்பாடு ஆகியன முக்கியமானவையாகும்.

- ✓ ப்ரைட்மேனின் முக்கிய பொருளாதாரக் கருத்துக்களாக நுகர்வுச்சார்பு, நிரந்தர வருமான கருதுகோள், நவீன பண கணியக் கோட்பாடு, முதலாளித்துவமும், சுதந்திரமும், மூலதனக் கோட்பாடு போன்றவை காணப்பட்டன.

## பயிற்சி வினாக்கள்

1. பணவியல் மூலம் நீர் விளங்கிக்கொண்வது யாது?
2. மில்டன் ப்ரைட்மேன் குறித்த அறிமுகத்தினை விபரிக்குக.
3. மில்டன் ப்ரைட்மேனின் பொருளாதார கோட்பாடுகள் குறித்தும் பங்களிப்புக்கள் குறித்தும் விமர்சன ரீதியாக ஆராய்க.

## திறவுச் சொற்கள்

ப்ரைட்மேனின், நுகர்வுச்சார்பு, நிரந்தர வருமான கருதுகோள், நவீன பண கணியக் கோட்பாடு, முதலாளித்துவம், சுதந்திரம், மூலதனக் கோட்பாடு, பணவியல், பணக்கொள்கை

## உசாத்துணைகள்

Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 10

# நிறுவனப் பொருளாதாரம்

**அத்தியாயம் 10**.......................................................................... 105

நிறுவனப் பொருளாதாரம்................................................................. 105

10.1 நிறுவனப் பொருளாதாரம்............................................... 107

10.1.1 நிறுவனப் பொருளாதாரத்தின் கொள்கைகள் ............ 107

10.2 வெப்லன் (Veblen) ........................................................ 107

10.3 காமன்ஸ் (Commons) (1895 -1945) ............................... 110

10.4 மிட்செல் (Mitchell 1874-1948) 111

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது நிறுவனப் பொருளாதாரம் குறித்து விளக்குகின்றது. தார்ஸ்டின் வெப்லன், காமேன்ஸ், மிட்செல் ஆகியோர் நிறுவனப் பொருளாதாரத்தில் மிக முக்கியமானவர்களாவர். இவர்களது உல்லாச வகுப்பினர் கோட்பாடு, தொழில் துணிவுக்கோட்பாடு, வர்த்தக சகடவோட்டம் போன்ற கோட்பாடுகள் முக்கியமானவையாகும்.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. நிறுவன பொருளாதாரம் குறித்து வரையறை செய்தல்.
2. தார்ஸ்டின் வெப்லன், காமேன்ஸ், மிட்செல குறித்த அறிமுகத்தினை வழங்குதல்.
3. உல்லாச வகுப்பினர் கோட்பாடு, தொழில் துணிவுக்கோட்பாடு, வர்த்தக சகடவோட்டம் போன்ற முக்கியமான சில கோட்பாடுகளுக்கு இவர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் குறித்து தெளிவுப்படுத்தல்.

## கற்றல் பேறுகள்

1. நிறுவனப் பொருளாதாரம் குறித்து வரையறை செய்வர்.
2. தார்ஸ்டின் வெப்லன், காமேன்ஸ், மிட்செல் குறித்து தெளிவுப் படுத்துவர்.
3. உல்லாச வகுப்பினர் கோட்பாடு, தொழில் துணிவுக்கோட்பாடு, வியாபாரச் சகடவோட்டம் போன்ற முக்கியமான சில கோட்பாடுகளுக்கு இவர்கள் ஆற்றிய பங்களிப்புக்களை தெளிவுப்படுத்தி விளக்குவர்.

## 10.1 நிறுவனப் பொருளாதாரம்

நிறுவனப் பொருளாதாரம் 20ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தோன்றியதுடன் அமெரிக்காவில் தோன்றிய பொருளாதாரக் குழுவினரில் மிக முதன்மையானவர்களாக நிறுவனக் குழுவினர் உள்ளனர். இக்குழுவின் தார்ஸ்டின் வெப்லன், காமேன்ஸ், மிட்செல் ஆகியோரும் முக்கிய இடம் வகிக்கிறார்கள். இக்குழுவினர் அனைவரும் ஒரே விதமான கோட்பாட்டையோ, கருத்தையோ தரவில்லை. மாறாக வெப்லன் பல நுணுக்கமான புதிய கருத்துக்களை விளக்கியுள்ளார்.

### 10.1.1 நிறுவனப் பொருளாதாரத்தின் கொள்கைகள்

நிறுவனப் பொருளாதாரத்தினரின் பிரதானக் கருத்து பொருளாதார வாழ்க்கையில் நிறுவனங்களின் பங்கு முக்கியம் எனக் கூறுகின்றனர். நிறுவனம் என்பது ஓர் அமைப்பையோ அல்லது கட்டிடத்தையோ குறிக்காது. மாறாக, மரபுகள், பழக்க வழக்கங்கள், நியதிகள், வாழ்க்கை முறைகள், ஆராய்ச்சி முறைகள், எண்ணங்கள் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

நிறுவனப் பொருளாதாரத்தினரிற்கு ஏற்ப பொருளாதார வாழ்க்கை பொருளாதார நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது. மாறாக, பொருளாதார விதிகளால் அல்ல. அமைப்புவாத பொருளாதாரத்தினர் தொன்மைவாத கருத்துக்களை ஒட்டியும் வரலாற்று வாதத்தினரின் கருத்தினை ஒட்டியும் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

## 10.2 வெப்லன் (Veblen)

அமெரிக்கப் பொருளாதார சிந்தனை வரலாற்றில் புதியக் கருத்துக்களை வழங்கிய சிந்தனையாளர். வெப்லன் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தார். இவர் எழுதிய முக்கியமான பொருளாதார நூல்களாக உல்லாச வகுப்பினரின் கோட்பாடு (Theory of Leisure Class), தொழில் துணிவுக் கோட்பாடு

(Theory of Business Enterprise), தலத்தில் இல்லாதோர் உரிமை முறை, போன்றன காணப்படுகின்றன. உல்லாச வகுப்பினரின் கோட்பாடு, தொழில் துணிவுக் கோட்பாடு ஆகியவை பொருளாதாரக் கருத்துக்களுள் முக்கியமானதாக காணப்படுகின்றது.

### i. உல்லாச வகுப்பினர் கோட்பாடு (Theory of Leisure Class)

உல்லாச வகுப்பினரின் கோட்பாட்டின் வாயிலாக எல்லோருடைய கவனத்தையும் வெப்லன் கவருகிறார். செல்வந்தர்களின் வகுப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் அதனால் ஏற்படும் சமுக பொருளாதார விளைவுகள் யாவை என்பதையும் வெப்லன் கூறுகின்றார். இந்த வகுப்பினர் நாட்டின் உற்பத்தியினைப் பெருக்கும் வகையில் ஒரு பணியையும் செய்யாதவர்கள். ஆனால் செய்வது போல் போலியாக நடிப்பார்கள். ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டு அனாவசியச் செலவு செய்வார்கள். பயனுள்ள பொருட்களுக்குப் பதிலாகப் பகட்டான பொருட்களையே வாங்குகின்றனர். பண்புள்ள கல்விக்குப் பதிலாக பயனற்ற பகட்டான கல்வி கற்கின்றனர் என்கின்றார்.

இவர்களது உல்லாச வாழ்க்கையை நடுத்தர வகுப்பினரும் பின்பற்ற விரும்புகின்றனர். இதன் விளைவாகப் பொருள் உற்பத்தி நிறுவனங்கள், அமைப்புகள் யாவும் செல்வந்தர்களின் பழக்க வழக்கங்களுக்கேற்ப அமைந்து விடுகின்றன. இதனால் நாட்டில் பொருளரதாரநிலை சீர்கெடுகிறது என்கிறார் வெப்லன்.

சுருக்கமாகக் கூறினால் வெப்லன் செல்வந்தர்களின் பழக்க வழக்கங்களைக் கடுமையாகத் தாக்குகிறார். இவர்களின் ஆடை, அலங்காரம், குடிப்பழக்கம், நாடுசுற்றும் வெறி ஆகிய பண்புகளையும் பழக்கங்களையும் கண்மூடித்தனமாக கண்டனம் செய்கின்றார். இவ்வாறான முதலாளித்துவ நாகரீகத்திற்குப் பண ஆட்சிப் பண்பாடு என்று வெப்லன் பெயர் சூட்டுகின்றார். முதலாளித்துவத்தில் இதுவரை பிறரால் விளக்கப்படாத சில அம்சங்களைச் சுட்டிக் காட்டினார் வெப்லன்.

### ii. தொழில் துணிவுக்கோட்பாடு (Theory of Business enterprise)

தனது தொழில் துணிவுக் கோட்பாடு என்ற நூலில் அவரது புதிய கருத்துக்களை விளக்குகின்றார். வெப்லன் பொருளாதார மாற்றம் (Economic Change) பற்றிய ஒரு புதியக் கோட்பாட்டை வகுத்துள்ளார். இக்கோட்பாடு சமூகத்தில் வளர்ந்து வரும் இரண்டு எதிர்ப்பு சக்திகளின் போராட்டத்தினால், பூசலினால் ஏற்பட்டது. இது தொழில் இனத்திற்கும் பண இனத்திற்கும் ஏற்படும் போராட்டம், அல்லது திறனாட்சி, பண ஆட்சிக்கு இடையே ஏற்படும் பூசல் இப்போராட்டம். பூசல்களுக்கான காரணங்களையும் தனது தொழிற் துணிவுக் கோட்பாட்டில் வெப்லன் விளக்குகிறார்.

### iii. வர்த்தக சகடவோட்டம் (Business Cycle)

முதலாளித்துவ அமைப்பில் பண்டங்களை உற்பத்தி செய்வோர் ஒருவராகவும், இலாபம் திரட்டுவோர் பிறிதொருவராகவும் இருக்கின்றனர். இதனால்தான் பொருளாதார நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன என்கிறார் வெப்லன். செழிப்பான காலத்தில் தொழிற்சாலைகள் மிகுதியாக கடனை வாங்கித் தொழிலைப் பெருக்கி இலாபம் பெற முயல்கின்றனர். வங்கிக்கடன் மேலும் மேலும் வாங்கப்பட தொழில் விரிவடைந்து உற்பத்தி பெருகும். இப்பெருக்கத்திற்கு ஒரு முடிவு ஏற்படும். அளவற்ற உற்பத்தியால் தொழில் தேக்கம் ஏற்பட தொழிலதிபர்கள் மேலும் கடன் வாங்கத் தயங்குவார்கள். வங்கிகள் கொடுத்தக் கடனை திரும்ப பெற முயலும். பணசசுருக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் இறங்கும். விலைவாசிக்குத் தக்கவாறு முதலீடுகளின் மதிப்பும் குறையும். பின்னர் தொழில் திரும்பவும் வளரும். இலாபம் பெருகத் தொடங்கும். இது வியாபாரச் சகடத்தின் திருப்புமுனையாகத் திகழுமெனக்கூறி தனது வரத்தக சகடஓட்டக் கருத்தை விளக்குகின்றார்.

### 10.3 காமன்ஸ் (Commons) (1895 -1945)

வெப்லனுக்கு அடுத்தபடியாக இக்குழுவில் இடம் வகிப்பவர் J.R. காமன்ஸ் என்பவர். இவர் ஒஹியோ மாநிலத்தில் பிறந்து, ஓபர்லின் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று விஸ்கான்ஸின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வுபெற்றார். கோட்பாட்டுத்திறனும் நடைமுறை அனுபவமும் ஒருங்கே பெற்றிருந்தார்.

இவர் எழுதிய நூல்கள் பலவற்றில் முக்கியமானவை ‘‘அமெரிக்கத் தொழில் சமூகத்தின் சான்றுகள் தாங்கிய வரலாறு, தொழிற் சங்கமும் தொழிலாளர் பிரச்சனைகளும், அமைப்புவாதப் பொருளாதாரம் ஆகும். இந்நூல்களிலிருந்து இவர் தொழிலாளர் பொருளாதாரத்தில் (Labour Economics) ஒரு சிறந்த நிபுணர் என்பது நன்கு விளங்குகின்றது.

### i. தொடர்ந்து செல் நிறுவனம் (Theory of Going Concern)

காமன்ஸ் தொடர்ந்து செல் தொழில் பற்றி புதியதொரு கோட்பாட்டைத் தருகின்றார். கடந்த கால நிலை, இன்றைய உற்பத்தி முறை, வருங்காலத்தில் அதன் செழிப்புநிலை ஆகியவை இவ்வமைப்பை நிர்ணயிக்கின்றன. தொழில்நுட்ப உற்பத்தித் திறமைக்கும் பண்டங்களை விற்பனை செய்யும் திறமைக்கும் சரியான பொருத்தம் இருந்தால் தொழில் சீராக தொடர்ந்து நடக்கும் என்பது காமன்சின் கருத்தாகும்.

### ii. உழைப்பிற்கு முக்கியத்துவம்

கார்ல் மார்க்சின் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு தொழிலாளர்களின் கூலி உயரவேண்டுமென வலியுறுத்தியதுடன் தொழிற்சங்கங்கள் பாடுபட வேண்டும் என்கின்றார். தொழிலாளி - முதலாளி பிரச்சினைகள் சமரசமாக தீர்த்து வைக்கப்படவேண்டுமென வலியுறுத்தியவர் காமன்ஸ் ஆவார். இவ்வகையான சிந்தனை கருத்துக்களால் இவர் நிறுவனப் பொருளாதாரத்தில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றார்.

### iii. பொருளாதார கருத்துக்கள்

சமுதாயத்திலுள்ள அமைப்புகள் யாவும் படிப்படியாக வளரும் இயல்புடையன என்பதுடன் தனி மனிதனின் போக்கைக் கூட்டுச் செயல் ஒழுங்குபடுத்துகின்றது என்பதே காமன்ஸ் வகுத்த நிறுவனப் பொருளாதாரத்தின் கருப்பொருளாகும். கூட்டு முயற்சியும் கூடிச் செயலாற்றி வருவதும் பொருளாதார நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கின்றன என்று காமன்ஸ் கருதினார்.

சொத்துரிமைச் சட்டங்கள் உரிமைப் போருக்கு வித்திடுகின்றன எனக் கருதினார். ஒருவரோடொருவர் சமுதாயத்தில் தொடர்பு கொள்வது தனிமனிதனின் விருப்பங்கள், ஆசாபாசங்கள் அல்ல. அது ஒரு சமூக நிகழ்ச்சி என்பது அவர் கருத்து.

பொருளாதார பரிமாற்றத்தினை பேரம்பேசி நடைபெறும் பரிமாற்றம், பரிமாற்றம், பங்கீட்டுப் பரிமாற்றம் என்று மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார் காமன்ஸ்.

## 10.4 மிட்செல் (Mitchell 1874-1948)

வெப்லனின் மாணவர் மிட்செல். அவரின் நூல்களுள் ”வியாபாரச் சகடங்களும் அவற்றின் காரணங்களும்” முக்கியமானது. அனுபவ ஆய்வு, புள்ளியியல் முறை ஆகிய இரண்டையும் பயன்படுத்தி பொருளியலை மதிப்பீடு செய்யவும், பொருளாதாரச் சக்திகளை ஒப்புநோக்கவும் புதிய கோட்பாடுகள் வகுக்கவும் முடியும் என மிட்செல் கூறினார்.

சமுதாயத்தின் பொருளாதார அமைப்புகளை பணப்புழக்கம், வங்கி, வளர்ச்சி, தொழிலாளர்களின் நிலைமை ஆகியவை நிர்ணயிக்கின்றன என்கிறார் மிட்செல்.

நவீன சமுதாயத்தில் சக்தி தொழில் முயல்வோரையேச் சாரும் என்பது மிட்செல்லின் நம்பிக்கை. சமுதாயத்திற்கு வேண்டிய பண்டங்களையெல்லாம் உற்பத்தி செய்யும் அரும்பணியைத் தொழில்முயல்வோரே புரிகின்றனர். இவர்களே பொருளாதார

வழிகாட்டியாகவும் பொருளாதார அமைப்பை நிருணயிகக்க கூடியவர்கள் எனவும் கூறுகின்றார்.

வணிக நிலை மாறி மாறிச் சுழன்றுக்கொண்டிருக்கின்றன. சீராக நடைபெறுவதில்லை. சிலசமயம் செழிப்பு நிலையும், சில சமயம் மந்த நிலையும் ஏற்படுகின்றது. இவ்வாறாக வணிக சுழலில் பல்வேறு நிலைமைகள் தானாகவே ஏற்படுகின்றது என்பதை மிட்செல் விளக்கியுள்ளார். வணிகச்சுழல் மாறி மாறி சுழன்றுக் கொண்டிருப்பதற்குப் பல காரணங்களாக நாட்டின் அரசியல் நிலைமை, வங்கிக் கொள்கையிலும் பண கொள்கையிலும் ஏற்படும் மாறுதல்கள், புதிய உற்பத்தி முறைகள் மற்றும் உலக விவகாரங்கள் ஆகியன காணப்படுகின்றன.

முதல் உலகப்போருக்கு பிறகு, தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக்கழகத்தை நிறுவினார். உலகப் பொருளாதார மந்தத்திலிருந்து பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்காக தீட்டப்பட்ட அமெரிக்காவின் திட்ட செயல்பாட்டை புகழ்கிறார்.

அமைப்புவாதப் பொருளாதாரத்தில் வெப்லன், காமன்ஸ், மிட்செல் ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். இவர்களால் அமைப்புவாதப் பொருளாதாரம் பிரிட்டனிலும், பிற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. ஆயினும் இது ஒரு பள்ளியாக வளரவில்லை.

## சுருக்கம்

- ✓ நிறுவனப் பொருளாதாரம் 20ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தோன்றியதுடன் அமெரிக்காவில் தோன்றிய பொருளாதாரக் குழுவினரில் முதன்மையானவர்கள் நிறுவனக் குழுவினரே ஆவர்.
- ✓ தார்ஸ்டின் வெப்லன், காமேன்ஸ், மிட்செல் ஆகியோரும் இடம் வகிக்கிறார்கள்.
- ✓ நிறுவனப் பொருளாதாரத்தினர் பிரதானக் கருத்து பொருளாதார வாழ்க்கையில் நிறுவனங்களின் பங்கு முக்கியம் எனக் கூறினர்.

- ✓ உல்லாச வகுப்பினரின் கோட்பாடு, தொழில் துணிவுக் கோட்பாடு ஆகியவை பொருளாதாரக் கருத்துக்களுள் முக்கியமானதாக காணப்படுகின்றது.
- ✓ சமுதாயத்திலுள்ள அமைப்புகள் யாவும் படிப்படியாக வளரும் இயல்புடையன என்பதுடன் தனி மனிதன் போக்கைக் கூட்டுச் செயல் ஒழுங்குபடுத்துகின்றது என்பதே காமன்ஸ் வகுத்த நிறுவனப் பொருளாதாரத்தின் கருப்பொருளாகும்.
- ✓ அமைப்புவாதப் பொருளாதாரத்தில் வெப்லன், காமன்ஸ், மிட்செல் ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். இவர்களால் அமைப்புவாதப் பொருளாதாரம் பிரிட்டனிலும், பிற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. ஆயினும் இது ஒரு பள்ளியாக வளரவில்லை.

## பயிற்சி வினாக்கள்

1. நிறுவனப் பொருளாதாரம் என்பதனை விபரிக்குக.
2. வெப்லன், காமேன்ஸ், மிட்செல் ஆகியோர் குறித்து சுருக்கமாக விளக்குக.
3. நிறுவனவாதிகளின் பொருளாதாரக் கருத்துக்களை விமர்சன ரீதியாக விளக்குக.

## திறவுச் சொற்கள்

வணிக நிலை, அமைப்புவாதம், நிறுவனப் பொருளாதாரம், உல்லாச வகுப்பினர், தொழில் துணிவு, இலாபம், வியாபாரச் சகடவோட்டம், உழைப்பு, சொத்துரிமை

## உசாத்துணைகள்

Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 11

## பின்வந்த கெயின்சியப் பொருளாதாரம்

**அத்தியாயம் 11** .......... 115

பின்வந்த கெயின்சியப் பொருளாதாரம் .......... 115

11.1 அறிமுகம் .......... 117

11.2 பின்வந்த கெயின்ஸிய பொருளியலாளர்கள் .......... 119

11.3 விமர்சனங்கள் .......... 119

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது பின்வந்த கெயின்சிய பொருளாதாரம் குறித்தும் அதில் முக்கியமான பொருளியலறிஞர்கள் குறித்தும் விளக்குகின்றது. மேலும் பின்வந்த கெயின்சிய பொருளாதார கொள்கைகள் குறித்து விரிவாக விளக்குவதுடன் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் குறித்தும் விளக்குகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. பின்வந்த கெயின்சியப் பொருளாதார கருத்துக்கள் குறித்து விளக்குதல்.
2. பின்வந்த கெயின்சியப் பொருளாதார அறிஞர்கள் குறித்த அறிமுகத்தை வழங்குதல்.
3. பின்வந்த கெயின்சியப் பொருளாதார கருத்துக்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் குறித்து விளக்குதல்.

## கற்றல் பேறுகள்

1. பின்வந்த கெயின்சியப் பொருளாதார கருத்துக்கள் குறித்து அறிந்துக்கொள்வர்.
2. பின்வந்த கெயின்சியப் பொருளாதார அறிஞர்கள் குறித்த அறிமுகத்தை வழங்குவர்.
3. பின்வந்த கெயின்சியப் பொருளாதார கருத்துக்களுக்கு எதிரான விமர்சனங்களை முன்வைப்பர்.

## 11.1 அறிமுகம்

பின்வந்த கெயின்சிய பொருளாதாரம் என்பது 20 ஆம் நூற்றாண்டின் முக்கிய பொருளாதார நிபுணரான ஜான் மேனார்ட் கெய்ன்ஸின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார சிந்தனைப் பள்ளியாகும். பின்வந்த கெயின்சிய பொருளாதாரம் பல முக்கிய கொள்கைகளை வலியுறுத்துகிறது:

**i.** **பயன்படு கேள்வி:** பொருளாதார உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை தீர்மானிப்பதில் பயனுள்ள கேள்வியின் முக்கியத்துவத்தை பின்வந்த கெயின்சியர்கள் வலியுறுத்துகின்றனர். மொத்த கேள்வியில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்ற இறக்கங்களுக்கு வழிவகுக்கும் என்றும், பொருளாதாரத்தை நிலைப்படுத்த அரசின் தலையீடு அவசியமாக இருக்கலாம் என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

**ii.** **நிச்சயமற்ற தன்மை:** சரியான தகவல் மற்றும் பகுத்தறிவு எதிர்பார்ப்புகளை எடுத்துக் கொள்ளும் பழம்பொருளியல் பொருளாதாரம் போலல்லாமல், பின்வந்த கெயின்சியர்கள் முடிவெடுப்பதில் நிச்சயமற்ற பங்கை வலியுறுத்துகின்றனர். பொருளாதார முகவர்கள் பெரும்பாலும் பூரணமற்ற தகவல் மற்றும் எப்போதும் பகுத்தறிவு இல்லாத எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதாக அவர்கள் நம்புகிறார்கள்.

**iii.** **உற்புற பணம்:** பின்வந்த கெயின்சியர்கள் பணம் உற்புறமானது என்று வாதிடுகின்றனர். அதாவது கடன் மற்றும் கடன் நடவடிக்கைகள் மூலம் நிதி அமைப்புக்குள் உருவாக்கப்படுகிறது. இது மத்திய வங்கியால் மட்டுமே கட்டுப்படுத்தப்படும் பணத்தை வெளிப்புறமாகப் பார்ப்பதற்கு முரணானது.

iv. **விநியோகக் கருத்தாய்வுகள்:** பின்வந்த கெயின்சியர்கள் வருமான விநியோகம் மற்றும் பொருளாதார விளைவுகளில் அதன் தாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் சமத்துவமின்மை மற்றும் வருமானம் மற்றும் செல்வத்தின் சமமான விநியோகத்தை ஊக்குவிக்கும் கொள்கைகளை ஆதரிக்கின்றனர்.

v. **நிஜ உலக நிறுவனங்கள்:** பொருளாதார விளைவுகளை வடிவமைப்பதில் வங்கிகள், அரசாங்கக் கொள்கைகள் மற்றும் தொழிலாளர் சந்தை இயக்கவியல் போன்ற நிஜ உலக நிறுவனங்களின் முக்கியத்துவத்தை பின்வந்த கெயின்சியர்கள் வலியுறுத்துகின்றனர். இந்த நிறுவனங்கள் பொருளாதார செயல்திறனில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

vi. **நீண்ட கால வளர்ச்சி:** பின்வந்த கெயின்சியர்கள் பெரும்பாலும் குறுகிய கால பேரின பொருளாதார சிக்கல்களுடன் தொடர்புடையதாக இருந்தாலும், அவர்கள் நீண்ட கால வளர்ச்சி இயக்கவியலையும் கருதுகின்றனர். நிலையான பொருளாதார வளர்ச்சியில் புதுமை, தொழில்நுட்ப மாற்றம் மற்றும் முதலீடு ஆகியவற்றின் பங்கை அவை வலியுறுத்துகின்றன.

vii. **நிதி ஸ்திரமின்மை:** நிதிச் சந்தைகள் பற்றிய கெய்ன்ஸின் கருத்துக்களைக் கட்டமைத்து, பின்வந்த கெயின்சியர்கள் நிதி உறுதியற்ற தன்மை மற்றும் நெருக்கடிகளுக்கான சாத்தியக்கூறுகளை எடுத்துக்காட்டுகின்றனர். நிதிச் சந்தைகள் ஊகங்கள் மற்றும் உறுதியற்ற தன்மைக்கு ஆளாகின்றன. முறையான அபாயங்களைத் தடுக்க ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தேவை என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

### 11.2 பின்வந்த கெயின்ஸிய பொருளியலாளர்கள்

### i. ஜோன் ராபின்சன் (Joan Robinson)

ஜோன் ராபின்சன் (1903-1983) ஒரு முன்னோடி பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் மற்றும் பிந்தைய கெயின்சியன் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமான நபர்களில் ஒருவராவார். பொருளாதாரக் கோட்பாட்டிற்கு, குறிப்பாக நிரைவில் போட்டி, வளர்ச்சிக் கோட்பாடு மற்றும் மூலதனக் கோட்பாடு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளார்.

### ii. பால் டேவிட்சன் (Paul Davidson)

பால் டேவிட்சன் ஒரு முக்கிய அமெரிக்க பொருளாதார நிபுணர் ஆவார், அவர் போஸ்ட் கெயின்சியன் பொருளாதாரத்திற்கு அவர் செய்த பங்களிப்புகளுக்காக அறியப்பட்டவர். ஜான் மேனார்ட் கெய்ன்ஸின் கருத்துக்களை, குறிப்பாக நிச்சயமற்ற தன்மை, சர்வதேசப் பொருளாதாரம் மற்றும் பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றின் பின்னணியில் அவர் முன்னெடுத்துச் செல்வதிலும் விளக்கமளிப்பதிலும் செல்வாக்கு செலுத்தினார்.

### iii. மைக்கல் கலெக்கி (Michal Kalecki)

மைக்கல் கலெக்கி (1899-1970) ஒரு புகழ்பெற்ற போலந்து பொருளாதார நிபுணர் ஆவார், அவருடைய பணி இணையாக இருந்தது மற்றும் சில விஷயங்களில் ஜான் மேனார்ட் கெய்ன்ஸின் பணியை எதிர்பார்த்தார். மேக்ரோ பொருளாதாரக் கோட்பாட்டிற்கு, குறிப்பாக பயனுள்ள கேள்வி, வருமானப் பகிர்வு மற்றும் முதலாளித்துவப் பொருளாதாரங்களின் இயக்கவியல் ஆகியவற்றில் கலெக்கி குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தார்.

### 11.3 விமர்சனங்கள்

பிந்தைய கெயின்சியன் பொருளாதாரம், பிரதான நவ பழம் பொருளியல் பொருளாதாரத்திற்கு ஒரு வலுவான மாற்றீட்டை

வழங்கும் அதே வேளையில், பல விமர்சனங்களை எதிர்கொண்டது. இந்த விமர்சனங்கள் பெரும்பாலும் அதன் கோட்பாட்டு அடிப்படைகள், அனுபவப் பொருத்தம் மற்றும் கொள்கை தாக்கங்களைச் சுற்றியே உள்ளன. முக்கிய விமர்சனங்கள் பின்வருமாறு:

i. முக்கிய பொருளாதாரக் கோட்பாடுகளை வகைப்படுத்தும் கடுமையான கணித முறைமை மற்றும் முறையான மாதிரி ஆகியவை பிந்தைய கெயின்சியன் பொருளாதாரத்தில் இல்லை என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். பல பிந்தைய கெயின்சியன் பகுப்பாய்வுகளின் தரமான தன்மை துல்லியமான, சோதிக்கக்கூடிய கணிப்புகளைப் பெறுவதை கடினமாக்குகிறது என்று அவர்கள் கூறுகின்றனர்.

ii. பிந்தைய கெயின்சியன் பொருளாதாரம் பரந்த அளவிலான பார்வைகள் மற்றும் அணுகுமுறைகளை உள்ளடக்கியது. ஓர் ஒருங்கிணைந்த கோட்பாட்டு கட்டமைப்பை இது கொண்டிருக்கவில்லை. இந்த பன்முகத்தன்மை சிக்கலான பொருளாதார யதார்த்தங்களை நிவர்த்தி செய்கிறது. ஆனால் இது ஒரு ஒத்திசைவான கோட்பாட்டின் வளர்ச்சியை சிக்கலாக்குகிறது.

iii. சில விமர்சகர்கள் பின்வந்த கெயின்சியன் பொருளாதாரம் அதன் கோட்பாடுகளை ஆதரிக்க போதுமான அனுபவ ஆதாரங்களை உருவாக்கவில்லை என்று வலியுறுத்துகின்றனர். பல பின்வந்த கெயின்சியன் முன்மொழிவுகள் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. அனுபவ ஆராய்ச்சி மூலம் போதுமான அளவு சரிபார்க்கப்படவில்லை என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

iv. விரிவான அரசாங்க தலையீடு மற்றும் ஒழுங்குமுறை போன்ற பின்வந்த கெயின்சியன் கொள்கை பரிந்துரைகள் பெரும்பாலும் சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்றன. இந்தக்

கொள்கைகள் திறமையின்மை, அரசாங்கத்தின் எல்லை மீறல் மற்றும் திட்டமிடப்படாத பொருளாதார விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். பணவியல் தலையீடுகளின் செயல்திறனை நம்புபவர்களால் பணவியல் கொள்கையை விட நிதிக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பது சிக்கலாகக் கருதப்படுகிறது.

v. பின்வந்த கெயின்சியன் பொருளாதாரம் பெரும்பாலும் வலுவான நுண்பொருளாதார அடித்தளங்களைக் கொண்டிருக்கவில்லை என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். பின்வந்த கெயின்சியர்கள் பேரிண பொருளாதாரத்தில் அதிக கவனம் செலுத்துகின்றனர் மற்றும் பொருளாதார விளைவுகளை வடிவமைப்பதில் தனிப்பட்ட நடத்தை மற்றும் சந்தை வழிமுறைகளின் முக்கியத்துவத்தை கவனிக்கவில்லை என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

vi. பின்வந்த கெயின்சியர்கள் நிச்சயமற்ற தன்மை மற்றும் எதிர்பார்ப்புகளின் பங்கை எடுத்துக்காட்டினாலும், இந்த கருத்துக்கள் பெரும்பாலும் மிகவும் தெளிவற்றதாகவும், முறையான பொருளாதார மாதிரிகளில் இணைக்க கடினமாக இருப்பதாகவும் விமர்சகர்கள் வாதிடுகின்றனர். நிச்சயமற்ற தன்மைக்கான தெளிவான மற்றும் செயல்பாட்டு வரையறை இல்லாதது உறுதியான பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதற்கான சவால்களை முன்வைக்கிறது.

vii. சில பொருளாதார வல்லுநர்கள் சமகாலப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பின்வந்த கெயின்சியன் பொருளாதாரத்தின் பொருத்தத்தை கேள்வி எழுப்புகின்றனர். முதன்மையாக 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவாக்கப்பட்ட பின்வந்த கெயின்சியன் கோட்பாட்டால் வழங்கப்பட்ட நுண்ணறிவு, நவீன உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரங்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும்

நிதி கண்டுபிடிப்புகளின் சிக்கல்களை போதுமான அளவில் நிவர்த்தி செய்யாமல் உள்ளது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

viii. பொருளாதாரச் செயல்பாடுகளை இயக்குவதில் மொத்த கேள்வியின் பங்கை பின்வந்த கெயின்சியன் பொருளாதாரம் மிகைப்படுத்துகிறது என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். உற்பத்தித்திறன், புதுமை மற்றும் முதலீட்டிற்கான ஊக்குவிப்பு போன்ற நிரம்பல் காரணிகளின் முக்கியத்துவத்தை இது புறக்கணிக்கக்கூடும் என்று வாதிடுகின்றனர்.

## சுருக்கம்

- ✓ பின்வந்த கெயின்சிய பொருளாதாரம் என்பது 20 ஆம் நூற்றாண்டின் முக்கிய பொருளாதார நிபுணரான ஜான் மேனார்ட் கெய்ன்ஸின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார சிந்தனைப் பள்ளியாகும்.

- ✓ பால் டேவிட்சன் ஒரு முக்கிய அமெரிக்க பொருளாதார நிபுணர் ஆவார்.

- ✓ மைக்கல் கலெக்கி (1899-1970) ஒரு புகழ்பெற்ற போலந்து பொருளாதார நிபுணர் ஆவார்.

- ✓ ஜோன் ராபின்சன் (1903-1983) ஒரு முன்னோடி பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் மற்றும் பிந்தைய கெயின்சியன் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமான நபர்களில் ஒருவர்.

## பயிற்சி வினாக்கள்

1. பின்வந்த கெயின்சியப் பொருளாதாரம் என்றாள் என்ன என்பதனை விபரிக்குக.

2. பின்வந்த கெயின்சியப் பொருளியலாளர்கள் குறித்து சுருக்கமாக விளக்குக.

3. பின்வந்த கெயின்சியப் பொருளாதாரக் கருத்துக்களை விமர்சன ரீதியாக விளக்குக.

## திறவுச் சொற்கள்

பயன்படு கேள்வி, உற்புற பணம், விநியோகம், நிறுவனங்கள், நிதி ஸ்திரமின்மை, நீண்ட கால வளர்ச்சி

## உசாத்துணைகள்


Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.

# அத்தியாயம் 12

## பால் ஏ. சாமுவேல்சன்

**அத்தியாயம் 12**.................................................................. 124

பால் ஏ. சாமுவேல்சன்.............................................................. 124

12.1 பால் ஏ. சாமுவேல்சன் (Paul A. Samuelson -1915): அறிமுகம் ..................................................................... 126

12.2 சாமுவேல்சனின் பங்களிப்புக்கள்.................................... 126

## அத்தியாயம் பற்றிய சுருக்கம்

இவ்வத்தியாயமானது பின்வந்த கெயின்சிய பொருளாதாரம் குறித்தும் அதில் முக்கியமான பொருளியலாளரான பால் ஏ. சாமுவெல்சன் குறித்தும் விளக்குகின்றது. அவரின் பொருளாதார பங்களிப்பு பேரிண மற்றும் நுண்பாக பொருளியலும் காணப்பட்டது. முக்கியமாக வெளிப்படு விருப்பத் தெரிவுக் கோட்பாடு முக்கியமானதாகும்.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. சாமுவெல்சன் குறித்த அறிமுகத்தை வழங்குதல்.
2. சாமுவெல்சனின் பொருளாதார பஙகளிப்பினை விளக்குதல்.

## கற்றல் பேறுகள்

1. சாமுவெல்சன் குறித்த அறிமுகத்தை வழங்குவர்.
2. சாமுவெல்சனின் பொருளாதார பங்களிப்பினை விளக்குவர்.

## 12.1 பால் ஏ. சாமுவேல்சன் (Paul A. Samuelson-1915): அறிமுகம்

1915ல் பிறந்த சாமுவேல்சன் 1970ல் நோபல் பரிசுபெற்ற அமெரிக்கப் பொருளாதார மேதையாவார். தற்போது அரசு மற்றும் அரசுத் துறைச்சாரா நிறுவனங்களின் நடவடிக்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். பொருளாதார ஆய்வின் அடிப்படை (Foundation of Economic Analysis - 1947), பொருளாதாரம் (Economics - 1949), உலக தேக்க வீதம் (Worldwide Stagflation-1974) போன்றவை இவரின் நூல்களுள் முக்கியமானவைகள்.

இவரது வெளிப்படுத்துகை விருப்பத் தெரிவுக் கோட்பாடு (Revealed Preference theory) பெருக்கி - முடுக்கி இணைப்புச் செயல் கருத்து (Multiplier Accelerator Interaction), பொருளாதார வளர்ச்சிக் கருத்து, நலப் பொருளாதாரக் கருத்து ஆகியன இவரது உலகப்புகழுக்குக் காரணமாய் உள்ளன. பேரிணப் பொருளாதாரம். நலப்பொருளாதாரம். கணிதப் பொருளாதாரம் ஆகியவற்றில் இவர்கூறிய கருத்துக்கள் இவருக்கு நோபல் பரிசு பெற்றுத்தர உதவியது எனலாம்.

## 12.2 சாமுவேல்சனின் பங்களிப்புக்கள்

### i. பொருளாதாரத்திற்கான இலக்கணம்:

சாமுவேல்சனின் இலக்கணம் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ளதால் வளர்ச்சி இலக்கணம் எனக் கூறப்படுகின்றது. மக்களின் விருப்பங்கள் எண்ணற்றதாக இருப்பதால் அவர்களின் விருப்பத்திற்கேற்ப பொருள்களை உற்பத்தி செய்து பல்வேறு மக்களுக்கும் பங்கிட்டு அளிக்கவேண்டியுள்ளது. சமுதாயம் இவற்றை எவ்வாறு தீர்மானிக்கின்றது என்பதைப் பொருளாதாரம் ஆராய்கின்றது. இது சாமுவேல்சன் வளர்ச்சி இலக்கணத்தின் பொதுவான இலக்கணமாகும்.

### ii. பேரிணப் பொருளாதார ஆய்வு (Macro Economic Analysis)

தேசிய வருமானம், தேசிய வருமானத்தை தீர்மானித்தல், வருமானம் வேலைவாய்ப்பு மற்றும் விலைகள் இவற்றிற்கிடையேயானத் தொடர்பு நிதி மற்றும் பணக்கொள்கை ஆகியன சாமுவேல்சனால் விளக்கப்படுகின்றது.

### iii. சிற்றினப் பொருளியல் ஆய்வு (Micro Economic Analysis)

இவரது நூலின் இரண்டாம் பகுதி சிற்றினப் பொருளியல் ஆய்வாக உள்ளது. இங்கு குறிப்பிட்ட பண்டங்களின் விலையை எவை தீர்மானிக்கின்றன என்பது ஆராயப்படுகின்றது.

### iv. வெளிப்படுத்துகை விருப்பத் தெரிவுக் கோட்பாடு (Revealed Preference theory)

சாமுவேல்சன் நுகர்வோர் நடவடிக்கையை விளக்க இக் கோட்பாட்டை தந்துள்ளார். சாமுவேல்சன் எண்ணளவுப் பயன்பாட்டு அணுகுமுறையை எதிர்க்கின்றார். தேவையின் உளவியல் ஆய்விற்குப் பதிலாக நடவடிக்கை ஆய்வாக இவரது கோட்பாடு அமைந்துள்ளது. இவரது கோட்பாட்டின்படி, நுகர்வோர் தனது விருப்பத்தில் பல்வேறு மாற்று வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் ஒரு குறிப்பிட்டவற்றின் மீது வெளிப்படுத்துகின்றனர். இவர் வலுவான வரிசைப்படுத்துதலை (Strong Ordering) நுகர்வோர் பயன்படுத்துவதாக அனுமானிகின்றார்.

### v. பெருக்கி, முடுக்கி இணைப்புச் செயல் (Multiplier Accelerator Interaction)

பெருக்கியும், முடுக்கியும் இணைந்து செயல்படுவதால் நாட்டில் பணவீக்கப்போக்கும் பணச்சுருக்க போக்கும் ஏற்படுகின்றது. இவரது இக்கருத்து மிகைப் பெருக்கி அல்லது பெருக்கி முடுக்கி இணைப்புச் செயல்தத்துவம் எனப்படுகின்றது.

### vi. புதிய நலப்பொருளாதாரம் (New Welfare Economics)

சாமுவேல்சன் நலப்பொருளாதாரத்தை விளக்க சமூக நலச்சார்பு (Social Welfare Function) என்ற கருத்தினை பயன்படுத்தினார். இதன்படி தனிநபர்களின் விருப்பங்களிலிருந்து சமூக விருப்பங்களை கண்டுபிடிக்கமுடியும். இதனை தன்னிச்சையாகவே செய்யலாம் அல்லது திட்டமிட்டப் பொருளாதாரமாய் இருந்தால் எதேச்சதிகாரமாக செய்யலாம். இவரது கருத்துப்படி பொருளாதாரமானது ஓர் அறநெறி கூறும் அறிவியலாக (Normative Science) இருக்க வேண்டும் என்கிறார்.

### சுருக்கம்

- ✓ 1915ல் பிறந்த சாமுவேல்சன் 1970ல் நோபல் பரிசுபெற்ற அமெரிக்கப் பொருளாதார மேதையாவார்.
- ✓ தற்போது அரசு மற்றும் அரசுத் துறைச்சாரா நிறுவனங்களின் நடவடிக்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.
- ✓ சாமுவேல்சனின் இலக்கணம் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ளதால் வளர்ச்சி இலக்கணம் எனக் கூறப்படுகின்றது.
- ✓ தேசிய வருமானம், தேசிய வருமானத்தை தீர்மானித்தல், வருமானம் வேலைவாய்ப்பு மற்றும் விலைகள் இவற்றிற்கிடையேயானத் தொடர்பு நிதி மற்றும் பணக்கொள்கை ஆகியன சாமுவேல்சனால் விளக்கப்படுகின்றது.
- ✓ இவரது நூலின் இரண்டாம் பகுதி சிற்றினப் பொருளியல் ஆய்வாக உள்ளது.

## பயிற்சி வினாக்கள்

1. சாமுவெல்சனின் பொருளாதார கருத்துக்களை ஆராய்க.

2. சாமுவெல்சனின் பொருளாதார பங்களிப்புக்களை விளக்குக.

## திறவுச் சொற்கள்

அரசு, இலக்கணம், பொருளாதார வளர்ச்சி, தேசிய வருமானம், விலைகள்

## உசாத்துணைகள்

Bhaitia, H.L. (1993). *History of Economic Thought.* Vicas Publishing House (PVT) Ltd, New Delhi.

Chang Lin, Terry Peach & Wang Fan. (2014). *The Histoy of Ancient Chinese Economics Thoughts.* Routledge.

Henry William Spiegel. (2002). *The growth of Economic Thoght.* 3rd Ed. Duke University Press, Durham & London.

Robinson. A *History of Economics. (e book).* Princeton University Press.

சந்திரசேகரன். எஸ். (2013). *பொருளாதார சிந்தனை வரலாறு,* பப்ளிஷர்ஸ்,யாழ்ப்பாணம்.